
ராணி முத்து
சித்ரா பாலசுப்ரமணியன்
ரூ.4
உறவுகள் ஒரு தொடர்கதை

# சொல்ல நினைப்பது...

**என்னைப் பற்றி...**

**எ**னது முதல் சிறுகதை 1988-ம் ஆண்டு, மார்ச் 20-ந் தேதி 'ராணி' வார இதழில் வெளிவந்தது.

மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டு நான் எழுதும் சிறுகதைகளுக்கு 'ராணி'யும், 'ராணிமுத்து'வும் இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வருவதற்கு இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும், பத்துக்கும் மேற்பட்ட நாவல்களும் எழுதியுள்ளேன். எனது நான்கு சிறுகதைகள் பரிசு பெற்றுள்ளன. இரண்டு டி.வி. தொடர்களுக்கு வசனகர்த்தாவாக பணியாற்றிய அனுபவம் உண்டு.

**கதையைப் பற்றி...**

தம்பதிகளிடையே விவாகரத்து என்பது அதிகமாகிவிட்ட இந்தக் காலத்தில், அதற்கான காரணம் என்னவென்று பார்த்தால்... முக்கியமாக இருப்பது அவர்களிடையே நிலவும் 'ஈகோ'தான்!

மகிழ்ச்சியாய் வாழ வேண்டிய திருமண வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட ரவி மற்றும் ராதாவின் வாழ்வில் நடைபெறும் சம்பவங்களும்... தாய்- தந்தை விவாகரத்தால், அவர்களின் குழந்தைகள் படும் வேதனையும் மற்றும் சுப்பிரமணியன்- ராஜலட்சுமி என்ற வயதான தம்பதிகளிடையே நிலவும் பாசப் பிணைப்பையும் வாசகர்களுக்கு ஒரு பாடமாக, அதே நேரத்தில் விறுவிறுப்பான திரைக்கதையுடன் கூடிய படம் போல இந்த நாவலில் சொல்லி உள்ளேன். முடிவு... எப்போதும் போல உங்களின் உள்ளத்தைத் தொடும்!

என்றும் அன்புடன்...

சித்ரா பாலசுப்ரமணியன்



# உறவுகள் ஒரு தொடர்கதை

சித்ரா பாலசுப்ரமணியன்





**1**

**செ**ன்னை தாம்பரத்தை அடுத்த புறநகர்ப் பகுதியில் மிகப் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்த அடுக்குமாடி

குடியிருப்பு வளாகம். உள்ளேயே உடற்பயிற்சிக் கூடம், நீச்சல் குளம், குழந்தைகள் காப்பகம், பலசரக்கு அங்காடி, இருபத்து நான்கு மணி நேரமும் பணியில் பாதுகாவலர்கள் என்று பலதரப்பட்ட வசதியுடன் நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்த அந்த வளாகத்தின் இரண்டாவது தளத்தில் மூன்றாம் எண் கொண்ட வீட்டில் வசிக்கிறான் ரவி.

தனித் தனி குளியலறை வசதியுடன் இரண்டு படுக்கை அறைகள். மிகப் பெரிய வரவேற்பறை, அழகிய சமையலறை. வெளிவாசலை வேடிக்கை பார்த்துக்கொண்டு காற்றோட்டமாய் உட்கார, சின்ன 'சிட் அவுட்' என அவ்வீடு ஆயிரத்து நூறு சதுர அடி பரப்பு கொண்டது.

மணி... பரபரப்பான காலை எட்டு!

"நான் ரெடிப்பா. வீட்டுச் சாவியையும் கையில் எடுத்துட்டேன். நீங்க இன்னும் கிளம்பலியா?"– பள்ளிக்கூடத்துக்கு கிளம்பிய உஷா, வீட்டு வாசற்கதவு அருகே நின்று எதையோ தேடிக்கொண்டிருந்த அப்பாவை அவசரப்படுத்தினாள்.

"இதோ... வந்துட்டேன்ம்மா. எப்போதும்போல இந்தக் கார் சாவியை எங்க வச்சேன்னு தெரியலை. தேடிக்கிட்டு இருக்கேன். நம்ம அவசரத்துக்கு கிடைக்க மாட்டேங்குது" என்று பொறுமையாய் பதில் சொன்னவன், திரும்பவும் கார் சாவியைத் தேட ஆரம்பித்தான். சில நிமிடங்கள் ஓடின...

"...ப்பா! இன்னும் கிடைக்கலையா?" வாசலில் இருந்து மறுபடி குரல் கொடுத்தாள் மகள்.

"எங்கே வச்சேன்னு சுத்தமா ஞாபகமே இல்ல"– ரவியும் தன் பொறுமையை இழந்து பதில் சொன்னான்.

"அலமாரியில இருந்தாலும் இருக்கும். பாருங்க"–உஷா சொல்ல...

ரவிக்கு மூளையில் பொறி தட்டியது!

அவசரமாய் அலமாரி அருகே போய், அங்கிருந்த தினசரி இதழ்களைத் தூக்கிப் பார்த்தான்.

கார் சாவி அமைதியாய் அங்கு உட்கார்ந்திருந்தது.

"ச்சே... ச்சே... வர வர ஞாபக மறதி அதிகமாயிடுச்சு. தியானம் பண்ணினா ஞாபக சக்தி கூடுமாம். ஆனா, அதுக்கு நேரம்



கிடைக்க மாட்டேங்குது. என்ன பண்றது? சென்னை வாழ்க்கையே இயந்திரத்தனமானது" என்றவாறே தனது சாப்பாட்டு பையையும் எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தான்.

கதவைப் பூட்டிவிட்டு, உஷாவுடன் 'லிப்ட்' மூலம் கீழ்த்தளம் வந்து 'கார் பார்க்கிங்' செய்திருந்த இடத்துக்கு விரைந்தான்.

காலை வெயில் சுட்டெரித்தது. ரவி தன் கைக்குட்டையை எடுத்து, உஷா முகத்தில் வழிந்த வியர்வையை துடைத்தான்.

கார் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்தவன், முதல் வேலையாய் 'ஏ.சி.'யை 'ஆன்' செய்தான். உஷா தான் சுமந்து வந்த புத்தக மூட்டையை காரின் பின் இருக்கையில் வைத்துவிட்டு, முன் பக்கம் வந்து அமர்ந்தாள்.

கார், குடியிருப்பு வளாகத்தைவிட்டு மெதுவாக வெளியே வந்து, நெரிசல் மிகுந்த பிரதான சாலையில் மிதக்க ஆரம்பித்தது.

சில நாட்களாக தன் மனதில் உறுத்திக்கொண்டிருந்த கேள்வியைத் தன் மகளிடம் கேட்டுவிடலாமா? என்று யோசித்தபடியே காரை ஓட்டினான்.

'சிக்னலில்' கார் நின்றது.

உஷாவைப் பார்த்தான். இன்னும் பால் முகம் மாறவில்லை.

ஒரு முறை தொண்டையை கனைத்துக்கொண்டான்.

"உஷா"– மெல்லிய குரலில் கூப்பிட்டான்.

பக்கவாட்டு கண்ணாடி வழியாக ரோட்டை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவள், அப்பா கூப்பிட்டது காதில் விழுந்ததும் தலையைத் திருப்பி, "என்னப்பா" என்றாள்.

"ம்... உண்மையிலேயே என்னை... அதான் இந்த அப்பாவை உனக்கு பிடிச்சிருக்கா?"– தயங்கியபடி வார்த்தைகளை உதிர்த்தான்.

அவள் வியப்பாய் பார்த்தாள். சில விநாடிகள் அமைதியாய் தன் மனதுக்குள்ளேயே அப்பா கேட்ட கேள்வியை சொல்லிப் பார்த்துக்கொண்டாள்.

'அப்பாவுக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி திடீர்னு ஒரு அர்த்தம் இல்லாத கேள்வியை கேட்டார்?' என்று யோசித்தவள், "என்ன கேள்வி இது? எந்தக் குழந்தைக்காவது, தன் அப்பாவை பிடிக்காம இருக்குமா?" என்றாள்.

"ம்... ஆனா நான் என்ன கேக்க வந்தேன்னா...?" என்று

நிறுத்தியவன், "இப்ப நீ சின்னக் குழந்தை இல்ல. பதினாறு வயசு முடிஞ்சுப் போச்சு. 'பிளஸ் டூ' படிக்கிற. உலகம்ன்னா என்னன்னு இப்ப உனக்கும் தெரியும். அதனால உன்கிட்ட இன்னொரு கேள்வி கேக்கணும்."

சொல்லிவிட்டு மகளின் முகத்தை தீர்க்கமாய் பார்த்தான்.

"தாராளமா கேளுங்கப்பா"– சொன்னவள், விநோதமாய் ஏறிட்டாள்.

'எந்தக் குழந்தைக்கும் அம்மா மேல தனிப்பாசம் இருக்கும். இவளும் ஒருவேளை தன் அம்மாவை நினைத்து ஏங்குவாளோ?' என்று சந்தேகப்பட்டவன், "அம்மா உன்கூட இல்லேங்கிற வருத்தம் ஏதாவது இருக்கா?"–தயங்கியபடி கேட்டான்.

அப்பாவுக்கு எந்த பதில் சொன்னால் பிடிக்கும் என்று உஷாவால் சட்டென்று யூகிக்க முடிந்தது.

"கொஞ்சங்கூட இல்லப்பா! நீங்கதான் எனக்கு எந்த குறையும் இல்லாம கவனிச்சுக்கிறீங்களே?" என்றாள்.

தான் எதிர்பார்த்த பதிலை உஷா சொன்னதும், ரவிக்கு நிம்மதியாக இருந்தது. ஆனால் உஷாவுக்கோ, அம்மாவைப் பற்றி பேசியதும் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

அதனை வெளிக்காட்டிக்கொள்ளாமல், சிரித்தபடி.... பள்ளிக்கூட நிகழ்ச்சிகள்– கிரிக்கெட் என்று பல பொதுவான விஷயங்களை அப்பாவுடன் பேசினாள்.

பள்ளிக்கூட வாசலில் காரை நிறுத்தினான். கதவைத் திறந்துகொண்டு இறங்கிய உஷா, புத்தக மூட்டையை தோளில் சுமந்தாள்.

சற்று குனிந்து, 'அப்பா... வர்றேன்ப்பா' என்று சொல்லிவிட்டு 'மளமள'வென்று நடக்க ஆரம்பித்தாள்.

தன் மகள் செல்வதைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

பச்சை நிற சீருடையில் நடந்துபோனவளின் கூந்தலை கூர்மையாய் கவனித்தான். 'சரியாய்த்தான் பின்னி இருக்கோம்' என்று பெருமிதம் அடைந்தான்.

'உஷா... அப்படியே உருவத்தில் அவள் அம்மா ராதாவை உரித்து வைத்திருக்கிறாள். அவளின் உடல்வாகு, கண்களால் குறுகுறுவென பார்ப்பது, மூக்கு, நடப்பது, பேசுவது என எல்லாமே ராதா மாதிரிதான்!

ஆனால், உஷாவிடம் இருக்கும் பொறுமை, பாசம், அதிர்ந்து பேசாத தன்மை, அளவான பேச்சு, பெரியவர்களிடத்தில் காட்டும் மரியாதை– இந்த குணங்கள் எதுவுமே ராதாவிடம் இருந்ததில்லை.

எடுத்தவுடன் 'தான்' என்ற அகங்காரத்துடன் மற்றவர்களை தூக்கி எறிந்து பேசுவதுதான் அவளின் வழக்கம். உஷாவை நல்ல பொண்ணா, முன்னுதாரணமா வளர்த்திருக்கேன்னா அதற்கு முழுக்க முழுக்க காரணம் நான்...!

ஒருநாள் ராதா இவளைப் பார்த்து பெருமைப்படலாம். ஆனா, தான் செஞ்ச தப்பை கண்டிப்பா அன்னிக்கு உணர்வா. ம்... அவ தன் தப்பை உணர்ந்தா என்ன... உணராட்டா என்ன?'

புள்ளியாய் மறையும் வரை மகளைப் பார்த்துவிட்டு, தன் காரில் அலுவலகத்துக்கு கிளம்பினான்.

'உஷாவுக்கு அப்பாவாக மட்டும் இல்லாமல், ஒரு அம்மாவாகவும் இருந்து எந்தக் குறையும் இல்லாமல் வளர்த்து இருக்கேனே... அது எவ்வளவு பெரிய விஷயம்? நாளைக்கு அவள் கல்யாணமாகி புகுந்த வீட்டுக்குப் போயிட்டா... பாசத்தைக் கொட்டி வளர்த்த என்னை மறந்துடுவாளா? அவ என்னோட செல்லப் பொண்ணு. என் உயிர். அவ இல்லாம என்னால தனியா வாழ முடியுமா?'

நினைத்த மாத்திரத்தில் இதயம் இறுகியது!

'கிட்டத்தட்ட எட்டு வருசமா யாரோட உதவியும் இல்லாம தனி ஆளா அவளை வளர்த்தாச்சு. சின்னப்பொண்ணா இருந்தப்ப, ஒரு நாள் என்னைவிட்டுப் போயிடுவாங்கற எண்ணம் துளிகூட மனசுல வரல. ஆனா, அவ வளர வளர... இன்னும் எத்தனை வருசம் என்கூட இருக்கப் போறாங்கற பயம், கவலை வர ஆரம்பிச்சுடுச்சு. இது என்னோட சுயநலத்துல ஏற்பட்ட பயமா? தெரியல. எது எப்படியோ... அவளோட குணத்துக்கு ஏத்த மாதிரி நல்ல பையன் கணவனா வரணும்.

இருந்தாலும் கல்யாணங்கிற விஷயம், கணவன்–மனைவிங்கிற உறவு எதுவுமே நம்ம கையில இல்ல. ராதாவை இருபத்து மூணு வருசத்துக்கு முன்னாடி எத்தனை கனவுகளோடும், கற்பனைகளோடும் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்! ஆனா அதுக்கப்புறம் என் வாழ்க்கையில நடந்தது என்ன?'

ரவிக்கு திரும்பத் திரும்ப ராதா மற்றும் மகளின் ஞாபகங்கள் வந்து வந்து போயின.

அலுவலகத்தின் வாசலில் காரை நிறுத்திவிட்டு, தன்னுடைய சாப்பாட்டுப் பையை எடுத்துக்கொண்டான்.

“அப்பா... உங்களுக்கும் வயசு அம்பதை தாண்டப் போகுது. அடிக்கடி வெளியில சாப்பிட்டா உடம்புக்கு ஒத்துக்குமா? வெளியில சாப்பிடறதை கொஞ்சம் கொஞ்சமா குறைச்சுக்குங்க. இன்னிக்கு சின்ன வெங்காய சாம்பார் வச்சிருக்கேன். சாப்பிட்டுப் பாருங்க. உங்க அலுவலகமே ‘கமகம’ன்னு மணக்கும்”– உஷா, வீட்டில் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன.

‘இந்த பதினாறு வயசுலேயே நான் சமைக்கிறதை பக்கத்துல நின்னு கவனிச்சு, அவளும் நல்லா சமைக்க கத்துக்கிட்டா. கிரேட்... கிரேட்’– மகளை மனதில் பாராட்டினான்.

அலுவலகத்துக்குள் நுழைந்தான். பலரும் வணக்கம் சொல்ல, அவனும் பதிலுக்கு வணக்கம் சொல்லியபடி, ‘ரவி–மேலாளர்’ என்று பெயர்ப் பலகை தொங்கிய கண்ணாடி அறைக்குள் நுழைந்து, இருக்கையில் அமர்ந்து தன்னை ஒரு நிமிடம் ஆசுவாசப்படுத்திக்கொண்டான்.

அன்பில்லாத ராதாவுடன் குடும்பம் நடத்திய நினைவுகளை மறந்துவிட்டு, அலுவலகப் பணியில் மூழ்கினான்.

## 2

மதியம் ஒரு மணி. வெயில் உச்சத்தைத் தொட்டிருந்தது.

கல்லூரி வாசலில் தன் மகன் விவேக்குக்காக காரில் காத்திருந்த ராதா, அலைபேசியில் அவனை அழைத்தாள்.

காலை வகுப்பு முடிந்து வெளியே வந்த விவேக், போனை எடுத்து, “என்னம்மா?” என்றான்.

“டேய்... நான் உன் கல்லூரி வாசலுக்கு வந்திருக்கேன். வெளியில வந்து சாப்பாட்டு பையை வாங்கிட்டுப் போ.”

“என்னம்மா இது! எதுக்கு ‘டிபன் பாக்ஸை’ தூக்கிக்கிட்டு இந்த வெயில் நேரத்துல வர்ற? என் கையில காசு இருக்கு. என்ன வேணுமோ, அதை கல்லூரி ‘கேன்டீன்’ல வாங்கிச் சாப்பிட்டுக்கிறேன்.”

“டேய்... தினம் அப்படி சாப்பிட்டா உடம்பு கெட்டுப்



# வாழ்ந்து பார்க்கலாம் ... வா!

எலும்பு– தோல்
போர்த்திய உடம்பு
என்னவெல்லாம் கேட்கின்றது;
எண் சாணே வரம்பு...

அது
என்னென்ன ஆட்டம்
ஆடுகின்றது?



இதயம் மட்டும்
இயங்காமல் போனால்
‘அவர்’
‘அது’ என்றாகி
அப்புறம்
அப்புறப்படுத்தப்படும்...
‘ஏதோவொன்றாய்’
ஆகிவிடும்!

ஆனாலும்
தேவைகளில் வாழுகிற
தேடல்களின் குணம்



நேற்று அது–
இன்று இது
நாளை வெறொன்று
நாளை மறுநாள்
மற்றொன்று...

மாறுகின்ற தேவைகளுக்கு
திசைகளை
மாற்றுகின்ற மாற்றம்
நிகழ்ந்தே தீரும்
அடிக்கடி
புதுப்பித்தல் இல்லாவிடின்



முகவரிகள் இருக்கும்
பத்திரமாய்–
முகங்கள் மறந்திருக்கும்
பழசுகளாய்..,

மாறாக இருந்தாலும்
மாற்றங்களை ஏற்றுக்கொள்ளல்
மானுட விதி!

உணர்ச்சியின்
உந்துதல் தவிர்த்து – உனக்குள்
உனக்கான
உண்மைத் தேடு
உன்னைத் தேடு;

புன்னகையை விதைத்து
விரோதத்தை வெற்றிகொள்
கவலைப் பொதிகளை
கழுதையாய் சுமக்காதே
எவரின் கவலையும்
நிறுத்தாது
பூமியின் இயக்கத்தை!



மணித்துளி ஒவ்வொன்றிலும்
மகிழ்ச்சிஉண்டு...
வாழ்க்கை கரைந்துவிடுவதில்லை
கவலைகளுடன்!

‘அமரர்’ ஆகும் பெருமை
எந்த நொடியிலும் அரங்கேறலாம்...
அதுவரை
வாழ்ந்து பார்க்கலாம்... வா!!

–நாஞ்சில் யோமாசேகர்

# இதயம் பேசுகிறது

## திரில்... திக் திக்... தித்திப்பு

ராஜேஷ்குமார் கைவண்ணத்தில் 'தீ... தீபா... தீபாவளி', ஸ்ரீஜா வெங்கடேஷ் எழுதிய 'பூக்கள் விடும் தூது' இரட்டை நாவல் அசத்தல்!



**– வி.எஸ்.மோகன்,**
**மதுரை.**



தீபாவளிப் பரிசாக அமைந்தது இரட்டை நாவல்.

**–பிருந்தா ரமணி,**
**மதுரை.**

'ஆக்ஷன்' அதிரடியாய் ஒன்றும், மென்மையான காதல் கதையாய் மற்றொன்றும் இருந்தது. மொத்தத்தில் இரட்டிப்பு பரவசம்.

**–மல்லிகா அன்பழகன்,**
**சென்னை.**

ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒரு மர்ம முடிச்சைப் போட்டு, அதை லாவகமாக அவிழ்த்த விதம் 'திக்... திக்' ரகம்.

**–ச.கிறிஸ்து ஞான வள்ளுவன்,**
**வேம்பார்.**

இரண்டு கதைகளிலும் உயிரோட்டம் நிறைந்திருந்தது.

**–யு.கே.ராஜேந்திரன்,**
**உத்திரமேரூர்.**

'திரில்... திக் திக்... தித்திப்பு' என இருந்தது.

**–ஜி.பிரேமா, கிழக்கு தாம்பரம்.**

என்றென்றும் 'கிரைம் மன்னன்'தான் என மீண்டும் நிரூபித்திருக்கிறார் ராஜேஷ்குமார்.

**–சௌந்தர்யா ராஜேந்திரன்,**
**தொழுதூர்.**

தலைப்புகளுக்கு ஏற்றபடி மாறுபட்ட ரசனையுடன் புதுமையாகப் படைக்கப்பட்டிருந்தன.

**–இரா.வளையாபதி,**
**தோட்டக்குறிச்சி.**

பரிமளா ராஜேந்திரனின் 'திருநாள்' சிறுகதை, வீட்டு வேலை செய்வோரை இழிவாக நடத்துவோருக்கு நல்ல படிப்பினை.

**–கோ.செயப்பிரகாக, தேவாரம்.**

உங்கள் கருத்துகளை
அனுப்ப வேண்டிய முகவரி:

**இதயம் பேசுகிறது,**
**'ராணி முத்து',**
**சென்னை– 600 007.**



போயிடும்டா"–ராதா கவலையுடனும், பாசத்துடனும் பேசினாள்.

"அம்மா... காலையில நீ ஆபீசுக்கு கிளம்பிப் போனே. மத்தியானம் கிடைக்கிற கொஞ்ச ஓய்வு நேரத்துல காரை எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போயிட்டு 'டிபன் பாக்ஸை' தூக்கிக்கிட்டு வந்து என்கிட்ட கொடுக்கணுமா? இப்ப திரும்பவும் ஆபீஸ் போய் உங்க வேலையைப் பார்க்கணும் இல்ல... எதுக்கு இந்த வீண் சிரமம்?"– அம்மா மீது இரக்கம் கொண்டு கேட்டான்.

"எதுடா சிரமம்... ஒரு அம்மா தன் மகனுக்கு சாப்பாடு எடுத்துட்டு வந்து கொடுக்கிறதா? நிச்சயமா இது சிரமம் இல்ல; ம்... என்ன பண்றது? இன்னிக்கு காலையில நம்ம வீட்டுக்கு சமையல்காரி கொஞ்சம் நேரம் கழிச்சு வந்துட்டா. அவளோட குழந்தைக்கு ஏதோ உடம்பு சரியில்லையாம். நீ இன்னிக்குன்னு பார்த்து, கொஞ்சம் சீக்கிரமா கல்லூரிக்கு கிளம்பி போயிட்டே. உனக்கு மத்தியான சாப்பாட்டைக் கட்டிக் கொடுக்கலேன்னு என் மனசு எப்படி தவியா தவிச்சுது தெரியுமா? அப்புறம் ஆபீசுக்கு, வீட்டுக்கு, கல்லூரிக்கு நானா அலையறேன்? நம்ம கார்தானே என்னை அங்கேயும் இங்கேயும் கொண்டுக்கிட்டு அலையுது."

விவேக்கும், அலைபேசியில் அம்மாவுடன் பேசிக்கொண்டே கல்லூரி 'காம்பவுண்டை'க் கடந்து வெளி வாசலுக்கு வந்திருந்தான்.

அம்மா காரில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தவன், போனை அணைத்துவிட்டு நடந்தான்.

ராதாவும் தன் மகனை கவனித்துவிட்டு, காரில் இருந்து சாப்பாட்டு பையுடன் இறங்கினாள். விவேக் அதை வாங்கிக்கொண்டான்.

"டேய்... சாயங்காலம் சீக்கிரம் வந்துடு."

அம்மா சொன்னதைக் கேட்டதும் சிரித்தான்.

அவள் வியப்புடன் மகனைப் பார்த்தாள்.

"எதுக்குடா சிரிக்கிற?"– புரியாமல் கேட்டாள்.

"பின்ன என்னம்மா... நான் தினம் கல்லூரியில் இருந்து சீக்கிரமா வீட்டுக்கு வந்துடறேன். நீதான் எப்பப் பார்த்தாலும் உன் ஆபீஸ் பணியை காரணம் சொல்லி நேரம் கழிச்சி வீட்டுக்கு வருவ. நான்தான், 'நீ எப்ப வருவ... எப்ப வருவே?'ன்னு காத்துக்கிட்டு கிடப்பேன்."

"டேய்! என்ன பண்றது? ஆபீஸ்ல என்னுடைய பதவியும், அதனுடைய பொறுப்பும் அப்படி. மணி அஞ்சாச்சுன்னா 'டாண்'ன்னு

பையைத் தூக்கிக்கிட்டு என்னால வீட்டுக்கு வந்துட முடியாது. இழே உள்ளவங்க அத்தனை பேரும் அன்றைக்கான வேலையை முடிச்சிட்டு கிளம்பிடலாம். ஆனா, மறுநாளைக்கு என்ன பணி நடக்கணும்... எதுக்கு முக்கியத்துவம் கொடுத்து முடிக்கணும்னு முன்னாடியே நான் முடிவு பண்ணனும். இந்த மாத உற்பத்தி அளவை எப்படி எட்டுறதுன்னு திட்டம் போடணும். எனக்கு பொறுப்பு கூடப்பா. ம்... சரி, அதை விடு. வெயில் அதிகமா இருக்கு. மணி ஆச்சு. உனக்கும் பசிக்கும். போய் முதல்ல சாப்பிடு. நான் வரேன்."

"சரிம்மா"– விவேக் விடைபெற்றுக்கொண்டு சாப்பாட்டு பையுடன் கல்லூரிக்குள் போனான்.

ராதா அவனை உன்னிப்பாக பார்த்தாள்.

விவேக், சாயலில் அப்படியே தன் அப்பாவை உரித்து வைத்திருக்கிறான். உடல்வாகு, நடை, பேச்சு, முக சாயல் எல்லாமே ரவிதான். ஆனால், குணம் மாசு குறையாத தங்கத்துக்கு சமானம். இவனுக்கு அசாத்திய பொறுமை– இரக்கக்குணம் உண்டு. அவன் அப்பாவு நேர் எதிர்.

'என்னிக்காவது ரவி என்னைப் புரிஞ்சுகிட்டு நடந்திருக்காறா?

ஆனா, என் மகனை ஒரு நல்ல பிள்ளையா– மத்தவங்க பாராட்டும்படி வளர்த்திருக்கேன். அவன் வாழ்க்கையில மகிழ்ச்சியா இருப்பான். விவேக் வளர வளரத்தான் ரவிக்கு என்னுடைய இழப்பும், மகனுடைய இழப்பும் புரியும்.

கல்யாணத்துக்கு முன்னாடியே ரவியைப் பார்த்த என் தோழிகள் நந்திதா, ரமா எல்லாருமே சொன்னாங்க... 'ஏய் உன்னோட அழகு, பதவி, சம்பளம்... எல்லாத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தா அந்த அந்தஸ்துக்கு ரவி கொஞ்சம்கூட பொருத்தம் கிடையாது. அவசரப்படாதே. கொஞ்சம் யோசி'ன்னு சொன்னாங்க. நான்தான் அவங்க சொன்னதை பெரிசா எடுத்துக்கல. அப்பா– அம்மா சொன்னபடி நடந்துக்கிட்டேன்.

முதலிரவிலே தெரிஞ்சது... ரவிக்கு தாழ்வு மனப்பான்மை இருக்குன்னு. 'வேலையை விட்டுடு'ன்னு சொன்னான். அதுதான் எங்களுடைய பிரிவுக்கு முதல் ஆரம்பம்.

அந்த ஆளுக்குத்தான் நாளைக்கு துணைக்குன்னு யாருமே கிடையாது. உஷா கல்யாணமாகி புகுந்த வீட்டுக்கு போயிட்டா தனி மரம். பட்டுப்போன மாதிரி மனசு உடைஞ்சு நிக்கணும்!



ஆனா, நான் கடைசிவரைக்கும் என் மகனோடு சந்தோஷமா இருக்க முடியும். ஒருவேளை வர்ற மருமக, விவேக்கை என்கிட்டே இருந்து பிரிச்சுட்டா?'

நினைத்த மாத்திரத்தில் அவளுக்கு வியர்த்தது.

'கடவுளே... விவேக்குக்கு ஒரு நல்ல பொண்ணு மனைவியா வரணும். அவன் ரொம்ப நல்லவன்...'

மகன் புள்ளியாய் மறையும் வரை அவனைப் பார்த்துவிட்டு, அலுவலகத்துக்கு காரில் கிளம்பினாள்.

'பார்க்கிங்' பகுதியில் காரை நிறுத்திவிட்டு, அலுவலகத்துக்குள் நுழைந்தவள், 'ராதா –பொது மேலாளர்' என்ற பெயர்ப் பலகை தொங்கிய கண்ணாடி அறைக்குள் நுழைந்து, 'அம்மாடா...' என்று பெருமூச்சு விட்டாள்.

'ரவி... என் வாழ்க்கையில் அவசரப்பட்டு எடுத்ததன் முடிவு. ரவியுடன் நடந்த என் கல்யாணம் எனக்கு மிகப்பெரிய கறையை ஏற்படுத்திவிட்டது.

ரவியை முழுமையாக மறக்க வேண்டும். ஏதாவது ஒரு வடிவத்தில் ரவியின் ஞாபகம் என்னை நிம்மதி இல்லாமல் துரத்திக்கொண்டே இருக்கிறது. அவனையே வேண்டாம் என்று தூக்கி எறிந்துவிட்ட பின் அவனது ஞாபகங்கள் மட்டும் ஏன் என்னை துரத்தி வருகிறது?'

மனசை இன்னும் கல்லாக்கிக்கொள்ள பழக வேண்டும். அப்படிப்பட்ட நிம்மதியான நாள் வெகுதூரத்தில் இல்லை.

மேசை மீது இருந்த 'பேப்பர் வெயிட்'டை அப்படியும், இப்படியுமாக தன் கையால் சுழற்றிக்கொண்டிருந்தாள்.

ராதாவின் மனசும் அதைப் போல சுழன்று தவித்தது.

"டக்... டக்... டக்..."

'கேபின்' கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்க, ராதா தலையை நிமிர்த்திப் பார்த்தாள்.

சுப்பிரமணியம் நின்றுகொண்டிருந்தார்.

"வாங்க"– தலையாட்டி கூப்பிட்டாள்.

கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு பவ்வியமாய் உள்ளே வந்து தன் உயர் அதிகாரி முன் தயக்கத்துடன் நின்றார்.

"ம்... சுப்பிரமணியம் சார், முதல்ல ஒக்காருங்க."

சுப்பிரமணியம் ராதாவைவிட குறைந்த பதவியில் இருந்தபோதிலும்,

தன்னைவிட மிகுந்த வயதானவர் என்பதால் அவரை 'சார்' என்று சேர்த்து அழைத்தாள்.

அவர், ராதாவின் எதிரில் போடப்பட்டிருந்த நாற்காலியில் குறுகிக்கொண்டு மரியாதையுடன் உட்கார்ந்தார்.

"சார்... மும்பைக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை 'டைப்' பண்ணிட்டீங்களா? இன்னும் என் பார்வைக்கு வரலையே?"

"மேடம்! 'டைப்' பண்ணி உதவி மேலாளர் மேசைக்கு போயாச்சு. அடுத்து உங்ககிட்ட வந்துடும்."

"ஓ... குட்."

"மேடம்... வந்து" என்று தான் சொல்ல வந்த விஷயத்தைச் சட்டென்று சொல்ல தயங்கினார்.

"ம்... சார். நானே உங்களை கூப்பிட்டுப் பேசணும்னு நினைச்சேன். நீங்களே என் அறைக்கு வந்துட்டீங்க. நல்லதாப் போச்சு."

"என்ன மேடம்?"

"வர்ற சனிக்கிழமை பெங்களூர் ஆபீசில் இருந்து நம்ம சேமிப்புக்கூடத்துல இருக்கிற கொள்முதல் சரியா இருக்கான்னு பார்க்கிறதுக்கு ரெண்டு உயர் அதிகாரிகள் வர்றாங்க. நீங்கதான் அவங்கக்கூட இருந்து..." என்று ராதா வார்த்தைகளை முடிப்பதற்கு முன், தான் எதற்காக இங்கு வந்திருக்கிறோமோ அது முடியாமல் போய்விடுமோ என்று பயந்தவர்,

"மேடம்... ஒரு நிமிஷம்" என்று தடுத்துப் பேசினார்.

"என்ன சார்?"

"மேடம்... ஸாரி. தப்பா நினைச்சுக்காதீங்க. வர்ற சனிக்கிழமை எனக்கு விடுமுறை வேணும். அதைச் சொல்லிட்டு, அனுமதி வாங்கலாம்ன்னுதான் உங்க அறைக்கு வந்தேன்."

"ஏதாவது அவசர வேலையா?"– புருவங்களை உயர்த்திக் கேட்டாள்.

"வந்து..."– சுப்பிரமணியம் திரும்ப சொல்வதற்கு தயங்கினார்.

"சொல்லுங்க... என்ன விஷயம்?"

"வர்ற சனிக்கிழமை என் மனைவிக்கு பொறந்தநாள்...

"அதனால?"– கண்களை குறுக்கிக் கேட்டாள்.

"அவளைக் கூட்டிக்கிட்டு கோவிலுக்குப் போய் அர்ச்சனை



பண்ணணும். அப்புறம் அப்படியே ஓட்டல்ல சாப்பிடணும்.

சுப்பிரமணியம் சொன்னதும், ராதாவின் முகம் புன்னகைக்கு மாறியது!

"சார்... நான் உங்க தனிப்பட்ட விஷயத்தைப் பத்திக் கேக்கலாமா?"

"என்ன மேடம்... இப்படி யோசிக்கிறீங்க? தாராளமா கேக்கலாம்."

"உங்க வயசு என்ன?"

"அம்பத்தாறு"– பதில் சொன்ன சுப்பிரமணியம், பொது மேலாளர் தன்னிடம் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று யோசித்தார்.

"ம்... உங்க மனைவிக்கு?"

"அம்பது!"

"ஓ... எப்ப கல்யாணமாச்சு?"

"என்னோட முப்பத்து ரெண்டு வயசுல. திருச்செந்தூர்ல வச்சு."

"ஓ... கல்யாணம் ஆனதுலேருந்தே உங்க மனைவியோட பொறந்தநாளை கொண்டாடுறீங்களா?"

"ஆமா மேடம். என் பொறந்தநாள் முக்கியமில்ல. ஆனா, என் மனைவி ராஜலட்சுமி பொறந்தநாளை மறக்க மாட்டேன். அவ வந்தப்புறம்தான் எனக்கு சமூகத்துல– குடும்பத்துல மதிப்பும், மரியாதையும் கிடைச்சது. அவதான் மேடம் என் வாழ்க்கையில எல்லாம்.

எனக்கு ஒரு காய்ச்சல்னாகூட அவளால பொறுத்துக்க முடியாது. கோவில் கோவிலா அங்கபிரதட்சணம்னு கிளம்பிடுவா. அவளுக்கு நான்தான் எல்லாம்ன்னு நினைக்கிறா. எனக்காகப் பொறந்த அவளுக்காக ஒரு நாளை நான் ஒதுக்கணும் மேடம்"– சுப்பிரமணியம் சொல்லச் சொல்ல ராதா வியப்பாக பார்த்தாள்.

அவளுக்கு பழைய ஞாபகங்கள் வந்தன.

"ராதா."

"ம்..."

"எனக்கு காய்ச்சலா இருக்கு. ஆபீசுக்கு லீவு போடேன்."

"உங்களுக்கு காய்ச்சல்னா நான் எதுக்கு லீவு போடணும்?

ஆட்டோ பிடிச்சு டாக்டர்கிட்ட போயிட்டு வாங்க. சமையல்காரி இன்னும் கொஞ்ச நேரத்துல வருவா. கஞ்சி வச்சித் தரச் சொல்லுங்க. உங்களுக்கு காய்ச்சல்னா மேனேஜர் பதவியில இருக்கிற நான் பொறுப்பில்லாம விடுப்பு எடுத்துகிட்டு வீட்ல ஒக்காரணுமா?"

தான் கணவன் ரவியைக் கேட்டது மனதில் நிழலாடியது.

சுப்பிரமணியத்தை நினைத்து சந்தோஷமாகவும், பொறாமையாகவும் இருந்தது.

"சார்... சனிக்கிழமை நீங்க தாராளமா லீவு எடுத்துக்கலாம். நான் சுந்தரத்தை வச்சு வேலைகளை முடிச்சிக்கறேன்."

"தேங்க்ஸ் மேடம்"– இருக்கையில் இருந்து எழுந்து விடைபெற்றார்.

"சுப்பிரமணியம் சார்..."

"யெஸ் மேடம்".

"உங்க மனைவிக்கு என்னுடைய வாழ்த்துகளை சொல்லிடுங்க."

"நிச்சயமா மேடம். தேங்க்ஸ்"– சுப்பிரமணியம் புன்னகைத்தார்.

அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார்.

சுப்பிரமணியம் தன் மனைவி மீது வைத்திருக்கும் அன்பை நினைத்த ராதாவுக்கு,

'தனக்கு இப்படியொரு அன்பு, கணவனிடம் இருந்து கிடைக்காமல் போய்விட்டதே!' என்று வேதனையாக இருந்தது.

## 3

சனிக்கிழமை...

விவேக்குக்கு கல்லூரி விடுமுறை என்பதால் அயர்ந்து தூங்கினான்.

ராதா, மளமளவென்று குளித்து– உடை மாற்றி, நேரம் பார்த்தாள். கடிகாரத்தில் சின்ன முள் எட்டையும், பெரிய முள் பன்னிரண்டையும் தொட்டிருந்தது.

படுக்கை அறைக்கு போய் விவேக்கை எழுப்பினாள்.

"என்னம்மா?"– கண்களைத் திறக்காமல் கேட்டான்.



"டேய்... நான் வேலைக்கு கிளம்பியாச்சு. இன்னிக்கு பெங்களூரில் இருந்து அதிகாரிகள் வர்றாங்க. சீக்கிரமா போகணும்."

"சரிம்மா. நீ கிளம்பு."

"ஜாக்கிரதைடா."

"சரிம்மா... பாதி தூக்கத்துல எழுப்பாதே"– முணங்கினான்.

"சரிடா"–சொன்ன ராதா, சமையல் அறைக்கு வந்து சமையல்காரியிடம் பேசிவிட்டு காரில் விரைந்தாள்.

அலுவலகத்துக்கு போனதும் முதல் வேலையாக சுந்தரத்தைக் கூப்பிட்டு, "இன்றைக்கு சுப்பிரமணியம் சார் விடுமுறை. அவரோட வேலைகளை கவனிச்சுக்கங்க" என்று கட்டளையிட்டாள்.

தன் பணியில் மூழ்கிப் போனாள்.

★★★

மணி காலை ஒன்பதை தாண்டியது.

விவேக் படுக்கையில் புரண்டபோது, தலையணை அருகில் இருந்த செல்பேசி அழைத்தது.

'யாரது?' என்று பார்த்தான்.

"உஷா" என்ற எழுத்துகள் திரையில் மின்னின.

போனை 'ஆன்' செய்து "ஹலோ" என்றான்.

"குட்மார்னிங் அண்ணா... தூங்கி எழுந்துட்டியா?"

கொட்டாவி விட்டுக்கொண்டே, படுக்கையில் இருந்து எழுந்தவன்,

"குட்மார்னிங். தூங்கி எழுந்தாச்சு" என்றான்.

"அண்ணா."

"ம்... சொல்லு."

"இப்பத்தான் அப்பா, ஆபீஸ் கிளம்பிப் போனார். உடனே உனக்கு போன் பண்ணிட்டேன். பக்கத்துல அம்மா இருக்காங்களா?"

"இல்ல... அம்மாவும் கிளம்பிப் போயாச்சு."

"ஓ! அண்ணா... நாம ரெண்டு பேரும் சந்திச்சு ஒரு மாசத்துக்கு மேல ஆகுது. எனக்கு என்னன்னு தெரியலை. நேற்றையில இருந்தே உன்னை பார்க்கணும்னு மனசுல ஆசை. இன்னிக்கு சந்திக்கலாமா?"– ஆர்வமாகக் கேட்டாள்.

"ஓ... தாராளமா உஷா."

"எங்க சந்திக்கலாம். கடற்கரையில?"

"வேண்டாம்."

"ம்... அப்ப ஓட்டலல்ல?"

"வேணாம்."

"ம்... அண்ணா! அப்ப நீயே இடத்தைச் சொல்லு. நான் 'டாண்'ணு அங்க வந்துடுறேன்."

விவேக் சில விநாடிகள் யோசித்தான்.

"புத்தகக் கண்காட்சி நடக்குதே. அங்க போலாமா?"

"ஓ... நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து சொல்லி இருக்கேண்ணா. நானே ஒருநாள் போய் புத்தகமெல்லாம் வாங்கணும்னு நினைச்சேன். சாயங்காலம் அஞ்சு மணிக்கு நான் வந்துடுவேன். சரியா?"

"ம்... சரி. நானும் வந்துடுறேன்."

"அண்ணா... அம்மாவைக் கூட்டிக்கிட்டு வந்துடாதே!"

உஷா சொன்னதும் சிரித்தான்.

"சரியா சொன்னே. நான், அம்மாவைக் கூட்டிக்கிட்டு வரக்கூடாது... அதே மாதிரி நீ, அப்பாவைக் கூட்டிட்டு வரக்கூடாது. அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் சந்திச்சிட்டா கீரி, பாம்புக் கதையாத்தான் இருக்கும். சரி... போனை வச்சுடட்டுமா?"

"சரிண்ணா."

★★★

**மா**லை 4.45.

உஷா, கலைக் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான புத்தக கண்காட்சிக்குள் நுழைந்தாள்.

இருபுறமும் பாரதியார், பாரதிதாசன் பெயரில் அரங்கங்கள்.

பிரபல எழுத்தாளர்கள் பேசினர்.

"புத்தகம் படிப்பது, மொழி ஆற்றலை அதிகரிக்கும். சிந்திக்கும் திறனை பெருக்கும். நினைவாற்றலை கூட்டும். நற்பண்புகள் வளரும்!"

சுவையுடன் சொல்ல, கூட்டத்தினரின் கைதட்டல் விண்ணைப் பிளந்தது!

உஷா, எழுத்தாளர்களின் பேச்சை ஒலிபெருக்கியில் கேட்டபடி



நடந்தாள். அங்கு இருந்த தகவல் பலகையை படிக்க ஆரம்பித்தாள். அதில், இன்றைய பட்டிமன்றம், 'மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது... புத்தகங்களா? வானொலி- தொலைக்காட்சியா?' என்றும், யார் - யார் பேசுகிறார்கள்... நடுவர் யார்? எனவும் எழுதப்பட்டிருந்தது.

'பயனுள்ள தலைப்பா இருக்கே! நிச்சயமா இந்த பட்டிமன்றம் சுவையாகத்தான் இருக்கும்' என்று நினைத்தவள், நிகழ்ச்சி எத்தனை மணிக்கு என்று பார்த்தாள்.

மாலை ஆறு மணி என இருந்தது!

'ம்... இன்னும் ஒரு மணி நேரம் இருக்கே! அண்ணனிடமும் இதனை சொல்ல வேண்டும்' என்று நினைத்தவள், நுழைவுச் சீட்டை வாங்கிக்கொண்டு புத்தகக் கடைகள் நிறைந்த பகுதிக்குள் நுழைந்தாள்.

கூட்டம் அலைமோதியது.

கடிகாரத்தைப் பார்த்தாள். சரியாக ஐந்து.

'அண்ணனுக்கு போன் பண்ணலாமா...? இத்தனை நேரம் வந்திருப்பானா?' என்று சந்தேகத்தோடு செல்பேசியை எடுத்து எண்களை அழுத்தினாள்.

போனை எடுத்த விவேக், "உஷா, புத்தகக் கண்காட்சி உள்ளே வந்துட்டேன். நீ எங்கே இருக்கே?" என்றான்.

தான் எங்கு நிற்கிறோம் என்று ஒரு முறை அப்படியும், இப்படியுமாக தலையைச் சுழற்றிப் பார்த்தாள்.

கடை எண் பத்து. அந்த அடையாளத்தை சொன்னாள்.

ஆனால், கூட்டத்தை கடந்து உஷா நின்றுகொண்டிருந்த இடத்துக்கு அவன் வர பத்து நிமிடமாயிற்று!

சற்று தூரத்தில் இருந்தே தங்கையைப் பார்த்துவிட்டான்.

அவளும் புன்னகைத்தாள். அருகில் வந்ததும் அன்பாய் கையைப் பிடித்து, "எப்படி இருக்கேண்ணா?" என்றாள்.

"நல்லா இருக்கேன். நான்தான் தினம் ஒரு முறையாவது உன்கூட போன்ல பேசிக்கிட்டுத்தானே இருக்கேன்?"

"இருந்தாலும் நேர்ல பார்க்கறப்ப, இனம் புரியாத மகிழ்ச்சி வருது."

"நீ சொல்றது உண்மைதான்."

உஷாவுக்கு கண்களில் கண்ணீர் கோர்த்தது.

"அண்ணா."

"ம்... சொல்லு."

"நாம ரெண்டு பேரும் வாழ்க்கையில இனிமே சேர்ந்தே இருக்க முடியாதா?"– ஏக்கத்துடன் கேட்டவள் குரல் உடைந்தது!

"உஷா... உனக்கு எந்தப் புத்தகம் வேணும்னு சொல்லு. நான் வாங்கித் தர்றேன்"–சொன்னவனுக்கு தங்கையின் ஏக்கம் புரிந்தது. அவளின் கவனத்தை திசை திருப்புவதற்காக வேறு பேச்சை எடுத்தான்.

"அண்ணா... திரும்பவும் நம்முடைய அப்பாவும், அம்மாவும் சேர முடியாதா?"– கண்கள் கலங்கக் கேட்டாள்.

விவேக் அவளை தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டான்.

"உஷா."

"ம்..."

"நீ இந்த வருஷம் 'பிளஸ் டூ'. கஷ்டமா படி. நல்ல மதிப்பெண் வாங்கினாத்தான் கல்லூரியில நீ விருப்பப்பட்ட பாடம் கிடைக்கும். உனக்கு வேற எந்த சிந்தனையும் வரக்கூடாது. சரியா?"

"ஏண்ணா... நீ அப்பா– அம்மாவைப் பத்தி பேசினாலே என் பேச்சை மாத்திக்கிட்டே இருக்கே. கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல மாட்டேங்கிறே? சில நேரத்துல எனக்கு அம்மாவை பார்க்கணும்னு மனசு ஏங்கும்... துடிக்கும். எத்தனையோ நாள் ராத்திரியில தூங்காம அழுதே நேரத்தை போக்கி இருக்கேன்."

உஷா வேதனைப்பட, விவேக் பெருமூச்சு விட்டான்.

"உன்னுடைய உணர்வு, ஏக்கம் எல்லாமே நல்லாவே புரியுது. இங்க பாரு. உனக்கு பதினாறு வயசு ஆகுது. எனக்கு இருபத்தொண்ணு. ஆனா, இந்த வயசுல– இந்த நிலைமையில நாம ரெண்டு பேரும் வாழ்க்கையில சொந்தமா எந்த முடிவும் எடுக்க முடியாது. நம்முடைய எண்ணமும், செயலும் சரியா இருக்கலாம். ஆனா, அம்மாவை சார்ந்து நான் இருக்கேன். அப்பாவை சார்ந்திருக்கே நீ!

நாம சொல்றதை அவங்க கண்டிப்பா கேக்க மாட்டாங்க. ஏதோ ஒரு அதிசயம்... இல்ல, அதிர்ஷ்டம்னுகூட சொல்லலாம். நாம ரெண்டு பேரும் ஒரே ஊர்ல இருக்கோம். அப்பப்போ நேர்லயோ,



போன்லயோ பேசிக்கிறோம். இல்லேன்னா பார்த்துக்கவோ, பேசிக்கவோக்கூட சந்தர்ப்பம் இல்லாம போயிருக்கும்."

விவேக்கின் அடிமனதில் இருந்து புறப்பட்ட வார்த்தைகளால், அவன் நாக்கு மேற்கொண்டு பேச முடியாமல் தழுதழுத்தது. கண்களில் நீர் பெருகியது.

"அண்ணா... அழாதே. என்ன பண்றது? இது நம்ம தலைவிதி" –சொன்ன உஷா தன் கையில் இருந்த கைக்குட்டையை எடுத்து விவேக்கின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரை அன்புடன் துடைத்துவிட்டாள்.

அவனும் தன்னை சமாதானப்படுத்திக்கொண்டான்.

உஷா தனக்குப் பிடித்த இலக்கிய புத்தகங்களை எடுத்துக்கொண்டாள். அதற்குரிய பணத்தை கொடுக்க விவேக் முயற்சித்தபோது தடுத்தாள்.

"அண்ணா... அப்பா என்கிட்ட நிறைய பணம் கொடுத்திருக்காரு. நானே கொடுக்கறேன்."

"நல்லது... என்கிட்டேயும் அம்மா பணம் கொடுத்திருக்காங்க. அப்புறம், நான் அண்ணன். வயசுல பெரியவன். நான்தான் என் தங்கைக்கு வாங்கித்தரணும். சரியா...?"

பாசத்துடன் சொன்னான்.

அவள் தலையாட்டினாள். அண்ணனின் அன்பால் அவளது கண்களும் குளமாகின.

"அண்ணா! நீ புத்தகம் வாங்கிக்கலையா?"

"வாங்காமலா... இங்க வர்றதுக்கு முன்னாடி, வழியில நிறைய புத்தகங்களை பார்த்து வச்சிருக்கேன். சரி, உன்னைப் பார்த்துட்டு அப்புறமா வாங்கலாம்னு வந்தேன்."

அவள் சிரித்தாள்.

"உஷா... வீட்ல இருந்து இங்க வந்ததே அசதியா போச்சு. வா, முதல்ல சாப்பிட்டுட்டு அப்புறமா புத்தகம் வாங்கலாம்."

"சரிண்ணா... எனக்கும் பசிக்குது. அப்புறம் உன்கிட்ட ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன்."

"என்னது?"

"பாரதிதாசன் அரங்கத்துல ஆறு மணிக்கு பட்டிமன்றம் இருக்கு. தலைப்பு சூப்பரா இருந்தது. கேட்டுட்டுப் போகலாமா?"

"ஓ... தாராளமா. ஆமா... என்ன தலைப்பு?"

சொன்னாள்.

"ம்... நல்ல தலைப்பு. என்னைப் பொறுத்தவரை, அறிவு வளர்ச்சிக்கு 'பெரிதும் உதவுவது புத்தகம்தான்'னு சொல்வேன். ம்... சரி, தீர்ப்பு என்னன்னு பார்க்கலாம்" என்றபடி விவேக், உஷாவுடன் உணவகத்துக்கு நடந்தான்.

சாப்பிட்ட பிறகு தேவையான புத்தகங்களை வாங்கிக்கொண்டு இருவரும் பாரதிதாசன் அரங்கில் காரசாரமாய் நடைபெற்ற பட்டிமன்றத்தை கேட்டுவிட்டு, புத்தகக் கண்காட்சிக்கு வெளியே வந்தனர்.

"அண்ணா... நான் பஸ்ல போயிடுறேன்."

"வேண்டாம் உஷா. மணி எட்டரை ஆகுது. பஸ் பிடிச்சு வீட்டுக்குப் போக மணி பத்தாயிடும். நான்தான் 'பைக்'ல வந்திருக்கேனே! அப்புறம் ஏன் நீ தனியா போகணும்? உன் வீட்டுத் தெருவுல விட்டுடறேன். சரியா...?

உஷா 'சரி' என்று தலையாட்டினாள்.

பாச மலர்களை ஏற்றிக்கொண்டு மோட்டார் சைக்கிள் வேகமாக பறந்தது.

## 4

இரவு மணி ஒன்பது. நிசப்தம் நிலவியது.

அந்த மிகப்பெரிய அடுக்கு மாடி குடியிருப்பு வளாகத்தின் உள்ளே கார் நுழையும் சத்தம், தரைத் தள வீட்டில் இருந்த விவேக்கின் காதில் நன்றாக விழுந்தது.

"அம்மாவோ?"

மடிக்கணினியை ஓரமாய் வைத்துவிட்டு, சந்தேகத்தோடு கதவைத் திறந்தான்.

அம்மாவேதான்!

முகத்தில் களைப்போடும், உடம்பில் சோர்வோடும் நின்றுகொண்டிருந்தாள்.

விவேக்கைப் பார்த்ததும் முகம் மலர்ந்தவள், "நேரமாச்சே...



சாப்பிட்டியா?" என்றாள்.

"இல்லம்மா."

"ஏன்டா?"– கவலையோடு கேட்டாள்.

"நீ வந்தப்புறம் சேர்ந்து சாப்பிடலாம்ன்னு காத்துக்கிட்டு இருக்கேன்ம்மா. தனியா சாப்பிட போரடிக்குது. வீட்ல வேற யார் இருக்கா? உன்னோட சேர்ந்து சாப்பிட்டா ஜாலியா இருக்கும்."

விவேக் சொல்லச் சொல்ல ராதாவுக்கு மனது தவித்தது.

'மகனுக்கு என் மேல எப்படியொரு அன்பு! எனக்காக சாப்பிடாம உட்கார்ந்துக்கிட்டு இருக்கான். ஆனா, ஒரு நாள் அந்த ரவி அப்படி நடந்துக்கிட்டதில்லை' என்று ராதா மனதுக்குள் புலம்பிக்கொண்டபோது, அவளுக்கு பழைய நிகழ்ச்சி ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

★★★

ராதா, வாசல் கதவைத் தட்டினாள்.

ரவி, பாதி தூக்கத்தில் எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

"சாப்பிட்டீங்களா?"

"எதுக்கு கேக்கற?"

"இல்லை. மணி பத்தாகப் போகுது. ஒருவேளை எனக்காக சாப்பிடாம இருக்கீங்களான்னு?"– என்று வார்த்தைகளை அவள் முடிக்கும் முன் ஆரம்பித்தான்.

"நீ ஒரு நாள் எட்டு மணிக்கு வருவ... இன்னொரு நாள் பத்து மணிக்கு வருவ. உன் கம்பெனியில உன்னைவிட்டா வேற ஆளே கிடையாது. போன் பண்ணினாக்கூட சில நேரத்துல எடுத்துப் பேசமாட்டே. கேட்டா, 'நான் பொது மேலாளருங்கிற பெரிய பதவியில இருக்கேன். அடிக்கடி 'மீட்டிங்'ல இருப்பேன்'னு பதில் சொல்வே. எவன் உனக்காக காத்திருந்து சாப்பிடுவான்? நான் சாப்பிட்டாச்சு."

"ஏன் இப்படி அன்பு இல்லாம பேசறீங்க...? சாப்பிட்டீங்களான்னுதானே கேட்டேன். ஏன் சாப்பிட்டீங்கன்னா கேட்டேன்?"

"எதிர்த்துப் பேசுறியா?"

"பொண்டாட்டின்னா பேசவே கூடாதா?"

"என்னைவிட பெரிய பதவியிலே இருக்கறே, அதிகம்

சம்பாதிக்கிறேங்கிற திமிர்ல பேசறீயா?"

"நீங்க சொன்ன ரெண்டு விஷயமும் உண்மைதானே! என்னை அடக்கி, உங்களுக்கு அடிமையா இருக்க வைக்கலாம்னு மட்டும் கனவுகூட காணாதீங்க."

"நீ... நீ எப்ப வீட்டுக்குள்ள நுழைஞ்சாலும், வீட்டோட அமைதியே போயிடுது... ச்சே."

"அதை நான் சொல்லணும்."

"உன்கூட மனுஷன் பேசுவானா?"– ரவி மேற்கொண்டு அங்கு நிற்காமல் போக,

"என்ன வீடு... என்ன குடும்பம் இது? சோர்வாய் வந்திருக்கிற எனக்கு ஒரு வாய் தண்ணி கொடுக்கக்கூட ஆள் இல்லை"

– என்று வருந்தியது ராதாவின் ஞாபகத்துக்கு வந்து வேதனையைக் கொடுக்க,

விவேக் 'பிரிட்ஜில்' இருந்து ஒரு பாட்டில் குளிர்ந்த நீரை எடுத்து வந்து அம்மாவிடம் நீட்டினான்.

ராதா தன் மகனை அன்பாய் பார்த்தாள்.

'எப்படியொரு பாசம்! நான் குடிக்க தண்ணீர் கேக்கறதுக்கு முன்னாடியே அம்மாவோட மனசை– நிலைமையைப் புரிஞ்சு நடந்துக்கிட்டானே... எவ்வளவு நல்ல பையன்' என்று நினைத்தவள்,

"நன்றிடா" என்றாள்.

"எதுக்கும்மா நன்றியெல்லாம்? நீ பத்து மாசம் கஷ்டப்பட்டு சுமந்து பெத்த. ஆசையா, அன்பா வளர்த்த... அதுக்கெல்லாம் நான் நன்றி சொல்ல வேண்டியிருக்கும். இது அன்பால ஏற்படுற கடமைம்மா."

"ஒரு நாள்கூட உன் அப்பா என்கிட்ட அன்பா நடந்துக்கிட்டது இல்லப்பா. என்னைப் பார்த்தாலே ஒரு வெறுப்பு. நான் எது பேசினாலும் குற்றம் கண்டுபிடிப்பார்."

"சரி, அதை விடும்மா. நீ போய் முதல்ல துணி மாத்திக்கிட்டு, கை–கால் அலம்பிட்டு வா."

ராதா உடை மாற்றச் செல்ல, சமையல்காரி செய்து வைத்துவிட்டுப் போன இரவுக்கான டிபனை சமையல் அறையில் இருந்து வெளியே எடுத்து வந்து சாப்பாட்டு மேசை மீது வைத்தான் விவேக்.

தனக்கும், அம்மாவுக்குமான தட்டுகளை அலம்பினான்.



இரண்டு தம்ளர்களில் குடிதண்ணீரை ஊற்றி, தட்டு அருகில் வைத்தான்.

"அம்மா.... சாப்பாட்டு மேசையில் எல்லாம் தயார்"– குரல் கொடுத்தான்.

ராதாவுக்கு ஏனோ பசி இல்லை. சற்று நேரம் கழித்துதான் சாப்பிடலாம் என்று இருந்தாள். ஆனால்... மகன் அன்பாய் கூப்பிடுவதால், அதற்காகவாவது அவனுடன் சேர்ந்து சாப்பிட வேண்டும் என்று அருகே போனாள்.

விவேக் தயாராய் உணவை பரிமாறி இருந்தான்.

ராதா நெகிழ்வோடு பார்த்தாள்.

'இவன் ரவியைப் போல இல்லை' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டாள்.

## 5

மணி காலை 6.30.

சுப்பிரமணியம் காலை தினசரியை வீட்டு வாசலில் நாற்காலியில் சாய்ந்தபடி உட்கார்ந்து புரட்டினார்.

மகன் கிஷோர், தலையணையைக் கட்டிப்பிடித்தபடி உறங்கிக்கொண்டிருந்தான்.

சுப்பிரமணியத்தின் மனைவி ராஜலட்சுமி வியர்த்துக்கொட்ட, சமையல் அறையில் 'கியாஸ் ஸ்டவ்'வின் ஒருபுறத்தில் குக்கரை வைத்துவிட்டு, காய்கறிகளை அவசர அவசரமாக நறுக்கினாள்.

"விடியற்காலை நாலரை மணிக்கெல்லாம் எழுந்திரிக்கணும்... சமைக்கணும்... துணி துவைக்கணும்... வீட்டைச் சுத்தப்படுத்தணும். சம்பளம் இல்லாத வேலைக்காரி நான். எனக்குன்னு தனிப்பட்ட சந்தோஷம் ஏதாவது இந்த வீட்ல இருக்கா?

இவர் மெதுவா படுக்கையில இருந்து எழுந்திருப்பாரு. 'டாண்'ணு காப்பி கொடுக்கணும். காப்பியைக் குடிச்சதும், இவருக்கும், இந்த வீட்டுக்கும் எந்த சம்பந்தமும் இல்லாத மாதிரி வாசல்ல போய் உக்கார வேண்டியது. 'பொண்டாட்டிக்கும் அம்பது வயசாச்சு. அவளுக்கு ஏதாவது உதவி பண்ணுவோமே!'ன்னு துளிகூட எண்ணம்

கிடையாது. நேரமானதும், 'குளிக்க வெந்நீர் ரெடியா?'ன்னு ஒரு குரல். அப்புறம் காலை உணவு பரிமாறணும். மத்தியானத்துக்கு சாப்பாடு கட்டணும். கண்டிப்பா அலுவலகம் போறப்ப வாசலல வந்து, சிரிச்ச மாதிரி முகத்தை வச்சுக்கிட்டு வழி அனுப்பணும்.

ச்சே... ச்சே! அவர்தான் அப்படின்னா... இவன், இந்த கிஷோர்... தூங்கணும். தூங்கி எழுந்தா முதல்ல முழிக்கிறது டி.வி.யிலதான். ஏதாவது ஒரு கிரிக்கெட்டைப் பார்க்கணும். அவன் கல்லூரிக்குப் போனதும் துணி துவைக்கணும். இட்லி, தோசைக்கு மாவு அரைச்சு வைக்கணும். இது வீடு இல்ல... ஜெயில். நான் இங்க கைதி.

தப்பு என் மேலதான். கல்யாணமான புதுசிலேயே, 'எனக்கு சமைக்கத் தெரியாது'ன்னு சொல்லி இருக்கணும். பெருமையா பேசிட்டேன். இப்ப இந்த வீட்டோட முழுநேர சமையல்காரி ஆகிட்டேன். ஏதாவது ஓர் இடம் போய், ஒரு வாரம் ஓய்வு எடுக்க முடியுதா?"

சுப்பிரமணியம் தின்சரியை படித்துவிட்டு உள்ளே நுழைந்தார்.

ராஜலட்சுமி ஏதோ முணுமுணுப்பது தெரிந்தது. இருந்தாலும் அவர் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

"வெந்நீர் ரெடியா?"– எப்போதும் போல் கேட்டார்.

"ஏன் ஒரு நாள் நீங்க வெந்நீர் போட்டுக்கக்கூடாதா?" – கோபமாய் கேட்டாள்.

"ஏன்... என்ன ஆச்சு உனக்கு?"

"ஒரு நாள் நான் ஆபீஸ் போறேன். வீட்டு வேலையை நீங்க பாருங்க. அப்பத் தெரியும் கஷ்டம்."

"இப்ப என்ன சொல்லிட்டேன்... எதுக்கு கோபப்பட்ற? நாம இன்னும் கொஞ்ச நாள்ல இருபத்தஞ்சாவது கல்யாண நாளை கொண்டாடுறோம். நீ பட்டுச் சேலையில மின்னப்போற. உனக்கு எதுக்கு அநாவசிய கோபம்?"

"இதோ பாருங்க... பேச்சை மாத்தாதீங்க. சாந்தி யாரு?"

"சாந்தி உன் தங்கை. என்னடி இது திடீர் கேள்வி... சம்பந்தமில்லாம?"

"அவ எப்ப பொறந்தா?"

"நீ பொறந்து ஒரு பதினைஞ்சு வருஷம் கழிச்சு அவ பொறந்ததா சொல்வே. உங்க அப்பா தனக்கு பையன் பொறக்கணும்னு நினைச்சாரு. ரெண்டாவதும் பொண்ணா பொறந்ததாம்."



"இப்ப அது பிரச்சினை இல்ல."

"ம்... நீயே விளக்கமா சொல்லிடு."

"அவ வேலைக்கு போறாளா?"

"ம்... போறா?"

"ஆனா, வேலைக்கும் போயிட்டு, வீட்லேயும் அவ சந்தோஷமா இருக்கறதா போன்ல சொல்றா. ஆனா, நான் இந்த வீட்ல ஒரு எந்திரம் மாதிரி இருக்கேன். ஒரு நாள் ஓய்வு கிடையாது எனக்கு."

"சரி ராஜலட்சுமி. ரெண்டு நாளைக்கு வீட்ல சமைக்காதே! ஓட்டல்ல சாப்பிடுவோம். நீ ஓய்வு எடுத்துக்க."

"தினமும் ஓட்டல்ல சாப்பிட முடியுமா?"

"சரி... உதவிக்கு ஒரு ஆளை போட்டுக்கிறியா?"

"இப்பல்லாம் மாசம் மூவாயிரம் கொடுத்தாலும் வரமாட்டேங்கிறாங்க. அதேது என் தங்கையைப் பாருங்க.. அவ கணவன் அப்படி தாங்கு தாங்குன்னு தாங்கறானாம். போன்ல சொல்லி பெருமைப்பட்டுக்கறா. என்னை ஒரு வாரம் அங்க வந்து இருந்துட்டுப் போகச் சொன்னா."

"சரி... இப்ப நீ ஈரோட்டுக்குப் போய் உன் தங்கை வீட்ல மகிழ்ச்சியா, ஓய்வா இருந்துட்டு வரணும்... அவ்வளவுதானே?

"ஆமாம்"– தலையாட்டினாள்.

"இதோ பாரு. வேலை முடிஞ்சி வரும்போது, உனக்கு ரெயில் டிக்கெட் வாங்கிட்டு வர்றேன். தாராளமா போயிட்டு வா."

"ரொம்ம நல்ல்து"– கோபமாய் சொன்னாள்.

"ஓ..."– சுப்பிரமணியம் வியப்புடன் மனைவியைப் பார்த்தார்.

"சீக்கிரம் குளிச்சிட்டு வாங்க."

"சரி... நீ போய் கிஷோரை எழுப்பு."

"வேண்டாங்க. இன்னும் கொஞ்ச நேரம் தூங்கட்டும்."

"ம்... உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலம்மா."

சுப்பிரமணியம் குளிப்பதற்காக வெந்நீரை எடுத்துக்கொண்டு குளியல் அறைக்கு போனார்.

'பாவம் ராஜலட்சுமி. இந்த வீடு, நான், கிஷோர்.. இதான் அவளோட வாழ்க்கை. ஒரு வாரம் மாறுதலுக்காக சாந்தி வீட்ல இருந்துட்டு வரட்டும். சாயந்திரம் கண்டிப்பா டிக்கெட் வாங்கிட்டு

வரணும்.'

தனக்குள் சொல்லிக்கொண்டார்.

## 6

ஞாயிற்றுக்கிழமைதான்.

இருந்தாலும் ஆறு மணிக்கு மேல் உஷாவுக்கு தூக்கம் வரவில்லை. பல் துலக்கிவிட்டு, டேப் ரிக்கார்டரில் பக்திப் பாடல்களை மெல்லிய ஒலியில் ஓடவிட்டாள்.

சமையல் அறைக்குப் போய் காப்பி பவுடரை எடுத்து பில்டரில் போட்டுவிட்டு, வெந்நீர் ஊற்றி புது 'டிகாஷன்' தயார் செய்தாள்.

மணி ஏழானது. அப்பா இன்னும் எழுந்திருக்கவில்லை.

பாலைக் காய்ச்சினாள்.

ஒரு தம்ளரில் காப்பியைக் கலந்துகொண்டு வரவேற்பரைக்கு வந்தவள், மெதுவாய் உறிஞ்சிக் குடித்தாள்.

மணி எட்டாகி இருந்தது. உஷாவுக்கு ஆச்சரியம்.

'அப்பா தினமும் காலையில அஞ்சு மணிக்கெல்லாம் எழுந்து காப்பி போட்டு சமைக்க ஆரம்பிச்சுடுவாரே! அவருக்கு ஞாயிற்றுக்கிழமையும், மற்ற நாட்களும் ஒன்றுதான். இன்று என்ன ஆச்சு? எழுப்பலாமா... வேண்டாமா?' என குழப்பத்துடன்– சத்தம் வராமல் மெதுவாக காலடி வைத்து நடந்து– அவர் தூங்கும் படுக்கை அறையின் வாசலில் இருந்து பார்த்தாள்.

ரவி அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

'பாவம்... அப்பா இப்படி தூங்கிப் பார்த்ததே இல்லை. அவரோட வாழ்க்கை எனக்கானது! தன்னைப் பற்றி ஒரு நாள்கூட கவலைப்பட்டதே கிடையாது.

எட்டு ஆண்டுகளுக்கு முன் அம்மாவை விவாகரத்து செய்த பிறகு, பாட்டி இருக்கும் கிராமத்துக்கு அப்பா தன்னை கூட்டிச் சென்றது உஷாவுக்கு ஞாபகம் வந்தது.

'டேய் ரவி... உனக்கு சின்ன வயசுதானே! அவதான் பொறுப்பு இல்லாம போயிட்டா. அதுக்காக கஷ்டப்படணுமா? உஷாவும் சின்னப் பொண்ணு. வேலைக்கும் போய்க்கிட்டு, இந்தக் குழந்தையையும் நீ எப்படிப்பா பார்த்துப்ப? என்னாலேயும் இந்த வீட்டையும், உங்க



அப்பாவையும் விட்டுட்டு வர முடியாது. என் பேச்சைத் தட்டாம இன்னொரு கல்யாணம் பண்ணிக்கடா. அதான் நல்லது.'

'இல்லம்மா... இனிமே இவளுக்காகவே வாழப்போறேன். என் பாசத்துல யாருக்கும் பங்கு கிடையாது. உஷாதான் எனக்கு எல்லாமேம்மா.'

பாட்டியிடம் தன் அப்பா சொல்லியதை நினைத்துப் பார்த்த உஷாவுக்கு கண்கள் கலங்கின!

'இப்படிப்பட்ட அன்பான, ஆசையான உறவு கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும்...' என்று நினைத்தவளுக்கு,

"உஷா... நான் மறந்தாலும், நீ மறக்காதே. காலையில் எழுந்ததும் இந்த மாசத்துக்கான மளிகைச் சாமானை வாங்கிட்டு வந்துடுவோம். ஞாயிற்றுக்கிழமையை விட்டுட்டா அப்புறம் மற்ற நாட்கள்ல போக முடியாது"– என்று நேற்று இரவு அப்பா சொன்னது ஞாபகத்துக்கு வர,

'சரி, 'பெட்' காப்பியைத் தயார் பண்ணிவிட்டு அப்பாவை எழுப்பலாம்' என்று முடிவு பண்ணியவள், காப்பி தயார் செய்து,

"அப்பா..." என்று எழுப்ப, ரவி சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

எதிரே காப்பி தம்ளருடன் அவள்!

"ஏம்மா... ரொம்ப நேரம் தூங்கிட்டேனா?"

காலை வெயில் ஜன்னல் வழியே முகத்தில் அடித்தது.

"பரவாயில்லப்பா. ஞாயிற்றுக் கிழமைதானே... இந்தாங்க காப்பி."

"காப்பி போட்டுட்டியா? ஸாரி... ஒரு நிமிஷம் இரேன். பல் துலக்கிட்டு வந்துடுறேன்."

ரவி, சொன்ன மாதிரி பல் துலக்கிவிட்டு ஒரு நிமிஷத்தில் வந்து, மகளிடம் இருந்து காப்பியை வாங்கி அருந்தினான்.

"உஷா... காப்பி சூப்பர்."

வெட்கத்தில் முகம் மலர்ந்தாள் அவள்.

"அப்பா."

"ம்..."

"சமையலும் நானே பண்றேன். இன்னிக்கு என்னமோ நீங்க களைப்பா இருக்கீங்க. உங்களுக்கு ஓய்வு தேவை. மளிகைக்

| சந்தா விவரம் | ராணி | ராணி முத்து |
|---|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 800 | ரூ. 350 |
| ஒரு ஆண்டு | ரூ. 410 | ரூ. 190 |
| ஆறு மாதம் | ரூ. 205 | ரூ. 95 |
| **வெளிநாடுகள்** | | |
| ஒரு ஆண்டு | ரூ. 2,750 | ரூ.1,260 |
| ஆறு மாதம் | ரூ. 1,375 | ரூ. 630 |

தொகையை 'மணியார்டர்' அல்லது 'டி.டி.'யாக அனுப்ப வேண்டிய முகவரி:
'ராணி சிண்டிகேட்', 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

கடைக்குக்கூட சாயந்திரம் போய்க்கலாம். நீங்க 'ரிலாக்ஸா' பத்திரிகை படிச்சிக்கிட்டு இருங்க. நான் சமையல் செய்றேன்."

'இவ சின்னக் குழந்தை. 'பிளஸ் டூ' படிக்கிறா. எவ்வளவு அன்பா – பொறுப்பா இருக்கா! ஆனா... ராதா?'

ரவிக்குள் பழைய ஞாபகங்கள் வலம் வந்தன.

"ராதா... இன்னிக்கு உனக்கும் விடுமுறை. சின்ன வெங்காய சாம்பார், உருளைக்கிழங்கு பொரியல் பண்றியா?"

அவளிடம் இருந்து எந்தவித பதிலும் வரவில்லை.

"ராதா... சொன்னது காதுல விழலையா?"

"நான் என்ன நீங்க வச்ச வேலையாளா? இல்ல... இந்த வீட்டு சமையல்காரியா?"

"அதுக்கு சொல்லலை. தினமும் காலையில ஏதோ ஒண்ணை அவசரமா சாப்பிட்டுட்டு ஆபீசுக்கு ஓடிப் போயிடுறோம். அதே மாதிரி பாதி நாள் ராத்திரியில, ஏதோ ஒரு உணவை ஓட்டல்ல 'பார்சல்' வாங்கிட்டு வந்து சாப்பிடுறோம். இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. பொறுமையா உன் கையால சமைச்சு சாப்பிடலாம்னு ஆசை."

ஆர்வமாகச் சொன்னான்.



எஸ்.எம்.எஸ். அனுப்புங்க...

'ராணி', 'ராணி முத்து' இதழ்கள் உங்களைத் தேடி வர வேண்டுமா?



RNI<Space>Name and send it to 56060

– என செல்போனில் 'டைப்' செய்து (Name என்பதில் உங்கள் பெயர்) 'எஸ்.எம்.எஸ்.' அனுப்புங்கள்.

"ஏன் சமைக்கணும்? தினம் நானும் நாய் மாதிரி ஆபீசுல உழைச்சுட்டுதானே வர்றேன்? ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் எனக்கு ஓய்வு தேவைப்படாதா? ஏன்... நீங்க சமைச்சா குறைஞ்சு போயிடுவீங்களா?

நானும் உங்களை கவனிச்சுக்கிட்டுத்தான் வர்றேன். அது என்ன, உங்க துணிகளை மட்டும் 'வாஷிங் மெஷின்'ல துவைச்சு உலர்த்துறீங்க. இந்த வீட்ல நான் என்னவா இருக்கேன்னு தெரியலை. பொம்பளைங்கன்னா அடிமையா?"

ரவி பெருமூச்சு விட்டான்.

"ராதா... நான் சாதாரணமாக்கூட பேசக்கூடாதா? சின்ன விஷயத்துக்கெல்லாம் இப்படி கோபப்படுறியே? உனக்கு முடியலேன்னா வேலைக்குப் போக வேண்டாமே! என் சம்பளத்துல குடும்பத்தை ஓட்டிக்கலாம்."

"ஓ! அப்புறம் சின்னச்சின்ன செலவுக்குக்கூட உங்ககிட்ட கையேந்தி நான் பிச்சை எடுக்கணும். அதுல உங்களுக்கு ஒரு மகிழ்ச்சி கிடைக்கும். அப்படித்தானே?"

"என்ன பேசற... ஒரு பொண்ணு கணவனை சார்ந்து இருக்கறது தவறா? பொண்டாட்டியைக் காப்பாத்தறது ஒரு கணவனோட கடமைதானே?"

"ச்சே... காலையிலேயே பேசிப் பேசி என்னை 'டார்ச்சர்' பண்ண ஆரம்பிச்சாச்சு" – சலித்துக்கொண்டாள்.

"என்ன ராதா! ஒண்ணுமில்லாத விஷயத்துக்கெல்லாம் இப்படி கோபப்படுற? ஏன் இப்படி நடந்துக்கற...? என்னைப் பிடிக்காம கல்யாணம் பண்ணிக்கிட்டியா?" – வேதனையோடு கேட்டான்.

அவனை ஒரு நிமிடம் நிதானமாக பார்த்தாள்.



"இன்னிக்கு நான் வேலைக்குப் போறேன். எனக்கு சாப்பாடு வேண்டாம்" என்றவள், அவசரமாய் வேறு உடை அணிந்துகொண்டு கிளம்பினாள்.

ரவி அதிர்ச்சியுடன் பார்த்தான்!

'நல்லவேளை. என் பொண்ணு, ராதா மாதிரி இல்லை. அந்தக் கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்' என்று நினைத்துக்கொண்டான்.

## 7

மழை லேசாய் தூறி முடித்திருந்தது.

சென்னையில் இருந்து புறப்பட்ட ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரெயில் சற்று தாமதமாக ஈரோடு ரெயில் நிலையத்தின் ஐந்தாவது பிளாட்பாரத்தை வந்தடைந்தது.

சாந்தி தன் கணவர் தண்டபாணியுடன் 'எஸ்.10' பெட்டி அருகே காத்திருந்தாள்.

ரெயிலில் இருந்து இறங்கிய அக்கா ராஜலட்சுமியைப் பார்த்ததும் அவள் முகம் மலர்ந்தது.

தண்டபாணி ஓடிப் போய், ராஜலட்சுமியிடம் இருந்த சூட்கேசையும், 'பேக்'கையும் வாங்கிக்கொண்டான்.

"எப்படி இருக்கீங்க?"– விசாரித்தாள்.

"நலமா இருக்கேன்."

"அக்கா... வா. நீ வந்தது ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி. அத்தானும் வந்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும்?"

சாந்தி மகிழ்ச்சியுடன் அக்காவை வரவேற்றாள்.

"என்னம்மா பண்றது... அவருக்கு விடுமுறை கிடைக்கலை. ம்... நீ தமிழரசியை கூட்டிக்கிட்டு வரலியா?"– ராஜலட்சுமி கேட்டாள்.

"இல்லக்கா! சரி, போலாமா?"

மூவரும் நடந்து வெளிவாசலுக்கு வந்தனர்.

ரெயில் வந்த நேரம் என்பதால் கூட்டம் அலைமோதியது.

ரெயில் வந்த நேரம் என்பதால் கூட்டம் அலைமோதியது. தண்டபாணி தனது காரை எடுத்து வந்து சாமான்களை 'டிக்கி'யில் ஏற்றினான்.

அக்காவும், தங்கையும் பின் இருக்கையில் ஏறிக்கொண்டனர்.

ரெயில் நிலைய வளாகத்தைவிட்டு வெளியே வந்த கார், இடதுபுறம் திரும்பி நால் ரோட்டை தாண்டி சூரம்பட்டி வலசு, காந்திஜி தெருவுக்கு மூன்றே நிமிடத்தில் போய் சேர்ந்தது.

காரில் இருந்து இறங்கிய ராஜலட்சுமி, ரோட்டில் இருந்தே வீட்டைப் பார்த்தாள். புதிதாய் வண்ண சுண்ணாம்பு அடிக்கப்பட்டு, கண்ணுக்கு 'பளிச்'சென்று இருந்தது!

"அக்கா... எத்தனை வருஷத்துக்கு அப்புறம் எங்க வீட்டுக்கு வந்திருக்கே தெரியுமா?"– சாந்தி ஆதங்கமாய் கேட்டாள்.

ராஜலட்சுமி சிரித்தாள்.

அவளைப் பார்த்ததும், "ஐ... பெரியம்மா."

தமிழரசி ஓடி வந்து இடுப்பைக் கட்டிக்கொண்டாள்.

ராஜலட்சுமி தூக்கி கன்னத்தில் முத்தமிட்டாள்.

"எப்படி படிக்கிற செல்லம்?"

"பெரியம்மா... பள்ளிக்கூடத்துல, என் வகுப்புல நான்தான் எப்பவும் முதல்"– பெருமையாய் சொன்னாள்.

"ரொம்ப சமர்த்து. கேட்க மகிழ்ச்சியா இருக்கு."

"பெரியம்மா."

"ம்..."

"ஓவியம், பேச்சு, எழுத்துப் போட்டி எல்லாத்துலேயும் பரிசு வாங்கி இருக்கேன். அம்மா போன்ல சொல்லலையா?"

"ம்... கூம். சொல்லவே இல்ல. வெரிகுட்... நீ உன் அம்மா மாதிரி. அவளும் அப்படித்தான். எப்பவுமே எல்லாத்துலேயும் முதலிடம் வருவா. அவளை யாரேலேயும் ஜெயிக்க முடியாது."

"அண்ணி..."– தண்டபாணி கூப்பிட்டான்.

"சொல்லுங்க..."

"நானும் எப்பவும் எல்லாத்துலேயும் முதலிடம்தான் வருவேன்."

அவன் சொன்னதும் ராஜலட்சுமி சிரித்தாள்.

"எப்பவுமே ஒரு குழந்தை நல்லதா வளருதுன்னா, கண்டிப்பா அதுக்கு அப்பா–அம்மா ரெண்டு பேருமே காரணம்."–ராஜலட்சுமி சொன்னாள்.

"அக்கா... நான் காப்பி கொண்டு வர்றேன்."

"சாந்தி... ரெயில்ல வரும்போதே குடிச்சிட்டேன். ஆமா! ஏன்



வாசல்ல கோலம் போடலை? ரெயில் நிலையம் வந்ததால கோலம் போட மறந்துட்டியா?"

"இல்லக்கா. வாசல்ல 'ஸ்டிக்கர்' கோலத்தை தரையில ஒட்டியிருக்கேன். அதை கவனிக்கலையா? எங்கக்கா... மாவு கோலம் போடுறது? காலையில எழுந்தா ரெண்டு பேரும் வேலைக்கு போறதுக்கே நேரமாயிடுது. அதான் 'ஸ்டிக்கர்' கோலம். ஒரு மாசம் ஆச்சுன்னா வேற 'டிசைன் ஸ்டிக்கர்' கோலத்தை ஒட்டிடுவேன். இதுக்கெல்லாம் நேரத்தைச் செலவு பண்ண முடியலைக்கா."

அதை ராஜலட்சுமியால் மனதளவில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் மறுப்பு தெரிவிக்காமல் அமைதியானாள்.

சாந்தி, அக்காளின் மறுப்பை மீறி காப்பியைக் கொடுத்தாள். ராஜலட்சுமிக்குப் பிடிக்கவில்லை. அது 'டிகாஷன்' காப்பி இல்லை என்று தெரிந்தது. 'டிகாஷன்' காப்பி குடித்தவர்களுக்கு 'ரெடிமேடு' காப்பி குடிக்கப் பிடிக்காது. என்றாலும் அமைதியாய் குடித்து முடித்தாள்.

## 8

**கா**லையில் எழுந்தவுடன், உஷாவுக்கு அண்ணனின் ஞாபகம் வந்தது.

அப்பா குளியல் அறைக்கு போயிருந்தார்.

உஷா, 'செல்'லில் விவேக்கின் எண்களை அழுத்தினாள்.

"ம்... சொல்லு. அம்மா பக்கத்து அறையில இருக்காங்க".

மிக மெல்லிய குரலில் விவேக் பேசினான்.

"அம்மா அலுவலக விஷயமா இன்னிக்கு ராத்திரிதானே திருச்சி போறதா சொன்னங்க?"

"ஆமா."

"அப்ப நாளைக்கு காலையிலேயே நான் அங்கு வரவா?"

"ம்! வா... வா. நாம ரெண்டு பேரும் சேர்ந்து சமைச்சு சாப்பிடலாம்."

"ஐ... நீ சொல்லச் சொல்ல இப்பவே எனக்கு தரையில கால் நிக்க மாட்டேங்குது"–உஷா குதித்தாள்.

"பின்ன... அப்பா, அம்மா, நான், நீ எல்லாரும் சேர்ந்து ஒற்றுமையா

இருந்தா வாழ்க்கை இன்னும் எவ்வளவு மகிழ்ச்சியா இருக்கும்? அவங்க ரெண்டு பேரும் சேர்ந்து இருந்தாலே நமக்கு யானை பலம் கிடைச்ச மாதிரி."

"ஆமாண்ணா. அது மட்டுமா... ஒருவருக்கொருவர் தேவையில்லாம சண்டை போட்டு விவாகரத்து வாங்கிட்டாங்க. அவங்க ரெண்டு பேரும் மனசுல சந்தோஷமா இருக்காங்களான்னு தெரியலை. ஆனா... நமக்கு எவ்வளவு பெரிய அவமானம்?"

"சரியா சொல்ற உஷா. இது நமக்கு பெரிய அவமானம்தான்."

"அதுமட்டுமில்ல.... நண்பர்கள் எல்லாம் அவங்க அப்பா–அம்மாவோடு சேர்ந்து வாழ்ந்து, அவங்களுக்கு பெற்றோர் அன்பு கிடைக்குது. அதை நினைச்சுப் பார்க்கிற என் மனசு தவிக்குதுண்ணா... தப்புதான்... என்ன பண்றது? என் மனசுல சில சமயம் பொறாமைகூட வருது" – பேசிக்கொண்டிருந்தவள் கண்களில் கண்ணீர் கோர்த்தது.

மேற்கொண்டு பேச முடியவில்லை. நாக்கு தழுதழுத்தது.

விவேக்கும் சில விநாடிகள் அமைதியாக இருந்தான்.

'சில நேரம் மனதில் இருக்கும் வேதனைகளை வெளியே கொட்டிவிடுவது நல்லதுதான்' என்று நினைத்தான்.

"ஏய்..."

"சொல்லுண்ணா."

"எதுக்கு அழற? எல்லாம் முடிஞ்சு போச்சு. மனசுக்குள்ள விரிசல் இருந்தா, உட்கார்ந்து பேசித் தீர்க்கலாம். இவங்க கோர்ட்டு வரைக்கும் போய் சட்டப்படி பிரிஞ்சுட்டாங்க. எல்லாமே நம்மோட தலையெழுத்து. அவங்க பிரியும்போது, நீ அஞ்சாவது– நான் எட்டாவது படிச்சிக்கிட்டு இருந்தோம். நாம அப்ப குழந்தைகள்தானே. நம்மால அவங்க பிரிவைத் தடுக்க முடியல. இப்ப நமக்கு வயது– மனசு முதிர்ச்சி ஆகிடுச்சு. இந்நேரம் அப்படி நடக்கிற மாதிரி இருந்தா, நாம ரெண்டு பேரும் சேர்ந்து தடுத்திருக்கலாம்."

"சரியா சொன்னேண்ணா. அப்பா அடிக்கடி அம்மாகிட்ட சொல்வாங்களாம்."

"என்னன்னு?"

"நாம ரெண்டு பேரும் எந்த விதத்திலேயும் ஒத்துப் போக முடியலை. சட்டப்படி விவாகரத்து வாங்கி பிரிஞ்சுடலாம்னு சொல்ற. ஆனா நாம ரெண்டு பேரும் சேர்ந்து உருவாக்கின குழந்தைகளை நினைச்சுப்



பார்க்கணும். எந்த தப்பும் பண்ணாத அவங்களைப் பிரிக்கிறது தப்பு இல்லையான்னு கேட்பாராம்."

"ம்... என்ன பண்றது? அவங்களுக்குள்ள விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாமப் போச்சு. சரி, விடு. அவங்கதான் அப்படி நடந்துக்கிட்டாங்க. நாம சகிப்புத்தன்மையுடன் வாழணும். அவங்க செய்த தப்பு, நமக்கு ஒரு பாடம்."

"ஆமாண்ணா. அப்பா வர்றார். நான் போனை வச்சிடறேன். நாளைக்கு சந்திக்கலாம்."

உஷா படபடப்புடன் 'பட்'டென்று போனை அணைத்தாள்.

"யாரும்மா போன்ல?"

அப்பா கேட்டதும் அதிர்ந்தாள்.

"ம்... அப்பா... வந்து... அஞ்சனா பேசினா?"

"ஓ... எல்லாப் போட்டியிலும் முதலிடம் வருவாள்ன்னு சொல்லுவியே அவளா?"

"ம்... ஆமா"– தடுமாறினாள்.

"என்னவாம்?"

இவளுக்கு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது.

"நாளைக்கு காலையில தேசிய மாணவர் படை வகுப்பு இருக்கு. சீக்கிரமே வந்துடுன்னு ஞாபகப்படுத்தினா."

"ஓ..." என்றவர், "ஆமா... இன்னிக்குத்தான் பள்ளிக்கூடம் போகப்போறியே! ரெண்டு பேரும் ஒரே வகுப்புதானே?" சந்தேகத்தோடு கேட்டார்.

"இல்ல... ஆமாப்பா. வந்து... இன்னிக்கு அவ விடுப்பு எடுத்துக்கறா."

"நல்லப் பொண்ணு. உனக்கு ஞாபகப்படுத்தறா" –சொல்லிவிட்டு ரவி நகர,

உஷா, 'அப்பாடா' என்று பெருமூச்சுவிட்டாள்.

## 9

அடுத்த நாள் விடியற்காலை.

சரியாக 4.30 மணிக்கெல்லாம் ராஜலட்சுமிக்கு விழிப்பு வந்தது.

சென்னையிலும் அப்படித்தான். அதற்கு பிறகு தூக்கம் வராது. அது ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும் சரி!

பல் தேய்த்துவிட்டு, சமையல் அறைக்குள் நுழைந்தாள். 'பிரிட்ஜ்'ல் இருந்து பாலை எடுத்து காய்ச்சினாள்.

'ரெடிமேட்' காப்பி பவுடரை பாலில் கலந்து காப்பியை தயார் செய்துவிட்டு, சமையல் அறையை நோட்டமிட்டாள்.

பாதி டப்பாக்கள் மளிகைச் சாமான்கள் இல்லாமல் காலியாக இருந்தன. சமையல் மேடையின் ஓரத்தில் பிரட்டும், ஜாமும் திறந்தே கிடந்தன. பக்கத்திலே இரண்டு 'நூடுல்ஸ் பாக்கெட்'டுகள்.

'இவ... என்ன சமைச்சு சாப்பிடுறா? என்ன குடும்பம் நடத்தறா? காய்கறிகள் ஏதாவது இருந்தா சமைக்க ஆரம்பிக்கலாமே? சாந்தி எப்ப எழுந்துப்பாள்ன்னு தெரியலையே? இன்னிக்கு திங்கட்கிழமை. எப்படியும் அவளும், அவ வீட்டுக்காரரும் வேலைக்குப் போகணும். சரி, நாம சும்மாதானே இருக்கோம். சமைச்சுட்டா போகுது...' என்றபடி 'பிரிட்ஜ்'யை திறந்தாள்.

உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், குடமிளகாய் இருந்தன.

'குடமிளகா சாம்பார், உருளைக்கிழங்கு பொரியல்... சரியா?'

ராஜலட்சுமி தனக்குள் கேட்டுக்கொண்டு கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி ஐந்தைத் தாண்டி இருந்தது.

குளித்துவிட்டு வந்து ஒருபுறம் குக்கரில் அரிசியையும், பருப்பையும் வைத்தாள்.

இன்னொருபுறம் காய்கறிகளை நறுக்கி பொரியல் தயார் செய்ய ஆரம்பித்தாள்.

மணி *6.45.*

சாந்தி மெதுவாக எழுந்து, வரவேற்பறைக்கு வந்து சோம்பல் முறித்தாள்.

'அக்கா எங்க?'– அவள் கண்கள் தேடின.

அதே நேரத்தில் சாம்பார், உருளைக்கிழங்கு வாசனை மூக்கைத் துளைத்தது.

சந்தேகத்தோடு சமையல் அறைக்குப் போனாள். அங்கே அக்கா சமைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்து,

"என்னக்கா... சமைச்சுக்கிட்டு இருக்கியா?"– ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஆமா... சாந்தி."

"எதுக்குக்கா கஷ்டப்படற? இங்க வந்தும் நீ வேலை செய்யணுமா? பேசாம தூங்க வேண்டியதுதானே! நாங்க வேலைக்கு போனாலும், போகாவிட்டாலும் ஏழு மணிக்குத்தான் எழுந்திருப்போம்."

"அப்ப எழுந்து சமைச்சுட முடியுமா?"– வியப்புடன் கேட்டாள்.

"என்ன... அரிசியை குக்கர்ல வச்சுடுவேன். 'ரெடிமேடு' புளியோதரை, வத்தக்குழம்பு, ரசம் 'மிக்சிங்' எல்லாமே வாங்கி வச்சிருக்கேன். தொட்டுக்க கடையில வாங்கின சிப்ஸ், மிக்சர் இருக்கு. தயிருக்கு தொட்டுக்க ஊறுகா. அக்கா... வேலைக்கு போறவங்கள்ல பல பேர் இப்படித்தான் சாப்பிடுறாங்க. சனி, ஞாயிறுதான் வீட்டு சமையல். அதுலேயும் சில நேரம் ஓட்டல்தான்."

சாந்தி சொல்லச் சொல்ல ராஜலட்சுமிக்கு, தான் வேறு ஏதோ உலகத்துக்கு வந்தது போல இருந்தது!

"ஏம்மா... குழந்தை பாவம் இல்லையா?"

"அக்கா... அவளுக்கு காலையில சுடச் சுட நூடுல்ஸ், மத்தியானம் பிரட்– ஜாம். சமையல் வேலை சிம்பிள்."

"சரிம்மா. நான் இருக்கிற ஒரு வாரமும் தினம் சமைச்சுடறேன். யாரும் வெளியில சாப்பிட வேண்டாம்."

"ஓ... தேங்க்ஸ்"– பின்னால் வந்த தண்டபாணி சொன்னான்.

"சாந்தி."

"ம்..."

"வரவேற்பறை ஓரமா நிறைய துணியை அடுக்கி வச்சிருக்கியே! என்னது அது...?"

"ஓ... அதுவா? போட்டுக்கிட்டுப் போன துணிகள். எப்பவும் ஞாயிற்றுக்கிழமைதான் துவைப்போம். நேத்திக்கு நீ ஊர்ல இருந்து வந்தியா... துவைக்க நேரமே இல்ல."

"பரவாயில்ல. இன்னிக்கு நானே எல்லாத்தையும் துவைச்சுடுறேன்."

"அக்கா... உனக்கு எதுக்கு சிரமம்?"

"அப்படி இல்லம்மா. இத்தனை நாள் துணியை துவைக்காம வைக்கக்கூடாது. எனக்கு இதெல்லாம் சிரமம் இல்ல. ஆமா, பள்ளிக்கூடம் போயிட்டு தமிழரசி எப்ப வருவா?"

"நாலு மணிக்கு விட்டுடும். நானோ, அவரோ வர்றதுக்கு இரவு ஏழு இல்ல எட்டாகிடும். அதனால... இங்க பக்கத்துல ஒரு குழந்தைகள் காப்பகம் இருக்கு. ஒரு வயசு குழந்தையில் இருந்து பத்து வயசு பசங்க வரைக்கும் பார்த்துக்கிறாங்க. பள்ளிக்கூடம் விட்டா அவ நேர அங்க போயிடுவா. நான் இல்லாட்டா அவர்... யார் முன்னாடி வர்றமோ, அவளைப் போய் கூட்டிட்டு வந்துடுவோம்."

'ச்சே... ச்சே. ஒரு குழந்தை இப்படியா பள்ளிக்கூடம் விட்ட பிறகும் கஷ்டப்படும்?'– மனதுக்குள் வருந்திய ராஜலட்சுமி,

"இந்த ஒரு வாரமும் தமிழரசியை காப்பகத்துல் விட வேண்டாம். வீட்ல நான்தான் இருக்கேனே! பாவம் அவ. பள்ளிக்கூடத்திலே இருந்து நேரா வீட்டுக்கு வரச் சொல்லிடு."

"சரிக்கா. உன் சமையலை சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. நானும் அவரும் சாப்பிட்டுட்டு கிளம்பறோம்."

தமிழரசி, பள்ளிக்கூடத்துக்கு புறப்பட....சாந்தியும், தண்டபாணியும் அலுவலகத்துக்கு கிளம்பத் தயாரானார்கள்.

## 10

அடுத்த நாள்...

அப்பா எழுவதற்கு முன் உஷா எழுந்துகொண்டாள். 'அண்ணனுடன் இன்று மகிழ்ச்சியாய் இருக்கப் போகிறோம்' என்ற எண்ணத்தில் ஒவ்வொரு வேலையையும் சுறுசுறுப்பாய் செய்தாள்.

பீரோவில் சலவை செய்யப்பட்டு அடுக்கி வைத்திருந்த தேசிய மாணவர் படை சீருடையை எடுத்து அணிந்தாள்.

இடைப்பட்ட நேரத்தில் எழுந்த ரவி, காப்பியை தயார் செய்து உஷாவிடம் கொண்டு வந்தபோது... அவளை மாணவர் சீருடையில் முன்பே பலமுறை பார்த்திருந்தாலும், திரும்பவும் புதிதாய் வியப்புடன் ஏறிட்டான்.

"நீ... ஐ.பி.எஸ். வேலைக்கு போகலாம்மா."

அப்பா சொன்னதும் சிரித்தாள். கொடுத்த காப்பியை வாங்கி பருகினாள்.

"அப்பா... மணி ஆச்சு. நான் கிளம்பட்டுமா?"



"ஓ... தாராளமா"– வாசல் வரை வந்து வழி அனுப்பினான்.

பஸ் பிடித்து, தன் அம்மா குடியிருக்கும் வளாகத்துக்கு பக்கத்தில் இருந்த நிறுத்தத்தில் இறங்கினாள்.

வளாகத்தின் உள்ளே நுழைந்தபோது, வாசலில் நின்றிருந்த காவலன்– சீருடையுடன் வந்த உஷாவை அதிசயமாய் பார்த்தான். ஆனால், அவளைத் தடுத்து நிறுத்தி கேள்வி ஒன்றும் கேட்கவில்லை.

வீட்டுக் கதவு அருகே இருந்த அழைப்பு மணியை அழுத்தினாள். அது இனிய இசையை வீட்டின் உள்ளே பரப்பியது.

அதன் இசையைக் கேட்ட விவேக், தலையை நிமிர்த்தி சுவர் கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி எட்டு.

'உஷாவா?'– என்று தனக்குள் சந்தேகத்துடன் கேட்டுக்கொண்டே, படித்துக்கொண்டிருந்த தினசரியை மேசை மீது வைத்துவிட்டு, கதவைத் திறந்தான்.

எதிரில் உஷா.

ஆச்சரியமாய் கண்கள் விரிய பார்த்தான்.

"ஏய்... என்ன இது! சீருடையில் வந்திருக்க?"

"அப்பாகிட்ட 'தேசிய மாணவர் படை வகுப்பு இருக்கு'ன்னு பொய் சொல்லிட்டு, சீருடையை மாட்டிக்கிட்டு இங்க வந்துட்டேன். அப்பத்தானே சந்தேகம் வராது."

விவேக் சிரித்தான்.

"வா... வா"– அன்பாய் கூப்பிட்டான்.

'ஷூ'வைக் கழட்டி வரவேற்பறையின் ஓரத்தில் வைத்துவிட்டு, பிரமாண்டமான ஷோபாவில் உட்கார்ந்தாள்.

விவேக் கதவை உள்தாழ் போட்டுவிட்டு வந்தான்.

"என்ன குடிக்கிற? காப்பி... இல்ல வேற ஏதாவது?"

"அண்ணா... அப்பாகிட்ட பொய் சொல்லிட்டு வந்தது மனசுக்கு கஷ்டமா இருக்கு..."– வருந்தினாள்.

"ம்... பொய் சொல்றது தப்புதான். பரவாயில்லை... மறந்துடு. அண்ணனை பார்க்கத்தானே வந்திருக்கே?"

சமாதானப்படுத்தினான்.

"ம்... சொல்லு! என்ன குடிக்கிற?"

"நீ காப்பி எல்லாம் தயார் பண்ணுவியா?"

"அது மட்டுமா... டிபன் பண்ணுவேன். பொரியல், சாம்பார் எல்லாமே வைக்க தெரியும்."

"ஓ..."– வியப்படைந்தவள், 'ம்... எனக்கு வரப்போற அண்ணி ரொம்ப கொடுத்து வச்சவங்க."

தலையை ஆட்டி கண்களை சிமிட்டி சொன்னாள்.

"ஏய்... கிண்டலா? என்ன குடிக்கிற. அத முதல்ல சொல்லு."

"டீ."

விவேக், தேநீர் தயாரிக்க சமையல் அறைக்குப் போனான்.

உஷா உட்கார்ந்தபடியே வரவேற்பறையை வேடிக்கை பார்த்தாள்.

பெரிய சுவர்க் கடிகாரம்!

இரண்டு பெரிய இயற்கைக் காட்சிகள், 'பிரேம்' போடப்பட்டு சுவரில் மாட்டப்பட்டிருந்தன.

வரவேற்பறையின் மையப் பகுதியில்– மேல் கூரையில் இருந்து அழகிய தொங்கு விளக்கு போடப்பட்டிருந்தது. அதன் அழகை ஒரு நிமிடம் ரசித்தாள் உஷா.

அங்கே இடது மூலையில் மிகப்பெரிய வண்ணத் தொலைக்காட்சி. அதன் மேல்... தங்க வண்ண 'பிரேம்' போட்ட படம்.

அதில் அம்மாவும், விவேக்கும் சிரித்துக்கொண்டிருந்தனர்!

அம்மாவையே ஏக்கமாய் பார்த்தாள்.

"அம்மா."

உஷாவின் உதடுகள் அவளையும் அறியாமல் உச்சரித்தன.

'எப்படி... நான் இல்லாம உன்னால இருக்க முடியுது?

உனக்கு நான் வேண்டாமா?

என் மேல உண்மையிலேயே பாசம் இல்லையா?'

"ஏய்... என்ன யோசனை பண்ணிக்கிட்டு இருக்க?" –விவேக் கேட்டபடி இரண்டு தம்ளர்களில் தேநீரைக்கொண்டு வந்து, ஒரு தம்ளரை தங்கையிடம் கொடுத்தான்.

வாங்கிக்கொண்டவள்,

"அண்ணா... ரெண்டு வருஷத்துக்கு முன், அரை மணி நேரம் இங்க வந்துட்டு ஓடிப் போயிட்டேன் இல்ல."

உஷாவுக்கு பழைய நினைவு மலர்ந்தது!



"ஆமா... நல்லா ஞாபகம் இருக்கு. அதற்கு அப்புறமா இப்பத்தான் வர்ற. என்ன பண்றது? கணவனும், மனைவியும், அதான்... நம்ம அப்பா – அம்மா ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போயிருந்தா நமக்கு இப்படியொரு நிலைமை வந்திருக்குமா?"

"ஆமாண்ணா... அநாவசியமா சண்டை போட்டு பிரிஞ்சுட்டாங்க. நம்ம ரெண்டு பேரோட வாழ்க்கையைப்பத்தியோ, நம்ம மனசுல அவங்க மேல நாம வச்சிருக்கிற அன்பைப் பத்தியோ கொஞ் சம்கூட யோசிக்கலை. அவங்களா செய்த தப்புக்கு நாம பலிகடா ஆகிட்டோம்" என்று பேசிக்கொண்டே உஷா தன் அருகே டீபாயின் மீதிருந்த வண்ணமிகு அட்டையுடன் கூடிய நோட்டை, 'என்ன இது?' என்று பிரித்துப் பார்த்து படித்தாள்.

"அண்ணா... காதலா?"– வியப்பும், இனம் புரியாத பயமும் கலந்து கேட்டாள்.

"ச்சீ... ச்சீ. வெறும் வார்த்தை மாயை."

"நீ கவிதை எழுதுவியா... என்கிட்ட சொன்னதே இல்ல?" வியப்புடன் கேட்டாள்.

"ஏய்... நான் எழுதுறதெல்லாம் கவிதையா? ஏதோ மனசுல அப்பப்ப தோணுறதை நோட்டுல எழுதுவேன்."

"எனக்கும் கவிதைகள்னா ரொம்பப் பிடிக்கும். படிக்கட்டுமா?"

"ம்! படி... படி."

**"நீ... பார்க்கும் பார்வையில்**
**பாதி பலம் இழந்து போகிறேன்!**
**நீ... சிரிக்கும் சிரிப்பில்**
**சிந்தனை இழந்து போகிறேன்!**
**நீ... அருகில் வந்து அன்பு**
**காட்டும்போது**
**உன் உயிரில் கலந்து போகிறேன்!**
**நீ...**
**மண்ணில் நடந்து போன**
**பாதச் சுவடுகளுக்கு –**
**கொலுசு அணிவித்து**
**மகிழ்கிறேன்!**

இனி,
தேனிசையைக் கேட்க
வானொலி- தொலைக்காட்சி
தேவையில்லை!
நீ... நடந்து வருகையில்
உந்தன் கொலுசு
எழுப்பும் இசை
என் செவிகளுக்குப் போதுமே!"

"அண்ணா."

"ம்..."

"எப்படி இப்படியெல்லாம் யோசிச்சு எழுதற?"

கவிதையைப் படித்த உஷா ஆச்சரியப்பட்டாள்.

"நல்லாவா இருக்கு?" –சந்தேகத்தோடு கேட்டான்.

"ம்..."– தலையாட்டினாள்.

"அப்ப சரி. அடுத்ததா ஒருதலைக் காதலைப்பத்தி சில வரிகள் எழுதி இருக்கேன். அதையும் படிச்சிடு."

விவேக் சிரித்துக்கொண்டே சொன்னதும், அடுத்த பக்கத்தைப் புரட்டினாள் அவள்.

"நீ...!
என்னைப் பார்த்து வீசும்
ஏளனப் பார்வையெல்லாம்– எனக்கோ
ஏக்கப் பார்வைகள்!
நீ...
என்னைப் பார்க்கப் பிடிக்காமல்
முகத்தைத் திருப்பிக்கொண்டு
செல்கையில் ஏற்படும்
வசந்தக் காற்றை சுவாசித்துத்தானே
நான்...
இன்னமும் வாழ்கிறேன்!
நீ...
தினம் தினம்



என்னை விட்டுவிட்டு வெகுதூரம் போவதாய்
நினைக்கிறாய்–
நீ...
என் இதயத்தில்
கலந்திருப்பது தெரியாமல்...!

கவிதையைப் படித்த உஷா, நோட்டைக் கீழே வைத்தாள். தன் கைகளைத் தட்டி பாராட்டு தெரிவித்தாள்.

"அண்ணா... இன்னும் நிறைய எழுதணும். 'எழுத எழுதத்தான் எழுத்துல அழகு மிளிரும். கோர்வை வரும். படிக்க சுவையா இருக்கும்'னு நிறைய பேர் சொல்லக் கேட்டு இருக்கேன்."

"நீ சொல்றது ரொம்பவே சரி. நிறைய எழுதணும். எழுதிக்கிட்டே இருக்கணும். அப்பத்தான் எழுத்துல ஒரு பக்குவம் வரும்னு என்னுடைய எழுத்தாள நண்பரும் சொல்லி இருக்காரு."

"அண்ணா."

"உன்கிட்ட ஒரு விஷயம் கேக்கணும்."

"ம்... என்ன?"

"அந்த வீட்ல அப்பாவும், அம்மாவும் இருக்கிற படம் ஏதாவது இருக்கான்னு தேடிப் பார்த்தேன். கிடைக்கல. அதே மாதிரி நாம நாலு பேரும் சேர்ந்து இருக்கிற படம் இருக்கான்னும் பார்த்தேன். அதுவும் கிடைக்கல. உன்கிட்ட ஏதாவது படம் இருக்கா?" – ஏக்கத்துடன் கேட்டாள்.

"உன்னை மாதிரி எனக்கும் ஆசை வந்து, ஒரு நாள் வீட்ல தேடிப் பார்த்தேன். ஒரு படம்கூட கிடைக்கல. அநேகமா விவாகரத்துக்கு அப்புறம், 'ரெண்டு பேரும் உறவே இல்லை. போட்டோ எதுக்கு?'ன்னு எல்லா போட்டோவையும் கிழிச்சிட்டாங்க போல இருக்கு. அப்புறம் ஒரு நாள் எதுக்கோ பழைய சூட்கேஸை எடுத்தேன். அதுல ஒரு படம் இருந்துச்சு.

விவேக் சொல்ல, சட்டென்று தங்கையின் கண்கள் மின்னின!

"என்ன படம் அது?"

'அதைப் பார்க்க வேண்டும்' என்ற ஆவலுடன் கேட்டாள்.

"அதில் அம்மா. பக்கத்துல அப்பா. அடுத்து நான். அம்மா மடியில நீ. உனக்கு எட்டு வயசு இருக்கும். நாம நிக்கிறதுக்கு பின்னால ஒரு பெரிய மலைத்தொடர்ச்சி இருக்கு. அநேகமா அந்த படம்,

சிறுகதை




“என்னண்ணே... சரியா சாப்பிடாம எழுந்துட்டீங்க! ரொம்ப நாள் கழிச்சி எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க. என் சமையல் பிடிக்கலையா? என்ன அண்ணி... உங்களுக்கும் பிடிக்கலைதானே?” என்று சாப்பிட்டுக்கொண்டிருந்த தன் அண்ணன் கோகிலன் மற்றும் அண்ணி கலைவாணியைக் கேட்டாள் கோமதி.

“ரொம்ப நல்லா இருக்கு...” என்றபடியே கை கழுவ வெளியே சென்றாள் கலைவாணி.

“அண்ணி கூட வருத்தப்பட்டாங்க! நீங்க ஏதாவது குறையைச் சொல்லி- சரியா சாப்பிடுறதே இல்லைன்னு... ஏண்ணா?” என்றாள்.

“அது வேற ஒண்ணுமில்ல கோமதி... வீடு கட்டினதுல என் சம்பளத்துல பாதி, கடனுக்கே சரியாப் போகுது. ஏழு பேர் சாப்பிடணும். எல்லாருக்கும் போட்டுட்டு, சில நேரங்கள்ல உன் அண்ணி சரியா சாப்பிடுறதே இல்ல! அதனாலதான் உப்பு இல்ல, காரம் இல்லன்னு ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி- என் சாப்பாட்டுல பாதியையாவது அவ சாப்பிடட்டுமேன்னுதான் அந்த மாதிரி செய்யுறேன்.

இப்பக்கூட இங்க அதிகமா சாப்பிட்டா, உண்மையிலேயே அவளோட சமையல் எனக்குப் பிடிக்கலைன்னு நெனச்சி ரொம்பக் கவலைப்படுவா” என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது தற்செயலாக கேட்ட கலைவாணி... தன் கணவனின் பாச உணர்வைப் புரிந்து பூரித்துப் போனாள். கூடவே தங்கை கோமதியும்தான்! ★

-கு.கோவிந்தராஜன்



## நைல்

நைல், உலகின் மிக நீளமான நதி. ஆப்பிரிக்கக் கண்டத்தின் வட கிழக்குப் பகுதியில் 6,695 கி.மீ நீளத்துக்கு தெற்கில் இருந்து வடக்கு நோக்கிப் பாய்கிறது. இதனால் எகிப்து, சூடானில் 85 லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பயனடைகிறது.

இதன் பாதையில் இது வெள்ளை நைல், நீல நைல் என்று பெயர் பெற்றுள்ளது. எத்தியோப்பியா, சூடான், தெற்கு சூடான், எகிப்து, உகாண்டா நாடுகளிலும் பாய்கிறது. இறுதியில் எகிப்து நாட்டில் அலக்சாண்டிரியா துறைமுகம் அருகில் கடலில் கலக்கிறது.

கொடைக்கானல் சுற்றுலா போனப்ப எடுத்ததுன்னு நினைக்கிறேன். அம்மா இந்த படத்தை ஏன் வச்சுக்கிட்டு இருந்தாங்கன்னு தெரியலை இல்லை... கிழிக்க மறந்துட்டாங்களான்னும் புரியல."

"அண்ணா... 'போட்டோ'வைப் பார்க்கலாமா?"

ஆசையில் அவள் நெஞ்சு படபடத்தது!

"நிச்சயமா! நான் அதை பார்த்ததும் எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா? பெரிய பொக்கிஷமே கிடைச்ச மாதிரி இருந்தது. உடனே அதை பத்திரமா எடுத்துப்போய், என் அறையில் வச்சுட்டேன். இதோ... இப்ப கொண்டு வந்து காட்டுறேன்" என்று நகர்ந்தவன்,

"ஏய்... நீயும் வா" என்றான்.

விவேக்கை பின்தொடர்ந்து அவனது அறைக்குப் போனாள் அவள்.

அவன் தனது அறையை மிக சுத்தமாக வைத்திருந்தான்.

'தான் அதற்கு நேர் எதிர்' என்று நினைத்துக்கொண்டாள் தங்கை.

அலமாரி முழுவதும் கணினி சம்பந்தப்பட்ட புத்தகங்களை அடுக்கி வைத்திருந்தான்.

தன்னுடைய மேசையில் வைத்திருந்த படத்தை எடுத்து நீட்டினான்.

கையில் வாங்கிய உஷா, சில நிமிடங்கள் ஏக்கத்துடன் அதைப் பார்த்தாள். அவளின் கைகள் நடுங்கின.

"அண்ணா..."–கூப்பிட்ட உஷாவின் உடம்பு குலுங்கியது.

விவேக் அவளை ஆறுதலாய் அணைத்தான்.

"அண்ணா."

"ம்..."

"இந்த படத்தை ஒரு பிரதி போட்டு எனக்குத் தர்றியா? இனிமே வாழ்க்கையில நாம நாலு பேரும் எங்கே சேர்ந்து இருக்கப்போறோம்?"

உஷாவின் வார்த்தைகள் கதறலுடன் வெளிவந்தன.

"திரும்பத் திரும்ப அழாதே. நம்ம அப்பா– அம்மாவோட வாழ்க்கை நமக்கு நல்ல ஒரு பாடம்."

உஷா அந்த படத்தை நெஞ்சில் அணைத்துக்கொண்டாள்.

"அம்மா...



உனக்கு அப்பா வேண்டாம்!

அப்பா...

உங்களுக்கு அம்மா வேணாம்!

ஆனா எனக்கும், அண்ணாவுக்கும் நீங்க ரெண்டு பேரும் வேணுமே! நாங்க என்ன தப்பு பண்ணினோம்...? எங்களுக்கு எதுக்கு இந்தத் தண்டனை?"

அவள் வேதனையில் பேச,

"உஷா... வாழ்க்கைங்கிறது இதோடு நின்னு போகற விஷயம் இல்ல. நாம இன்னும் வெகுதூரம் பயணிக்க வேண்டியிருக்கு."

–சொன்ன விவேக்கின் கண்களும் பாசத்தில் கலங்கின.

"நீ சொல்றது சரிண்ணா. ஆனா, அம்மாவைப் பார்க்கணும்... அவங்களோடு இருக்கணுங்கிற ஏக்கத்துல– எத்தனை நாள், நடுராத்திரி தூக்கத்துல எழுந்து அழுதிருக்கேன் தெரியுமா? அந்த வலியை புரிய வைக்க முடியாது. யாருக்கும் அப்படிப்பட்ட வேதனை வரக்கூடாது."

"உன் மனசு எனக்குப் புரியுது. வா... ஏதாவது சமைக்கலாம்."

இருவரும் சமையலறைக்குள் போயினர்!

## 11

உஷாவுக்கு சமையலறை பிடித்திருந்தது. ஒவ்வொன்றாக பார்த்தாள்.

விவேக்... 'பிரிட்ஜ்'ல் இருந்து வெண்டைக்காயையும், கேரட்டையும் எடுத்தான். பிறகு அரிசியை அலம்பினான். குக்கரில் அரிசி– பருப்பை வேக வைக்க ஏற்பாடு செய்தான்.

உஷா, அவன் கொடுத்த காய்கறிகளை கழுவிவிட்டு, மேடையில் வைத்து விறுவிறு என்று நறுக்க ஆரம்பித்தாள்.

விவேக், வெண்டைக்காய் பொறியலையும்– கேரட் சாம்பாரையும் தயார் செய்தான்.

"அண்ணா... 'பிரிட்ஜ்'ல வேற என்ன இருக்கு? எனக்குப் பசிக்குது. சமையல் தயாராகிற வரைக்கும் எதையாவது கொறிக்கிறேன்."

"ம்... சாக்லேட்– பழ ஜூஸ் இருக்கு. எதுவானாலும் எடுத்துக்க."

"ஓ... நன்றி! ஆமா, உனக்கு சாக்லேட்டுன்னா ரொம்ப பிடிக்கும்ல?"

"'பிரிட்ஜ்'ஜைத் திறந்து பாரு. சாக்லேட்டை அடுக்கி வச்சிருக்கேன்."

உஷா, சாக்லேட்டை எடுத்து வாயில் போட்டுவிட்டு வரவேற்பறைக்கு வந்தாள்.

"இந்த சீருடை சவுகரியமா இருக்கா? அம்மாவோட சேலையோ, நைட்டியோ உனக்கு சரிப்படாது. என்னுடைய சட்டையும், பேண்ட்டும்கூட சரிப்பட்டு வராது."

"பரவாயில்லைண்ணா. இந்த சீருடையிலேயே இருந்துட்டுப் போறேன். இன்னும் கொஞ்ச நேரம்தானே?"

அப்போது விவேக்கின் செல்போன் ஒலித்தது.

வரவேற்பறையின் அழகை ரசித்தாள் அவள்.

தரையின் மார்பிள், சுவரின் பூச்சு நிறத்துக்கு ஏற்ற பொருத்தமான வண்ணத்தில் 'ஷோபா செட்' போடப்பட்டிருந்தது.

ஜன்னலை மறைப்பதற்காகப் போட்டிருந்த அழகிய திரைச்சீலைகள் காற்றில் அழகாய் ஆடின.

செல்போனை எடுத்த விவேக், 'அம்மா' என்று சைகை காட்டினான்.

நடந்துகொண்டிருந்த உஷா, சட்டென்று தன் நடையை நிறுத்திவிட்டு அமைதியானாள்.

"டேய்... சமையல்காரி வந்தாளா?"

"வந்தா... சமைக்க வேண்டாம்னு திருப்பி அனுப்பிட்டேன்."

"ஏன்டா?"

"போரடிக்குது! இன்னிக்கு வெளியில சாப்பிட்டுக்கிறேன்ம்மா."

"சரி, சாப்பிடு. கம்ப்யூட்டரை பார்த்துக்கிட்டே பட்டினி கிடக்காதே. எனக்கு இங்க எந்தப் பிரச்சினையும் இல்ல. விருந்தாளிகள் அறையில தங்கி இருக்கேன். வேளா வேளைக்கு உணவு 'டாண்'னு வந்துடுது."

"சரிம்மா. என்னைப் பத்தியும் கவலைப்படாதே" என்றவன், சைகையால் தங்கையைப் பக்கத்தில் அழைத்தான்.

சத்தம் வராதவாறு தன் காலடிகளை வைத்து வந்தாள்.



கைப்பேசியை அவளின் காதில் வைத்தான்.

"ஜாக்கிரதைடா. ஒழுங்கா சாப்பிடு."

"ம்..."– உஷாவே மெதுவாக பதில் சொன்னாள்.

ராதா போனை வைத்தாள்.

அம்மா சொன்ன, 'ஜாக்கிரதை' என்ற வார்த்தை– உஷாவை நெகிழச்செய்தது!

அதை தன்னிடம் சொன்னதாக நினைத்து மகிழ்ந்தாள்.

"அண்ணா! நீ கவிதை எழுதறியே... அது எப்படி தானாக வந்ததா? இல்ல..."

"ஓ... போச்சுடா! இன்னும் நீ அந்த கவிதை விஷயத்தை மறக்கலையா?"

"சில பேருக்கு காதலிக்க ஆரம்பிச்சா, கவிதை எழுத வரும்னு கேள்விப்பட்டு இருக்கேன்"– தயங்கியபடி சொன்னாள்.

அவளை ஆச்சரியமாய் பார்த்தான்.

"ம்... 'பிளஸ் டூ' படிக்கிற! எல்லா விஷயத்தையும் தெரிஞ்சு வச்சிருக்கே. உதைக்கிறேன்"– சொல்லிவிட்டு சிரிக்க, உஷாவும் அந்த சிரிப்பில் கலந்துகொண்டாள்.

"அண்ணா."

"ம்..."

"உனக்கு அப்பாவைப் பார்க்கணும்னு ஆசையா இல்ல?"

"இருக்கு... ஆனா, என்னைப் பார்க்கணும்னு அப்பா ஆசைப்படுறதா தெரியலையே?"

"ஆமாண்ணா... ஆனா வெளியில சொன்னதில்லை. ம்... அண்ணா! அம்மா என்னைப்பத்தி ஏதாவது பேசுவாங்களா?"

கேள்வியை கேட்டுவிட்டு, என்ன பதில் வரப்போகிறது என்று ஆவலுடன் பார்த்தாள்.

"இல்ல..."

விவேக் சொன்னதும், ஏமாற்றம் அடைந்தாள்.

"உஷா... நீ எதுக்கும் கவலையோ, வருத்தமோ படக்கூடாது. அம்மாவோ, அப்பாவோ ஏதோ ஒரு பெரிய விஷயத்துக்காக பிரிஞ்சிருந்தா சரி... 'பரவாயில்லை'ன்னு மனசை தேத்திக்கலாம். ஆனா, ரெண்டு பேருக்கும் வெறும் 'ஈகோ'. அதான்... மோதிக்கிட்டு பிரிஞ்சுட்டாங்க. குடும்பத்தை சுமைன்னு நினைச்சுட்டாங்க.

அதோட பின்விளைவை நாம அனுபவிக்கிறோம். சரி, அதை விடு. சாப்பிடலாம்."

இருவரும் தாங்கள் சேர்ந்து சமைத்த உணவை பாசத்துடன் பரிமாறிக்கொண்டு சாப்பிட ஆரம்பித்தனர்.

## 12

வெள்ளிக்கிழமை...

ராஜலட்சுமி எப்போதும் போல விடியற்காலையிலே எழுந்துகொண்டாள்.

குளித்து முடித்துவிட்டு– கோலப்பொடியைக் கொண்டு, புள்ளிகள் வைத்து, வாசலில் அழகான கோலம் போட்டாள்.

ஒருபுறம் காப்பியைத் தயார் செய்தபடியே காலை சமையலையும் தயார் செய்தாள்.

மெதுவாக படுக்கையில் இருந்து எழுந்த சாந்திக்கு எப்போதும் போல வியப்பு!

ராஜலட்சுமி சமையலை முடித்திருந்தாள். தமிழரசிக்கு மதிய உணவுக்கு தக்காளி சாதம்– தயிர் சாதம் என்று கொடுக்காமல் ஒரு மாறுதலுக்காக பூரி பண்ணிக்கொடுத்தாள்.

"ஐ! பெரியம்மா... பூரியா?"–தமிழரசி கேட்டாள்.

"உனக்கு பூரின்னா ரொம்ப பிடிக்குமில்ல?"

"ஆமா" என்று உற்சாகமாக தலையாட்டியவள், "நன்றி பெரியம்மா" என்றாள்.

தண்டபாணி, சாந்தி, தமிழரசி மூவரும் சாப்பிட்டுவிட்டு– அலுவலகம், பள்ளிக்கூடம் என கிளம்பினர்.

மாலை நான்கு மணி...

தமிழரசி, பள்ளிக்கூடம் முடிந்து நேராக வீட்டுக்கு வந்தாள்.

"வாடா செல்லம்."

"பெரியம்மா! பிஸ்கெட் எங்கே இருக்குன்னு பார்த்து எடுத்து தர்றீங்களா?"

பசி பொறுக்க முடியாமல் கேட்டாள்.



ராஜலட்சுமி ஒரு தட்டில் முறுக்கையும், சீடையையும் வைத்து நீட்டியபோது... அதனை கையில் வாங்கியதும் ஆச்சரியத்துடன் பார்த்தாள்:

"ஏது... இது பெரியம்மா?"

"நான்தான் வீட்ல பண்ணினேன். முதல்ல கை– காலை அலம்பிவிட்டு வந்துடுறியா?"

"சரி... பெரியம்மா"– தட்டை மேசை மீது வைத்துவிட்டு, ஓடிப் போய் கை–கால்களை கழுவி வந்தாள்.

"பெரியம்மா... இதெல்லாம் உங்களுக்கு பண்ணத் தெரியுமா?"

"ம்... நிறைய தயார் பண்ணி டப்பா முழுக்க அடுக்கி வச்சிருக்கேன். நீ தினம் பள்ளிக்கூடம்விட்டு வந்த உடனே சாப்பிடலாம். சரியா?"

"நன்றி பெரியம்மா"– முறுக்கை கடித்துக்கொண்டே தமிழரசி சொன்னாள்.

"பெரியம்மா... அம்மா இதெல்லாத்தையும் கடையில் இருந்து வாங்கிட்டு வந்துடுவாங்க. வீட்ல பண்ண மாட்டாங்க.".

அடுத்து, ராஜலட்சுமி சூடான பாலை ஆற்றி, குழந்தையிடம் நீட்டினாள். அவள் பருகினாள்.

"ம்... கொஞ்ச நேரம் போய் விளையாடு. அப்புறமா வீட்டுப் பாடம் எழுதலாம். சரியா?"

வயிறு நிறைந்த திருப்தியுடன், "சரி..." என்று தலையாட்டினாள்.

இரவு தாமதமாய் வந்த சாந்தியும், தண்டபாணியும்... உணவு தயார் செய்து வைத்திருந்ததைக் கண்டு மகிழ்ந்தனர்.

துவைத்து– உலர்ந்த துணிகள் அவரவர் அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டு இருந்ததையும், வீடு சுத்தமாக காணப்பட்டதையும் பார்த்து, 'அக்கா... அக்காதான்' என்று மனதுக்குள் நினைத்தாள் தங்கை.

"சாந்தி."

"ம்... சொல்லுக்கா."

"நாளைக்கு நான் ஊருக்குப் போகணும். ஞாபகம் இருக்கா?"

ராஜலட்சுமி கேட்டதும், தங்கைக்கு மனசு பாரமானது!

"அக்கா... வந்து ஒரு வாரம் போனதே தெரியலை. இயந்திரமா இயங்கிக்கிட்டு இருந்த எங்களுக்கு, வீட்ல நீ இருந்தது எவ்வளவு உதவியா இருந்தது தெரியுமா...? தமிழரசிக்கு அப்படியொரு அன்பு

கிடைச்சது!"

ராஜலட்சுமி புன்னகைத்தாள்.

இவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த தமிழரசிக்கு அழுகை வந்தது.

"பெரியம்மா..."

"என்னடா கண்ணா?"

"நிஜமாவே நாளைக்கு ஊருக்குப் போறீங்களா?" –ஏக்கத்துடன் கேட்டவள், அழ ஆரம்பித்தாள்.

"அழக்கூடாது செல்லம்."

"இங்கேயே இருங்க பெரியம்மா."

"ம்... திரும்ப வருவேன். ஊர்ல பெரியப்பா, அண்ணனைப் பார்த்துட்டு வந்துடுறேன். சரியா...?"

"ம்..."

"அப்புறம், நீயும் விடுமுறைக்கு அங்க வந்துடு."

"சரி" என்று பலமாய் தலையாட்டிவிட்டு, பெரியம்மாவை இடுப்புடன் கட்டிக்கொண்டாள்.

'உறவுகள் என்னிக்குமே உதவும்' என்று நினைத்த சாந்தி, 'நாளை காலை முதல் வேலையாக கடைக்குப் போய் விலை உயர்ந்த பட்டுச் சேலை வாங்கி வந்து, அக்காவின் காலில் விழுந்து வணங்கி பரிசளிக்க வேண்டும்' என்று முடிவு செய்துகொண்டாள்.

## 13

ஞாயிற்றுக்கிழமை...

விடியற்காலை நான்கு முப்பது மணிக்கு அலாரம் அடித்தது!

ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்த சுப்பிரமணியம், அலாரத்தை நிறுத்திவிட்டு படுக்கையில் இருந்து எழுந்தார்.

'ஆறுக்கெல்லாம் ரெயில், சென்டிரல் வந்துடும். இப்ப வீட்ல இருந்து கிளம்பினா ரெயில் வர்றதுக்குள்ள போயிடலாம்.'

சோம்பல் முறித்து– பல் தேய்த்துவிட்டு– 'கிஷோரிடம் சொல்லிவிட்டு கிளம்பலாம்' என்று திரும்பவும் படுக்கை அறைக்கு வந்தார்.



அவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

'ம்... எழுப்பினா கண்டிப்பா எழுந்துக்க மாட்டான். கனவு உலகத்துல சஞ்சரிச்சுக்கிட்டு இருப்பான். சரி, வீட்டை வெளியில பூட்டிட்டு கிளம்புவோம்' என்று முடிவு பண்ணிக்கொண்டு பூட்டினார்.

பழைய காரில் ரெயில் நிலையத்துக்கு விரைந்தார்.

மணி ஆறு. ரெயில், பிளாட்பாரத்துக்கு வந்திருந்தது.

அந்தக்கூட்டத்திலும் சுப்பிரமணியம் தன் மனைவியை சரியாக அடையாளம் கண்டு, "ராஜலட்சுமி..." என்று கூப்பிட்டபடியே கையசைத்தார்.

தன் கணவனைப் பார்த்துவிட்டு அருகில் வந்தாள். சுப்பிரமணியம், அவள் கையில் இருந்த சூட்கேசை வாங்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்.

"என்னங்க... ஒரு வாரத்துல உடம்பு இப்படி இளைச்சுட்டீங்க?"– கவலையுடன் கேட்டாள்.

"நீ இல்லாமத்தான்டி!"

"ஒழுங்கா சாப்பிட்டீங்களா... இல்லையா?"– அவளின் கவலை தொடர்ந்தது.

"ஏதோ சாப்பிட்டோம். சரி, வா."

"ஆட்டோவுல போகணுமா... இல்ல கார் கொண்டு வந்திருக்கீங்களா?"

"கார் கொண்டு வந்திருக்கேன்."

"கிஷோர் எப்படி இருக்கான்? போன் பேசினா ஒரு நிமிஷத்துக்கு மேல பேச மாட்டேங்கிறான். இதேது 'பிரெண்டா' இருந்தா அரட்டை அடிப்பான்."

"அவனுக்கு என்ன? எப்பவுமே ஜாலி பேர்வழி. முதல்ல நீ ஈரோட்டுல தங்கை வீட்டுல நடந்த விஷயத்தைச் சொல்லு. அன்பா இருந்தாங்களா? நீ அங்க போனதே நம்ம வீட்டு இயந்திர வாழ்க்கையை மறந்துட்டு மகிழ்ச்சியா இருக்கலாம்னுதானே? நல்லா ஓய்வெடுத்தியா?"

சுப்பிரமணியம் படபடவென கேள்விகளை அடுக்கினார்.

"ஓய்வா... அத ஏன் கேக்கிறீங்க?"– சோர்வாய் பதில் சொன்னாள்.

"ஏன்... என்ன ஆச்சு?"– புரியாமல் கேட்டார்.

"நம்ம வீடுதாங்க நமக்கு சொர்க்கம்!"

"எப்பவுமே அவங்க அவங்களுக்கு அவங்க வீடுதான் சொர்க்கம்."

"நான் அதுக்கு சொல்லலீங்க."

"பின்ன?"

"அந்த வீட்ல, ஒரு நாள்கூட கோலம் போடறது கிடையாது."

"ஓ!"

"பாதி நாள், வீட்ல சமைக்கிறது கிடையாது. அப்படியே சமைச்சாலும் எல்லாம் 'ரெடிமேட்' ரசம், குழம்பு, புளியோதரை."

"ம்..."

"வீட்ல ஒரு சுத்தம் இல்ல. ஏதோ புருஷன்– பொண்டாட்டி, தங்குற விடுதிக்கு வந்து போற மாதிரி வந்துட்டுப்போறாங்க. அப்பப்பா...?" –குமுறினாள்.

"ராஜலட்சுமி"

"சொல்லுங்க."

"அவங்கள குத்தம் சொல்ல முடியாது. புருஷன், பொண்டாட்டி ரெண்டு பேரும் வேலைக்குப் போறாங்க. வீட்டைப் பார்த்துக்க ஏது நேரம்? அதையெல்லாம் நாம கண்டுக்கக்கூடாது. அவங்க மூணு பேரும் சந்தோஷமா இருக்காங்களா? அதப்பாரு. அதுதான் முக்கியம்."

சுப்பிரமணியம் சூட்கேசை பின் இருக்கையில் வைத்துவிட்டு, காரை எடுத்தார்.

"அது எப்படிங்க... அதைப் பார்த்துகிட்டு என்னால சும்மா இருக்க முடியும்? இந்த வாரம் முழுக்க நான்தான் காப்பி போட்டேன். வீட்டு வாசல்ல தினம் பெரிய பெரிய கோலம் போட்டேன். காலையில, ராத்திரியில விதம் விதமா சமைச்சேன். முறுக்கு, பலகாரமெல்லாம் பண்ணி வச்சேன்"– தான் செய்த வேலைகளை அடுக்கினாள்.

"அது சரி... ராஜலட்சுமி! ஒரு சந்தேகம்?"

"என்ன?"

"நீ எதுக்கு உன் தங்கை வீட்டுக்குப் போன?"

"எதுக்கு...? ஓய்வெடுக்கப் போனேன்..."

"ஓய்வு எடுத்தியா?"



"இல்ல! ஆமாங்க... என்னங்க கேள்வி இது? ஒரு வீடு சுத்தமா இல்லேன்னா, குடும்பம் அழகா இல்லேன்னா அதைப் பார்த்துகிட்டு சும்மா இருக்க முடியுமா?

காலையில நாலரை மணிக்கு எழுந்தா வேலையை முடிச்சுட்டு ராத்திரி தூங்க பதினொரு மணி ஆகிடும்ங்க."

"ம்..."– சுப்பிரமணியம் சிரித்தார்.

வீடு வந்தது.

சூட்கேசை எடுத்துக்கொண்டு, வீட்டைத் திறந்து இருவரும் உள்ளே போனார்கள்.

"கிஷோர்... கிஷோர். அம்மா வந்துட்டேன்டா?"– ராஜலட்சுமி குரல் கொடுத்தாள்.

"சரிம்மா... எல்லாம் காலையில பேசிக்கலாம். இப்ப தூங்கும்போது எழுப்பாத."

"ஏங்க?"

"ம்..."

"மணி எட்டாகப்போகுது. என்னோடு காலையில பேசறேன்னு சொல்றான்."

சுப்பிரமணியம் சிரித்தார்.

"என்னங்க இது... வீட்டை இப்படி குப்பை மாதிரி வச்சிருக்கீங்க?"– கோபத்துடன் கேட்டாள்.

"என்ன பண்றது? பொம்பளை இல்லாத வீடு இப்படித்தான் இருக்கும்."

"அது சரி... இதே பதிலைச் சொல்லிடுங்க. முதல்ல வீட்டைப் பெருக்கணும். ம்... நான் இந்த இடத்துலதானே துடைப்பத்தை வைப்பேன். எங்க காணோம்?"

"அதுவா... ரெண்டு நாள் முன்னாடி படுக்கை அறைக்கு ஒரு கரப்பான் பூச்சி வந்துச்சு. கிஷோர் அந்த துடைப்பத்தாலதான் அடிச்சான். ஆனா, அப்புறமா அதை எங்க வச்சான்னு தெரியலை"– விழித்தார்.

"அடடா... என்ன கருமம் இது? வீட்டைப் பெருக்கற துடைப்பத்தால யாராவது கரப்பான் பூச்சியை அடிப்பாங்களா? அறிவே இல்லாமப் போச்சு."

"அது சரி, எங்களுக்கு என்ன தெரியும்? இந்த வீட்டுல எல்லாமே

உன் கட்டுப்பாடு."

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது, வெளி வாசலில் சத்தம் கேட்டது.

"ஏங்க... பால் வந்துட்டுது. அஞ்சு நிமிஷத்துல காப்பி போட்டுக் கொண்டு வர்றேன்."

"சரி... டார்லிங்"– மனைவி ஊரில் இருந்து திரும்பி வந்த மகிழ்ச்சியில் சொன்னார்.

"என்னது அது... புதுசா டார்லிங்?"– ராஜலட்சுமி புருவங்களை உயர்த்திக் கேட்டாள்.

"ஓ! அதுவா? உன்னை... நான், 'என் கண்ணே'ன்னு சொன்னேன்."

"போங்க. வெட்கமா இருக்கு. ஒரு வாரம் வீட்ல இல்லேங்கறதுக்காக பாச மழை பொழியறீங்களா?"– வெட்கப்பட்டாள்.

"அப்படி இல்ல. நீ இந்த வீட்ல இருந்தாலே போதும். எனக்கும், கிஷோருக்கும் யானை பலம் கிடைச்ச மாதிரி ஆகிடும். சரி, நான் போய் பத்திரிகைப் படிக்கிறேன்."

ஐந்தாவது நிமிடம்!

"இந்தாங்க காப்பி"– நீட்டினாள்.

சுப்பிரமணியம் ஒரு வாய் பருகினார்.

"ராஜலட்சுமி..."– அன்பாய் கூப்பிட்டார்.

"என்ன?"– பக்கத்தில் வந்தாள்.

"அது என்ன... ஒரு மாயம்? அதே பால், அதே காப்பி பொடி, அதே சர்க்கரை, அதே அடுப்பு. ஆனா, நான் காப்பி கலந்தா எந்த வாசனையும் இல்ல. சுவையும் இல்ல. நீ கொடுக்கிற காப்பி மட்டும் எப்படி இப்படி அமிர்தமா இருக்கு?"

"ம்... நான் சும்மாவா காப்பியை கலக்கறேன்"– புதிராய் பேசினாள்.

"ம்... பின்ன என்ன பண்ற?"

"என் அன்பையும் கலந்து உங்களுக்கு கொடுக்கறேன்."

"ஓ... நீ நல்லா பேசக் கத்துக்கிட்ட"– சிரித்தார்.

"சரி... சீக்கிரம் காப்பியைக் குடியுங்க. ரெண்டு நிமிஷத்துல வெந்நீர் தயாராயிடும்"– சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

'இவளால வீட்ல வேலை செய்யாம ஒரு நிமிஷம்கூட சும்மா



இருக்க முடியாது. நீங்க அதைச் செய்யல... இதைச் செய்யலேன்னு திட்டுவா. ஆனா, எல்லா வேலையையும் இழுத்துப் போட்டு அவளே செஞ்சுடுவா. என் மேலேயும், கிஷோர் மேலேயும் அவளுக்கு அப்படியொரு அன்பு!

இந்த வீட்டோட, குடும்பத்தோட ஆதாரமே அவதான். உண்மையிலேயே நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரன்தான்!'

சுப்பிரமணியம் தனக்குள் தன் மனைவியை பெருமையாய் நினைத்துக்கொண்டார்.

## 14

ரவி அலுவலக வேலைகளை முடித்துவிட்டு, சோர்வாக... "அப்பாடா" என்று நாற்காலியில் சற்று சாய்வாய் முதுகை சாய்த்து, காலை நீளமாய் நீட்டி உட்கார்ந்தான்.

"ம்... உஷாவுக்கு நாளை அரசுத் தேர்வு ஆரம்பம். படிச்சுக்கிட்டிருப்பா! கிளம்ப வேண்டியதுதான்" என்றபடியே எதிர்த்தாற்போல சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தில் அவன் கண்கள் பதிந்தன.

கையில் கடிகாரம் இருந்தாலும், சுவர்க் கடிகாரத்தில் நேரம் பார்ப்பது மனிதர்களின் இயற்கை!

மணி 6.30.

பெருமூச்சுவிட்டபடி, தன்னுடைய கண்ணாடி அறையின் வழியே முழு அலுவலகத்தையும் பார்த்தான்.

லேகா, மணிகண்டன், நாகேந்திரனைத் தவிர அனைவரும் வீட்டுக்குப் புறப்பட்டுப் போயிருந்தனர்.

லேகா... வயது நாற்பத்தைந்து. பெயருக்குத்தான் அலுவலக உதவியாளர் அவள்.

ஆனால், தனக்கென்று நிர்ணயிக்கப்பட்ட அலுவல் மட்டும் இல்லாமல், எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு ஆர்வமுடன் செய்வாள். அந்த அலுவலகத்தின் உண்மையான விசுவாசி!

அதிகாரிகள் அனைவருக்கும் அவள் மீது தனி மதிப்பு உண்டு.

லேகாவும் வீட்டுக்கு கிளம்புவதற்காக தன் கைப்பையை எடுத்தாள்.

நடந்து வரும்போது, மேலாளர் ரவி இன்னும் இருப்பதைப் பார்த்தாள். 'அவருடைய மகளுக்கு நாளை முதல் அரசுத் தேர்வு ஆரம்பமே! இன்னும் ஏன் இங்கு இருக்கிறார்?' என்று கவலைப்பட்டுக்கொண்டே அறைக்குள் நுழைந்தாள்.

"வாங்க லேகா"– புன்னகையுடன் வரவேற்றான்.

"என்ன சார்! 'பிசி'யா... இன்னும் வீட்டுக்கு கிளம்பலையா? நாளைக்கு உங்க மகளுக்கு தேர்வு ஆரம்பமில்ல?"

தலையாட்டினான்.

"பிளஸ் டூ தேர்வு, முக்கியத்துவம் வாய்ந்ததா போச்சு. அதே மாதிரி வாழ்க்கையின் முக்கியமான ஆதாரம். ஒரு மாசமா கண் விழிச்சு படிக்கிறா. எனக்கும் அரைகுறை தூக்கம்தான். அவ படிக்கிறப்போ, இவ இப்படி சிரமப்படுறாளேன்னு என் மனசு கஷ்டப்படுது. நடுராத்திரியில அவளுக்கு டீ தயார் பண்ணிக் கொடுப்பேன். இன்னிக்கு கொஞ்சம் சீக்கிரமா கிளம்பணும்னு நினைச்சேன். ஆனா ஏதோ வேலை... உட்கார்ந்துட்டேன். ம்... கிளம்ப வேண்டியதுதான்."

"சார்."

"ம்..."

"எனக்கு உங்களை இருபது வருஷமாவே தெரியும்."

"ஆமா!"

"நான் உங்க சொந்த விஷயத்தைப் பேசலாமா?"

ரவி அவளைப் புதிராகப் பார்த்தான். 'என் விஷயம் லேகாவுக்கு... ஏன் அலுவலகத்தில் இருக்கும் அத்தனை பேருக்கும் தெரியும். இவ புதுசா என்ன கேட்கப் போறா?' என்று நினைத்தபடி மேசை மீது இருந்த 'டேபிள் வெயிட்'டை சுழற்றியபடி யோசித்தான்.

"உங்க மனைவி உங்களோட இல்லையேன்னு வருத்தப்பட்டது உண்டா?"

லேகாவிடம் இருந்து அப்படியொரு கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை.

பதில் சொல்லாமல் மவுனமாக இருந்தான்.

"கேட்டது தப்புன்னா... ஸாரி"– லேகா சொன்னாள்.

"நோ... நோ."

"ரொம்ப நாளா உங்ககிட்ட கேக்கணும்னு இருந்தேன். நீங்க உஷாவோடு தனியா சிரமப்படுறதை நினைச்சு வருத்தமா இருக்கும்."



"ஓ... தேங்க்ஸ். என் மேல இரக்கப்பட்டு கேட்ட கேள்விக்குபதில் சொல்றேன். 'நான் என்னிக்கு ராதாவோடு மணவாழ்க்கையை தொடங்கினேனோ அன்றில் இருந்து எங்களுக்குள்ள அபிப்ராய பேதம் இருந்துகிட்டே இருந்தது. அதனால அவ பிரிவு என்னை பாதிக்கல. வருத்தமும் இல்ல. ஒருவேளை ஒத்துமையா குடும்பம் நடத்திட்டு பிரிஞ்சிருந்தா வருத்தம்– வேதனை ஏற்பட்டிருக்கும். அன்புங்கறது, ரெண்டு கைகள் தட்டினா சத்தம் வருமே... அதே மாதிரி இல்ல. கொடுத்து, திரும்ப வாங்கறது. என் வாழ்க்கையில அது நடக்கல... இல்ல, கிடைக்கலை."

ரவியின் குரல் சற்று கம்மியது. திரும்ப அவனே தொடர்ந்தான்.

"ஆனா, என் முழு கவனமெல்லாம் பொண்ணை வளர்க்கறதுலேயே சரியாப் போச்சு. நான் அதுக்கு மேல வேற எதையும் நினைச்சுப் பார்த்ததில்லை."

"உங்களைத் தாயுமானவன்னு சொல்லலாம்!"

சிரித்தான்.

"அப்பாங்கறது குழந்தைக்கு உயிர் கொடுக்கிற பதவி மட்டுமல்ல... அவங்க பெரியவங்க ஆகிற வரை நல்ல கல்வியைக் கொடுக்கணும். தோளுக்கு மேல வளர்ந்தப்புறம், தோழமையா நினைச்சு வழி நடத்தணும். இதை நாம ஒழுங்கா செஞ்சா... பெத்தவங்களுக்கு வயசாகும்போது, அவங்க நம்மளை நல்லா பார்த்துப்பாங்க. இதுதானே வாழ்க்கைச் சக்கரம்."

"அம்மாடி... உங்க அனுபவத்தை வச்சு ஒரு புத்தகமே எழுதிடுவீங்க போல இருக்கு."

மறுபடி சிரித்தான்.

"சார்... பிரிவுங்கிறது வாழ்க்கையில பலருக்கும் வேற வேற மாதிரி ஏற்படுது. ஏதோ சில காரணங்களுக்காக உங்க மனைவிக்கும், உங்களுக்குப் பிரிவு... எனக்கு?"– சில விநாடிகள் மவுனமானாள்.

"என் கணவர்? விதி... விபத்துல அவரைக் கொண்டுபோயிடுச்சு. ஏதோ ஒரு வாழ்க்கையில எல்லாருக்கும் இதுன்னு இல்ல. ஏதோ ஒரு இழப்போடதான் வாழறாங்க. ஏன்... வெளிநாட்டுல குடும்பத்தை பிரிஞ்சு சம்பாதிக்கிறவங்களை எடுத்துக்கங்களேன். இருக்காங்க. அதுவும் இழப்புதானே! நாம இஷ்டப்பட்டு, அது கிடைக்காம போறதும், இல்ல... அது நம்மளவிட்டுப் போற எதுவானாலும் ஒரு இழப்புத்தான் இல்லையா? சரி... சார்.

பேசிக்கிட்டு இருந்தா பேசிக்கிட்டே போலாம். பாவம் உஷா, உங்களுக்காக காத்திருப்பா."

லேகா சொன்னதும், ரவி தனது அறையின் ஏ.சி. மற்றும் சுவிட்சுகளை அணைத்துவிட்டு கிளம்பினான்.

"லேகா."

"ம்..."

"உங்க குழந்தை எப்படி படிக்கிறா?"

"சார், என்னிக்கு இருந்தாலும் அப்பா–அம்மாவுக்கு அவங்க வாரிசுங்க குழந்தைதான். இருந்தாலும் இந்தக் குழந்தை, கல்லூரி கடைசி ஆண்டு படிக்கிறா?"

அவன் சிரித்தான்.

"வண்டி கொண்டு வந்திருக்கீங்களா? இல்ல, நான் என் கார்ல கொண்டு விடட்டுமா?"

"நன்றி சார். நான் வண்டி கொண்டு வந்திருக்கேன். உஷாவுக்கு என்னுடைய வாழ்த்துகளைச் சொல்லுங்க. வர்றேன்."

லேகா விடை பெற்றாள். ரவி தன் காரை எடுத்தான்.

இருவரும் வெவ்வேறு திசை நோக்கி போனார்கள்!

## 15

'பிளஸ் டூ' தேர்வை முடித்த உஷாவுக்கு புத்தகங்கள் படித்தும், தொலைக்காட்சி பார்த்தும் பொழுது போகவில்லை. சிநேகிதிகளுடன் வெகுநேரம் அரட்டை அடிப்பது அவளுக்கு பிடிக்காது.

'இன்று எப்படி பொழுதை கழிக்கலாம்?' என்று யோசித்தபோது, அண்ணன் விவேக் ஞாபகம் வந்தது. உடனே செல்பேசியில் எண்களை அழுத்தினாள்.

"அண்ணா! எங்க இருக்க...? வீட்டுலயா... இல்ல கல்லூரியிலா?"

"இப்பத்தான் வகுப்பு முடிஞ்சது. இன்னிக்கு அரை நாள்தான் வகுப்பு. அதனால கல்லூரியைவிட்டு வெளியே வந்துட்டு இருக்கேன்."

"ஆமா... நான் அப்பவே போன் பண்ணணும்னு நினைச்சேன்.





தேர்வெல்லாம் எப்படி எழுதின... நல்லா பண்ணியிருக்கியா? இந்
தடவை கணிதம் கொஞ்சம் கஷ்டம்னு பேசிக்கிட்டாங்களே?"

"நல்லா எழுதி இருக்கேன். கண்டிப்பா நல்ல 'மார்க்' வரும்."

"கேட்க சந்தோஷமா இருக்கு. அப்புறம் அண்ணா..."

"ம்..."

"தேர்வு முடிஞ்சாச்சுன்னு ஒரு பக்கம் மகிழ்ச்சி. அதே நேர
வீட்ல போரடிக்குது. மத்தியானம் சினிமாவுக்கு போலாமா? மன
ஒண்ணுதான் ஆகுது?"

"சினிமாவா?"– தயக்கத்துடன் கேட்டான்.

"ஆமாண்ணா... அப்பாகிட்ட சொன்னேன். 'ஜாக்கிரதைய
போயிட்டு வா'ன்னு சொன்னாரு."

"ம்... வந்து... இன்னொரு நாள் போலாமா?"

"ஏண்ணா... மத்தியானம்தான் வகுப்பு கிடையாதுன்னு
சொன்னியே?"

"அப்படி சொன்னேனா... அப்ப அப்படித்தான்."

"அண்ணா! என்னாச்சு... ஏன் உளர்ற?"

"நானா?"

"பின்ன... நீதான் உளர்ற?"

"இல்ல... இன்னொரு நாள் போலாம்."

"ஓ.கே.ண்ணா. இன்னொரு நாள், இன்னொரு சினிமா உன்னோடு
இன்னிக்கு நான் போயிட்டு வர்றேன்."

"அப்படியா... சரி" என்று விவேக் செல்பேசியை அணைக்
திரும்பவும் அது இசைத்தது.

'யாரது?' என பார்த்தான்.

'நந்திதா' என்று எழுத்துக்கள் திரையில் மின்னின.

'ஐ... நந்திதா. சரியா போன் பண்ணிட்டா. காலையில இருந்
அவளுடைய தரிசனம் கிடைக்காம மனசே சரியில்ல. வீட்ல ஏதே
விழாவாம்.

ம்... இப்பவாவது என்னுடைய திட்டத்துக்கு ஒத்துக்கிட்
வர்றாளா– இல்ல... 'விழா இப்பத்தான் முடிஞ்சது... இன்னு
சொந்தக்காரங்க இங்கதான் இருக்காங்க... போகலை. ஸாரி'ன்னு
சொல்லப் போறாளா?'

ஒரு விநாடியில் பல கேள்விகள் மனசைத் தாக்க செல்பேசியி



"ஹலோ" என்றான்.

"டேய்."

"ம்... சொல்லு."

"இப்பத்தான் வீட்ல இருந்து கிளம்பப் போறேன். உனக்கு கல்லூரியில இருந்து தியேட்டர் கிட்டத்தானே? போய் டிக்கெட்டை எடு. நான் வந்துடுறேன்."

"அப்பாடி. நல்ல வேளை... திட்டம் தடைபட்டுமோன்னு நினைச்சேன்."

"டேய்... நான்தான் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை மாதிரி நீ சொல்றபடி ஆடுறேனே. எப்படி வராம இருக்க முடியும்?"

"ம்க்கும். நீ என்ன வசியம் பண்ணினியோ?"

"டேய்! அது வசியமில்ல... நீ என் வசம்!"

"ஓ... இந்த வார்த்தை நல்லா இருக்கே. ஏதாவது ஒரு சினிமாவுக்கு தலைப்பா வச்சுடலாம்."

விவேக் சொன்னதும், நந்திதா கலகலவென சிரித்தாள்.

அவன் காதில் அந்தச் சிரிப்புச் சத்தம் அழகிய சங்கீதமாக ஒலித்தது.

"ம்... நந்திதா எனக்கு...?"– சொல்லிவிட்டு வார்த்தைகளை இழுத்தான்.

"என்ன... என்ன தடுமாற்றம்? சீக்கிரம் சொல்லு... நேரமாகுதுல்ல?"

"ஐ லவ் யூ!"

"டேய்... இந்த ரெண்டு மாசத்துல இப்ப சொன்னது இருநூறாவது தடவை. போரடிக்கலையா...?"

"உன்கிட்ட இப்படி திரும்பத் திரும்ப சொல்லணும்னு எனக்கு ஒரு... ஒரு... அதை என்னன்னு சொல்றது?"– விழித்தான்.

"ஒரு வெறிதான். அதைக்கூட உனக்கு சொல்ல வரமாட்டேங்குது."

"ஆமா, நந்திதா... எனக்கு... உன்னைப் பார்த்தா பேச்சு வரமாட்டேங்குது. பேசினா... வார்த்தை வரமாட்டேங்குது."

"ஏன்?"

"அடுத்த மூணு மணி நேரம் உன்கூட சேர்ந்திருக்கப் போறோம்னு நினைச்சா எவ்வளவு மகிழ்ச்சியா இருக்கு தெரியுமா?"

"ரொம்ப நன்றி... என்னையே நினைச்சுகிட்டு இருக்காதே! அடுத்த வாரம் நம்ம கல்லூரிக்கு பெரிய, பெரிய கம்பெனியில இருந்து ஆள் எடுக்க வர்றாங்க. ஒழுங்கா நேர்முகத் தேர்வை பண்ணு."

"ம்... ஞாபகம் இருக்கு. என்னுடைய சுறுசுறுப்புக்கு நீதானே 'பேட்டரி சார்ஜ்'. இன்னிக்கு கிடைக்கிற காதல் சந்தோஷத்துல, அடுத்த வாரம் எல்லா கம்பெனியிலும் 'செலக்ட்' ஆகிடுவேன். வேணும்னா பாரேன்."

"ரொம்ப நம்பிக்கை."

"நம்பிக்கைதானே வாழ்க்கை! சரி, அதை விடு. நீ என்ன 'டிரஸ்'ல வரப்போற? முதல்ல அதச் சொல்லு."

"டேய்... உனக்கு சேலை பிடிக்காது. மிடி போட்டுக்கிட்டு வர முடியுமா? ஜீன்ஸ் பேண்ட், டி சர்ட் ஓ.கே.! ஆனா, நீ விரும்பறது சுடிதார்தானே?"

"ஆமா... எப்படி சரியா சொல்ற?– வியப்புடன் கேட்டான்.

"என்னைப் புரிஞ்சுக்க நீ ஆயுசு முழுக்க யோசிக்கணும். ஆனா, உன்னை மூணே நாள்ல முழுசா புரிஞ்சுகிட்டேன்."

"எப்படி 'பட்பட்'டுன்னு சரியா பேசற?"

"அதான் நான்!"

"நந்திதா."

"ம்..."

"ஒரு தடவை சிரியேன்."

"எதுக்கு?"

"பிளீஸ்"– கெஞ்சினான்.

"ஏய்... விஷயம் இல்லாம சிரிச்சா, பக்கத்துல இருக்கிறவங்க யாராவது ஆம்புலன்சுக்கு போன் பண்ணிடுவாங்க."

"நந்திதா... பிளீஸ். பாடாய்படுத்தாதே. சிரி."

"ம்..." என்ற நந்திதா சிரித்தாள். கலகலவென்று அழகிய சங்கீதம் போல சிரித்தாள்.

விவேக் மவுனமாய் செல்பேசியை இடைவெளி இல்லாமல் காதில் அணைத்து, அந்தச் சிரிப்பின் ஒலியை அணு அணுவாய் ரசித்தான். அது அவன் இதயத்தை வருடியது.

"சரி... என்ன நிற சுடிதார் போட்டுக்கிட்டு வரப்போற? அதையாவது சொல்லு."



"அதையெல்லாம் சொல்லக்கூடாது. நேர்ல என்னைப் பார்த்து நீ அசந்து போகணும். அப்பத்தான் ஒரு 'திரில்லிங்' இருக்கும்."

"ஓ... உன்னைப் பார்த்து நான் ஜொள்ளு விடணும்னு நினைக்கிற?"

"டேய்... ரொம்ப அலட்டிக்காத. உனக்கு நான் ரொம்ப அதிகம்."

"உனக்கு வாய் ரொம்ப, ரொம்ப அதிகம்."

"ம்... சொல்லமாட்ட! இதோ பாரு. இப்படி பேசிக்கிட்டு இருந்தா நாம பேசிக்கிட்டே இருப்போம். நேரமாகுது. நீ முதல்ல தியேட்டருக்கு கிளம்பு. 'வழியில அவனை பார்த்தேன்... இவனைப் பார்த்தேன்'னு நின்னு பேசிட்டு நேரம் கழிச்சு வராத. உனக்கு முன்னாடி தியேட்டர்ல தனியா போய் நின்னா எனக்கு ஒருமாதிரி இருக்கும்."

"ஓ.கே... இதோ கிளம்பிட்டேன்"– சொன்ன விவேக், அடுத்த விநாடி மோட்டார் சைக்கிளை வேகமாய் உதைத்தான்.

## 16

'நந்திதா!

என்ன ஒரு அழகு? இமைகள் படபடக்கும் போதெல்லாம் அழகிய வண்ணத்துப் பூச்சிகள் பறப்பது போல இருக்கும்.

வில் புருவம். சிலைக்கு செதுக்கப்பட்டது போல அழகான, சீரான மூக்கு.

பேசும்போதெல்லாம் அவளின் இனிய குரலைக் கேட்பதா? இல்லை... அவள் உதடுகள் பிரிந்து பிரிந்து சேரும் அந்த சொர்க்க லோக அழகை ரசிப்பதா?

தமிழ்... தேன்மொழி. அவள் உச்சரிக்கையில் அது அமிர்தமாய் இனிக்கிறது.

எத்தனை நாட்கள் அவளது சுடிதாரின் துப்பட்டாவை எடுத்து, என் கழுத்தில் மாலையாகப் போட்டு சுகம் கண்டிருக்கிறேன்? துப்பட்டாவே இத்தனை சுகம் என்றால்... அவளின் கைகள் என் கழுத்தில் மாலையாக விழுந்தால்?'– நினைத்த மாத்திரத்தில் விவேக் தன்னை மறந்தான்.

அவளின் நினைவுகளில் மூழ்கியவனுக்கு தான் எப்படி சினிமா தியேட்டர் முன் வந்தோம் என்று தெரியவில்லை.

வண்டியை நிறுத்திவிட்டு, நந்திதா சொன்ன வாசலுக்கு வந்தான். கூட்டம் வர ஆரம்பித்தது.

வெயிலின் தாக்கம் குறைந்து, இயற்கை இதமாக இருந்தது.

'ஒருவேளை, நந்திதா எனக்கு முன்னாடியே தியேட்டருக்கு வந்திருப்பாளோ?'– கண்களால் தேடினான்.

பெண்கள் நிற்கும் இடமெல்லாம் தேடியும் அவள் தென்படவில்லை.

கடிகாரத்தைப் பார்த்தான். மணி, இரண்டைத் தொட்டிருந்தது.

'டிக்கெட்டை வாங்கி வைத்துவிடலாமா?' என்று கவுன்டரைப் பார்த்தான்.

ஐந்து, ஆறு பேர் வரிசையில் நின்றிருந்தார்கள்.

'சரி... அவ வர்றதுக்குள்ள டிக்கெட்டை வாங்கிடுவோம்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, இரண்டு 'பால்கனி' டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு அதே வாசலுக்கு வந்து அவளைத் தேடினான்.

'இந்நேரம் வந்திருக்கலாமே?'

செல்பேசியை எடுத்தான். எண்களை அழுத்தப் போனான்,

அப்போது, முதுகில் கை ஒன்று உரிமையாய் தட்ட, ஆசையுடன் "நந்திதா" என்றபடியே திரும்பிப் பார்த்தான்.

அதிர்ச்சியில் வார்த்தைகள் வரவில்லை. உஷா சிரித்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

"என்னண்ணா... எதுக்கு இப்படி மிரள்ற! என்னாச்சு உனக்கு?"

"எனக்கா... ஒண்ணுமில்லையே!"– படபடப்பு அடங்காமல் பேசினான்.

"அண்ணா! மத்தியானம் வகுப்பு இல்ல... வீட்டுக்கு போறேன்னு சொன்ன?"

"சொன்னேன். ஆனா, நண்பன் ஒருத்தன் கட்டாயப்படுத்தி சினிமாவுக்கு வரணும்னு சொல்லிட்டான். தட்ட முடியல."

"ஓ! உன்னோட முதுகுப் பக்கத்தை பார்த்தவுடனேயே நினைச்சேன். பரவாயில்ல... அண்ணன் வந்திருக்கானேன்னு."

"ஹி..."– அசடு வழிந்தான். தங்கையிடம் பொய் சொல்லிவிட்டு, சினிமாவுக்கு வந்தது அவமானமாக இருந்தது.



"அண்ணா."

"ம்..."

"இந்தப் படம் வந்து மூணு வாரமாச்சே. இன்னும் பார்க்கலையா?"

"பார்த்துட்டேன்... இல்ல பார்க்கலை."

"எது சரி, பார்த்துட்டியா... இல்லையா? ஏண்ணா இப்படி குழப்பத்தோடு பேசற?"

"நானா! ச்சீ... ச்சி. பார்த்துட்டேன். ஆனா, சிநேகிதனுக்காக ரெண்டாவது தடவை."

"ஆமா... சிநேகிதன் எங்க?"

'நல்ல கேள்வி. சிநேகிதன் எங்க?'– விவேக் தன்னைத் தானே கேட்டுக்கொள்ள,

பச்சையும், மஞ்சள் நிறமும் கலந்த பூப்போட்ட சுடிதாரில் தேவதையாய் நந்திதா வர,

இவனுக்கு வியர்த்தது!

"விவேக்"– கூப்பிட்டபடி நந்திதா கையசைத்தாள்.

அவன் சப்தநாடிகள் அடங்கி மவுனமாய் நின்றான்.

"ஏய்... விவேக். காதுல விழலியா?"– கேட்ட நந்திதா இன்னும் அருகில் வந்திருந்தாள்.

"அண்ணா... உன்னைத்தான் யாரோ கூப்பிடுறாங்க."

"யாரு?"– மலங்க மலங்க கேட்டான். அவன் நெஞ்சு படபடத்தது.

"எனக்கென்ன தெரியும்? நீதான் சொல்லணும்."

"ஆமா... உண்மையைச் சொல்ற நேரம் வந்துடுச்சு"– குரலைத் தாழ்த்தி சொன்னான்.

"ஓ... என்ன உண்மை?"

"அவதான் என் சிநேகிதி."

"அப்படியா?"– உஷா வியப்புடன் கேட்டாள்.

"எப்படியும் அப்படித்தான்!"– மறுபடி உளறினான்.

"விவேக்! என்ன இது... கூப்பிட கூப்பிட காதுல விழலியா?"– கேட்டவள், பக்கத்தில் நின்றிருந்த உஷாவை விநோதமாக பார்த்தாள்.

'இவளும் நம்ம கல்லூரியா? விவேக்குக்கும், இவளுக்கும்?' என்று

சந்தேகமாய் பார்த்தவள்,

"விவேக்... யாரு இவ?"- மெல்லிய குரலில் கேட்டாள்.

"வந்து..." என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. தயங்கினான்.

"நான்... விவேக்கோட தங்கச்சி"- உஷாவே தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டாள்.

தங்கையைப் பார்த்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் அவன் இன்னும் மீளவில்லை. கைகளைப் பிசைந்தான்.

"விவேக்... நீ உனக்கொரு தங்கை இருக்காள்ன்னு இதுவரைக்கும் என்கிட்ட சொல்லவே இல்ல"- உரிமையாய் கேட்டாள்.

"இப்பத்தானே ரெண்டு மாசமா பேசறோம். முழுக்கதையை சொல்ல கொஞ்சம் நாளாகும்ல".

"ஏய்... வீட்டு விஷயத்தை தவணை முறையில சொல்லப் போறியா?"

"அப்படி இல்ல."

"அண்ணா... சிநேகிதன்னு சொன்னியே... சிநேகிதியா?"- உஷா கேட்டாள்.

"என்னது... நான் சிநேகிதியா?"- இது நந்திதா.

"இல்ல... வந்து தங்கைகிட்ட எப்படி.... ?"

"அண்ணா... காதலா?"- உஷா சந்தேகத்தோடு கேட்டாள்.

"இல்ல... காதலி."

விவேக் சொன்னதும், அவனது தடுமாற்றத்தைப் பார்த்ததும் நந்திதா கலகலவென சிரித்தாள்.

## 17

"அண்ணா."

"ம்..."

"அண்ணி நல்லா அழகா இருக்காங்க."

"அதனாலதான் விரும்ப ஆரம்பிச்சேன். ஆனா... என்ன கொஞ்சம் வாய் அதிகம்."

"ஏய்... விவேக். முதல் முதல்ல, உன் தங்கைகிட்ட என்னை இப்படியா



அறிமுகப்படுத்துவ? நல்லதா நாலு வார்த்தை சொல்லு."

"ம்... வந்து... இது நந்திதா. என்னுடைய ரகசிய சிநேகிதி."

"ரொம்ப நல்லா அறிமுகப்படுத்தற. உன்னை அப்புறம் கவனிச்சுக்கிறேன்"- சொன்னவள், உஷாவின் அருகில் வந்தாள்.

"நைஸ் டு மீட் யூ"- கைகளைப் பற்றிச் சொன்னாள்.

"எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு அண்ணி."

"நோ... நோ. அண்ணியெல்லாம் எப்பவும் சொல்லக்கூடாது. நீ என்னை நந்திதான்னே கூப்பிடலாம். ம்... அப்புறம், நானும்- உன் அண்ணனும் ஒரே கல்லூரி, ஒரே வகுப்பு. அவனைப்பத்தி நிறைய விஷயம் என்கிட்ட சொன்னதே இல்ல. அப்பாவும், அம்மாவும் பிரிஞ்சுட்டாங்கன்னு மட்டும் சொல்லி இருக்கான். வேற எதுவும் அவ்வளவா சொன்னதில்லை. ஏன்...? இப்ப நீயும் சினிமாவுக்கு வருவேன்னுகூட சொல்லவே இல்லை."

"இல்ல நந்திதா. நான் இந்த தியேட்டருக்கு வருவேன்னு அண்ணனுக்கு தெரியாது."

"ஓ... அதான் என்னைப் பார்த்ததும், உளற ஆரம்பிச்சுட்டானா?"

விவேக் சற்று தலையைக் குனிந்து, கண்களால் அசடு வழிய உஷாவையும், நந்திதாவையும் பார்த்தான்.

"ஆமா... நீ உன் பெயரைச் சொல்லவே இல்லையே?"

"உஷா."

"ம்... நல்ல பெயர்" என்ற நந்திதா, "உனக்கு டிக்கெட் வாங்கியச்சா?" என்றாள்.

"இல்ல"- அவன் பதில் சொன்னான்.

"விவேக்... முதல்ல ஓடிப் போய் வாங்கிடு."

"நந்திதா... ப்ளீஸ். நான் சினிமாவுக்கு வரல"- உஷா சொன்னாள்.

"ஏன்?"- கண்கள் விரிய கேட்டாள்.

"அநாவசியமா உங்க ரெண்டு பேருக்கும் நடவுல நான் தொந்தரவா இருக்க வேண்டாமில்ல."

"அது சரி... அப்படி பார்த்தா இந்த தியேட்டர்ல மொத்தம் அறுநூறு டிக்கெட். எங்க ரெண்டு பேரைத்தவிர மத்தவங்க எல்லாரையும் வீட்டுக்குப் போகச்சொல்லணும். முடியுமா...?"

நந்திதாவின் 'டக்... டக்' பதிலைக் கேட்டு விவேக்கும், உஷாவும்

வயிறு குலுங்க சிரித்தனர்.

"உஷா"– நந்திதா கூப்பிட்டாள்.

"ம்..."

"இனிமே நீ இல்லாம நாங்க எங்கேயும் வெளியில போக மாட்டோம். விவேக்... என்ன... நான் சொல்றது சரியா?"

"ம்... சரிதான்"– தலையாட்டினான்.

"என்னது... உள்மனுசுல இருந்து வார்த்தை வர மாட்டேங்குது."

"நோ... நோ. நீ சொல்றதை அப்படியே ஆமோதிக்கிறேன்."

"சரி... போய் முதல்ல டிக்கெட்டை வாங்கிட்டு வா."

விவேக் விரைந்தான்.

"உஷா."

"ம்..."

"என்னமோ தெரியல. கல்லூரியில ஆயிரம் பேர் இருக்காங்க. இவனைவிட 'பெஸ்ட்'டாகூட இருக்காங்க. ஆனா, ஏதோ ஒரு விஷயம், இவன்கிட்ட என்னை இழுத்துப்போட்டுடுச்சு. அது என்னவா இருக்கும்? தெரியலை."

"நந்திதா... எங்க அண்ணனுடைய மனசுதான் காரணமா இருக்கும். யார் கஷ்டப்பட்டாலும் அவனுக்கு தாங்காது. இருக்கிறதை தனக்கு வேணும்னு நினைக்காம கொடுத்துடுவான்."

"ம்... நான்கூட பார்த்திருக்கேன். ஆனா, அநேகமா இது பூர்வ ஜென்ம பந்தம்."

உஷா சிரித்தாள்.

"நீ சின்னப்பொண்ணு. உன்கிட்ட நிறைய பேசிட்டேனா?"

உஷா பதில் பேசாமல் புன்னகைத்தாள்.

அதற்குள் விவேக், உஷாவுக்கான டிக்கெட்டை வாங்கிக்கொண்டு வந்தான்.

"அண்ணா."

"ம்... என்ன?"

"அன்றைக்கு நான் கேட்டேன். நீ இல்லைன்னு சொன்னியே?"

அவன் குழம்பினான்.

"நீ என்ன கேட்ட... நான் எதை இல்லேன்னு சொன்னேன்?"

"நந்திதா மேல இருந்த காதல்தானே... உன்னை கவிதை எழுத வச்சிருக்கு?"

"ஏய்... என்ன உளர்ற?"– அதட்டினான்.

"விவேக்... அவளை எதுக்கு மிரட்டுற? என்னைப் பத்தி கவிதை எழுதுனியா?"– நந்திதா கேட்டாள்.

"ம்... வந்து... ரெண்டு வார்த்தை கிறுக்கினேன்."

"என்கிட்ட அதைப் பத்தி ஒரு நாள்கூட சொன்னதில்லை!."

"நந்திதா"– அது, உஷா.

"ம்... சொல்லு உஷா."

"அடடா... என்னைப் போட்டுக் கொடுக்கணும்ன்னே இன்னிக்கு வீட்ல இருந்து புறப்பட்டு வந்திருக்கா போல இருக்கு"– உஷாவைப் பார்த்து முணுமுணுத்தான்.

"உஷா... நீ அவனை விடு. நீ சொல்ல வந்ததைச் சொல்லு."

"ஒரு நோட்டு முழுக்க கவிதைதான்!"

"ஓ..." என்றவள், கண்கள் விரிய காதலாய் 'விவேக்கைப் பார்த்தாள்.

நந்திதா வீசிய காதல் பார்வையில் விவேக் வெட்கப்பட்டான்.

"உன்னுடைய இந்த வெட்கம்கூட எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குடா."

"சரி... ஏதாவது ரெண்டு கவிதையைச் சொல்லு."

"சட்டுன்னு கேட்டா எப்படி ஞாபகத்துக்கு வரும்? கொஞ்சம் யோசிக்கணும்."

"சரி... நோட்டுல இருக்கிற கவிதை வேண்டாம். உன்னுடைய தேவதைதான் நேர்லயே இருக்கேனே! புதுசா ஏதாவது சொல்லு. கமான்."

'அண்ணன் மாட்டிக்கொண்டானே!' என்று உஷா சிரித்தாள்.

"ம்... சொல்லட்டுமா?"– சற்று யோசித்தவன் தொடர்ந்தான்...

***"தினம் ஒரு***
***செல்பேசியும்***
***'சிம்கார்டு'ம்***
***தேய்ந்து போகும் வரை– நான்***
***உன்னுடன் பேச வேண்டும்...***
***நீயென்ன***
***நீர் மின்சக்தியா?***
***அனல் மின்சக்தியா?***

*அணு மின்சக்தியா?*
*உன்னைத் தொடுகையில்*
*என் உடலில்*
*மின்சாரம் பாய்கிறதே!"*

விவேக் சொல்லச் சொல்ல உஷாவும், நந்திதாவும் கை தட்டி பாராட்டினார்கள்.

"ஏய்! இது தியேட்டர்... பொது இடம். எல்லாரும் நம்மள பார்க்கிறாங்க. கொஞ்சம் நகர்ந்து போவோம்"– விவேக் சொன்னான்.

"உஷா... உன் அண்ணனுக்கு என் மேல பைத்தியமே பிடிச்சிடுச்சு. ஜாக்கிரதையா பார்த்துக்க."

நந்திதா சொன்னதும், உஷா சிரித்தாள்.

"அண்ணா... நந்திதா"– உஷா கூப்பிட்டாள்.

இருவரும் உஷாவைப் பார்த்தனர்.

"காதல்... தப்புதானே?"

உஷா கேட்டதும், நந்திதா என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தாள்.

விவேக்குக்கு தன் தங்கையின் கேள்வியின் உள் அர்த்தம் புரிந்தது.

"உஷா... காதலை தப்புன்னும் பேசலாம், தப்பில்லேன்னும் சொல்லலாம். ஆனா ஒரு விஷயம்... காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் சரி, இல்ல அப்பா– அம்மா பார்த்து நிச்சயம் பண்ணினாலும் சரி– கண்டிப்பா பொண்ணும், பையனும் கண்ணை மூடிக்கிட்டு சரின்னு சொல்லாம... மனசு விட்டுப் பேசி, அப்புறமா கல்யாணம் பண்ணிக்கணும். நிச்சயமா அந்தத் தாம்பத்தியம் அதிகம் நிலைச்சு நிக்கும்."

நந்திதா விவேக்கின் கையைப் பற்றினாள்.

"டேய்... சரியா சொன்னே! என்ன உஷா அப்படி பார்க்கிற? எங்களுடைய மொழியில 'டேய்'ன்னா... 'நீங்க'ன்னு அர்த்தம்."

உஷா சிரித்தாள்.

நந்திதா தன் இன்னொரு கையால் உஷாவின் கையைப் பற்றினாள்.

"போலாமா?"– விவேக் கேட்டான்.



மூவரும் வெளிவாசலைக் கடந்து தியேட்டருக்குள் நடக்க ஆரம்பித்தனர்.

## 18

அலுவலகம்... பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

"உள்ளே வரலாமா?"– சுப்பிரமணியம், ராதாவின் அறை வாசலில் இருந்து கேட்க... பார்த்துக்கொண்டிருந்த கோப்பில் இருந்து தன் கண்களை உயர்த்தினாள்.

"வாங்க சார்"– புன்னகை தவழ சொன்னாள்.

சுப்பிரமணியம் உள்ளே நுழைந்தார்.

"உக்காருங்க சார்."

"நீங்க கூப்பிட்டீங்கன்னு சுந்தரம் சொன்னார்."

"ஆமா சார்."

சுப்பிரமணியம் உட்கார்ந்தார்.

"நேத்து சாயங்காலம் பனகல் பார்க் 'சிக்னல்'கிட்ட என்னுடைய கார் நிக்கறப்போ, பக்கத்துலேயே உங்க மனைவியோடு ஆட்டோவுல இருந்தீங்க. நான் கைகாட்டி கூப்பிட்டேன். நீங்க கவனிக்கல."

"அப்படியா? அடடா... வாகன சத்தத்துல நீங்க கூப்பிட்டது என் காதுல விழாம இருந்திருக்கும் மேடம். ஸாரி."

"ஆட்டோ முழுக்க துணிமணியா அடுக்கி வச்சிருந்தீங்க... என்ன... பையனுக்கு கல்யாணமா?"

ராதா கேட்டதும் சிரித்தார்.

"மேடம்... சுந்தரம் வந்து கூப்பிடுறதுக்கு முன்னாடியே நானே நேர்ல வந்து உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்னு நினைச்சேன்."

"என்னது?"– புருவங்களை உயர்த்தினாள்.

"என் பையன் கல்லூரி கடைசி ஆண்டுதான் படிக்கிறான். நான் துணிமணி வாங்கினதெல்லாம் நெருங்கிய சொந்தக்காரங்களுக்காக. வர்ற ஞாயிற்றுக்கிழமை என்னுடைய இருபத்தைஞ்சாவது கல்யாண நாள் வருது மேடம். அதை சிறப்பா கொண்டாடணும்னு முடிவு பண்ணித்தான் இந்த ஏற்பாடு. எல்லாரையும் கூப்பிட்டு விருந்து கொடுக்கலாம்னு இருக்கேன்."

சுப்பிரமணியம் சொல்லச்சொல்ல ராதா அதிசயமாய் பார்த்தாள்.

"இதை எனக்காக கொண்டாடலை. என் மனைவிக்காக! இத்தனை கால தாம்பத்திய வாழ்க்கையில ஒரு நாள்கூட முகம் சுளிச்சதே இல்லை. என் விருப்பு, வெறுப்பு ரெண்டையும் இன்முகத்தோடு ஏத்துக்கிட்டிருக்கா. துன்பத்துல பங்கு போட்டுக்கிட்டிருக்கா. எனக்கு எல்லாமே அவதான் மேடம். சாயந்தரம் அஞ்சு மணி ஆச்சுன்னா போதும், இந்த வயசுலேயும்– நான் எப்ப வருவேன்னு வீட்டு வாசல்ல காத்திருப்பா. அவளுக்கு நான், என் பையன் கிஷோர் தவிர வேற எதுவும் தெரியாது. அப்படிப்பட்டவளுக்கு நான் கொடுக்கப்போற மரியாதைதான் இந்த விழா.

குடும்பங்கிறது சுமை இல்லை. சுகம்கிறதை எனக்கு உணர்த்தினவ! வர்ற ஞாயிற்றுக்கிழமை கண்டிப்பா நீங்க காலையிலேயே வீட்டுக்கு வந்துடணும். அப்பத்தான் எங்களுக்குப் பெருமை."

சுப்பிரமணியம் மூச்சுவிடாமல் தன் கல்யாணநாள் விழாவைப் பற்றியும், தன் மனைவியைப் பெருமையாகவும் சொல்ல... ராதாவுக்கு ஒருபுறம் மகிழ்ச்சியாகவும், மறுபுறம்... 'நாம் வாழ்றது வாழ்க்கைதானா?' என்ற கேள்வியும் எழுந்தது.

"கண்டிப்பா வர்றேன் சார்!"–மகிழ்ச்சியோடு சொன்னாள்.

அவர் புறப்பட்டுப் போனார்.

ராதா கண்கள் கலங்கி, தன் எதிரே இருந்த கணினித் திரையை வெறுமையாகப் பார்த்தாள்.

'குடும்பங்கிறது சுமை இல்லை... சுகம்' என்ற வார்த்தைகள் நெஞ்சில் ஏக்கத்தை ஏற்படுத்தியது. அவளையும் அறியாமல் கண்ணீர் ஆறாய் வழிந்தது.

'குடும்பங்கிறதை நான் சுமையா நினைச்சுட்டேனா?'– அவள் மனது தவித்தது!

## 19

இரவு ஒன்பது மணி...

சாப்பாட்டு மேசையின் இருபுறமும் எதிர் எதிராய் ராதாவும், விவேக்கும் உட்கார்ந்திருந்தனர்.

'இனிமேலும் விஷயத்தை தாமதிக்காமல் அம்மாவிடம் சொல்லிட வேண்டியதுதான்'– முடிவு செய்தான்.

தொண்டையை செருமினான்.

"என்னடா! மிளகாயை கடிச்சிட்டியா... இதைக் குடி"– சொன்னவள், தண்ணீர் தம்ளரை விவேக்கிடம் நீட்டினாள்.

விவேக்கும் வாங்கிக் குடித்தான்

"அம்மா"– தயங்கியபடி கூப்பிட்டான்.

"ம்..."

"நான் ஒரு பொண்ணை காதலிக்கிறேன்."

ராதா அதிர்ந்தாள். விவேக் முழு விஷயத்தையும் சொன்னான்.

"உனக்கு கல்லூரி வளாக நேர்முகத் தேர்வுல வேலை கிடைச்சுதே... அதே மாதிரி அவளுக்கும் கிடைச்சுதா?"

"ஆமா! ஆனா... அவ வேற கம்பெனியில வேலை செய்யறா. அவங்க வீட்ல அவளுக்கு கல்யாணம் பண்ணணும்னு நினைக்கிறாங்க."

"ஓ... நான் இந்த கல்யாணத்துக்கு சம்மதம் தெரிவிக்கலேன்னா...?"

"நிச்சயம் சம்மதம் சொல்வேன்னு எனக்கு நூறு சதவிகித நம்பிக்கை இருக்கும்மா? ஒருவருக்கொருவர் நல்லா புரிஞ்சு வச்சிருக்கோம். விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை இருக்கு. அதனால கல்யாணத்துக்கு அப்புறமும் எங்களுக்குள்ள பிரச்சினை வராதும்மா."

'கல்யாணத்துக்கு அப்புறமும் பிரச்சினை வராது' என்று சாதாரணமாக சொல்லி இருந்தாலும், அது ராதாவின் உள்மனதை உறுத்தியது. சாட்டையால் அடித்தது போல இருந்தது.

"சரிப்பா... என்னை மாதிரி வாழ்க்கை யாருக்கும் வராம இருந்தா போதும். நல்ல நாள் பார்த்து, நானே அவங்க வீட்டுக்குப் போய் பேசிட்டு வந்துடுறேன்."

"நன்றிம்மா"– அம்மாவை கட்டிக்கொண்டு மகிழ்ச்சியைத் தெரிவித்தான்.

இருவரும் சாப்பிட்டு எழுந்தனர்.

"அம்மா."

"ம்..."

சிறுகதை

# நல்வாக்கு

– கீர்த்தி



எனது முன்னாள் பள்ளிக்கூட ஆசிரியர், தன் மகள் கல்யாணத்தை நடத்த பணத்துக்குச் சிரமப்படுவது தெரியவந்தது. 'கிளார்க்' வேலை பார்க்கும் நான், அவருக்கு உதவி செய்ய முடியாமல் தவித்துக்கொண்டிருந்தேன்.

எதிர்பாராமல் வீட்டுக்குள் வந்தான், கட்டட 'கான்டிராக்டராக' இருக்கும் என் பால்ய நண்பன் கணேசன்.

"இதுல ஒரு லட்ச ரூபா இருக்கு. இதை நம்ம ராமசாமி வாத்தியார் மகள் கல்யாணத்துக்கு நீ கொடுக்கிறதா கொடுத்துடு" என்றேன்.

அவன் மறுத்தான்.

"இல்லடா... பள்ளியில படிக்கிறப்போ எனக்கு படிப்பு வராததால– 'நீ முன்னேறுவது கஷ்டம்'ன்னு என்னைச் சொல்வார்! அஞ்சாம்வகுப்போடு படிப்பை நிறுத்திட்டு, கையாள் வேலைக்குப் போன நான் இன்னிக்கு 'கான்டிராக்டரா' ஆயிட்டேன். நான் இப்போ பணத்தைக் கொண்டு கொடுத்தா, அன்னிக்கு அவர் சொன்ன வாக்கு பொய்யாப் போனதா ஆகிடும். 'பெரிய ஆளா வருவே'ன்னு உன்னைத்தான் அடிக்கடி பாராட்டுவாரு. அது நிஜமானதாகவே– நல்வாக்காகவே இருக்கட்டும்... நீயே கொடுத்துடு."

– கணேசன் சொல்ல... பெருமையோடு பணத்தை வாங்கிக்கொண்டு ஆசிரியர் வீட்டை நோக்கி நடந்தேன். ★

## படைப்பாளர்கள் கவனத்துக்கு...

**'ராணி', 'ராணிமுத்து'** இதழ்களில் இடம்பெறும் படைப்புகளுக்கு சன்மானத் தொகை, காசோலையாகவோ... 'மணியார்டர்' மூலமாகவோ அனுப்புவதற்குப் பதிலாக இனி அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்கப்படும். ஏற்கெனவே படைப்புகள் அனுப்பியவர்களும், இனி அனுப்புகிறவர்களும் தாங்கள் கணக்கு வைத்திருக்கும் பெயர், வங்கி மற்றும் கிளை விபரங்கள், கணக்கு எண், வங்கியின் IFS CODE ஆகியவற்றுடன் செல்போன் எண், அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் முழு முகவரியையும் தவறாமல் குறிப்பிடுமாறு வேண்டுகிறோம்.

– ஆசிரியர்

உங்கள் படைப்புகளை மின்னஞ்சலிலும் அனுப்பலாம்:
editor@raniweekly.in

"நான் ஒண்ணு சொல்லட்டுமா?"

"என்னடா?"

"அப்பா மேல உனக்கு இருக்கிற கோபம் ஏதோ ஒரு விதத்துல நியாயமா இருக்கலாம். ஆனா, என் மனசுல ஆதங்கமா இருக்கும்மா. அப்பா சிகரெட் குடிப்பாரா?"

"இல்ல."

"தண்ணி. அதான் 'டிரிங்ஸ்'?"

"அதுவும் இல்லடா."

"அப்ப... தப்பான தொடர்பு இருந்ததா?"

"ம்கூம்..."

"அர்த்தமே இல்லாம உன்னை அடிச்சிருக்காரா?"

"இல்லப்பா."

"வெறும் கருத்து வேற்றுமைக்காகவும், உப்பு பெறாத விஷயத்துக்கும் கோர்ட்டு வரை போய் பிரிஞ்சது தப்பு இல்லையா? உட்கார்ந்து பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைக்கு, சட்டத்தை நாடக் கூடாதும்மா. உண்மையான அன்பும், பாசமும் இருந்தா போதும். கல்லையும் கரைய வைக்கலாம்."

விவேக் பேசப் பேச ராதாவுக்கு மனது பதற்றம் அடைந்தது.

"என் கல்யாணத்துக்கு அப்பாவை கூப்பிடும்மா. அதான் நல்லது"– மகன் சொன்னதும், சட்டென்று கோபம் வந்தது.

'இந்தப் பிரிவுக்கு நான் மட்டும்தான் காரணமா? ஏன்... அவர் விட்டுக் கொடுத்துப் போயிருந்தா இந்த நிலைமை வந்திருக்காது. ஆண்கள்ன்னா அவங்களுக்கு பெண்கள் அடிமையா இருக்கணுமா என்ன?'

– மனதுக்குள் முணுமுணுத்தாள். 'அந்த முகத்தை இனி பார்க்கவேகூடாது'– தீர்க்கமாய் முடிவெடுத்தவள்,

"விவேக்... அந்த ஆளுக்கு மனிதத்தன்மையே கிடையாது. உன் கல்யாணத்துக்கு அவர் வரணும்னு நினைச்சா தாராளமா கூப்பிட்டுக்கோ. ஆனா, நான் வரமாட்டேன்" என்று சொல்லிவிட்டு நகர,

விவேக் அமைதியாய் அம்மாவையே பார்த்தான்.



# 20

**நா**ட்கள் நகர்ந்தன...

நல்ல சுபமுகூர்த்த நாளில், நகரின் மிகப்பெரிய கல்யாண மண்டபத்தில் விவேக்–நந்திதா கல்யாணம் நடைபெற்றுக்கொண்டிருந்தது!

விவேக்கின் நண்பர்கள், நந்திதாவின் தோழிகள், உறவினர்கள் என மண்டபத்தில் கூட்டம் 'களை' கட்டியது.

நல்ல நேரத்தில் மந்திரம் சொல்லப்பட, நாதஸ்வரம் ஒலிக்க, மேளம் முழங்க, நந்திதாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

எல்லாத் திசைகளில் இருந்தும், பெரியவர்களால் ஆசிர்வதிக்கப்பட்ட பூக்களும், அட்சதையும் அவர்கள் மேல் விழுந்தன!

'காமிரா'க்கள் அவசர அவசரமாய் காட்சியைப் பதிவு செய்தன.

நந்திதா முகத்தில் ஆனந்தம்.

ஒவ்வொருவராய் வந்து தங்கள் அன்பளிப்பை அளிக்க நீண்ட வரிசையில் நின்றிருந்தனர். அதில் தூரத்தில் ரவி.

ராதா திகைப்படைந்தாள்.

'அவரைக் கூப்பிடக்கூடாதுன்னு விவேக்கிட்ட சொல்லி இருந்தேனே... அப்ப என் வார்த்தைக்கு மதிப்பு இல்லையா? தனி ஆளா இந்த சமூகத்துல நின்னு– அவனை ஆசையா, அன்பா வளர்த்தேனே... அதுக்கு கொடுக்கிற பலன் இதுதான்னா? கேட்டுவிடலாம்.'

ராதா தன் பக்கத்தில் இருந்தவர்களை கடந்து, விவேக்கிடம் வந்து ரவியை சுட்டிக்காட்டினாள்.

"நீ... நீ... கல்யாணத்துக்கு கூப்பிட்டியா?" மெதுவாக, ஆனால் கோபமாய் கேட்டாள்.

அப்போதுதான் விவேக் தன் அப்பாவைப் பார்த்தான். மகிழ்ச்சியில் மூழ்கினான். அதனை வெளிக்காட்டிக்கொள்ளாமல்,

"நான் கூப்பிடலம்மா" என்றான்.

"நான் கூப்பிடலம்மா" என்றான்.

'கூப்பிடாதபோது... அழையா விருந்தாளியா வந்து, என் மன நிம்மதியைக் கெடுக்கணுமா?'– அவள் மனது தவித்தது.

'வெளியில போங்க என்று கத்திவிடலாமா?' என்று யோசனை எழ, அதற்குள் மணமக்கள் அருகிலேயே வந்திருந்தான் ரவி.

"வாங்க சார். கண்டிப்பா சாப்பிட்டுட்டுத்தான் போகணும்.

நீங்க என் பொண்ணு கல்யாணத்துக்கு வந்ததுல ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி" என்று வரவேற்ற நந்திதாவின் அம்மா லேகா, ராதாவிடம் கூட்டிச்சென்று அறிமுகப்படுத்தினாள்.

"சார் பெயர் ரவி. நான் வேலை பார்க்கிற கம்பெனியோட சீனியர் மானேஜர்."

அதிர்ந்த ராதா, பெயருக்காக புன்னகைத்தாள்.

அப்பா அருகில் வந்தபோது, விவேக்குக்கு அவனையும் அறியாமல் கண்ணீர் கோர்த்தது!

"நன்றி சார்"- கையெடுத்து வணங்கினான்.

ரவி தன் கையில் இருந்த பூக்களையும், அட்சதையையும் விவேக்-நந்திதா மீது தூவி, "கடவுள் அருளால நல்லா இருப்பீங்க" என்று வாழ்த்திவிட்டு நகர்ந்தான்.

## 21

விவேக், அலுவலகம் முடிந்து மாலை ஆறு மணிக்கு வீட்டுக்குள் நுழைந்தான்.

அதிசயமாக அவனுக்கு முன்னாடி வீட்டுக்கு வந்திருந்த ராதா, "வாடா! என்ன குடிக்கிற... டீயா இல்ல காப்பியா?" என்றாள்.

"அம்மா... இன்னிக்கு சென்னை வெயில் நூத்தி அஞ்சு டிகிரியைத் தாண்டியாச்சு. நான் வேலை செய்யற இடம் முழுக்க ஏ.சி.தான்! ஆனா, தாகம் எடுத்துக்கிட்டே இருக்கு. எனக்கு ஏதாவது 'ஜில்'லுன்னு பழச்சாறு குடும்மா."

"சரிடா" என்றவள், 'பிரிட்ஜை' திறந்து மாம்பழச் சாறை வெளியே எடுத்தாள்.

"ஏன்டா... நந்திதா எப்ப வருவா?"

"அம்மா... ஐ.டி. கம்பெனியில வேலை செய்யறவங்க எப்ப வருவாங்கன்னு சொல்ல முடியாது. அங்க பெண்களுக்குன்னு தனி சலுகையும் எதிர்பார்க்க முடியாது. ஆனா, பாதுகாப்பு உண்டு."

ராதா, மாம்பழ பானம் கொடுத்தாள். விவேக் வாங்கி குடித்தான்.



"அம்மா... இது நீதான் தயார் பண்ணினியா? சூப்பரா இருக்கு"- பாராட்டினாள்.

"ஆமான்டா."

"வீட்ல பண்ணினா அது தனி ருசி. அதுவும் உன் கையால பண்ணினா அதுக்கு தனி ருசி"- விவேக் திரும்பவும் பாராட்டினான்.

வாசலில் இருசக்கர வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

'நந்திதாவோ?'- தனக்குள் சொல்லிக்கொண்டான்.

வாசல் மணியை அழுத்தினாள் அவள்.

"அம்மா... நந்திதாதான்"- சொன்ன விவேக், ஆசையாய் வாசலுக்குப் போய் கதவைத் திறந்தான்.

கைப்பையுடன் நந்திதா! முகம் சோர்ந்து நின்றுகொண்டிருந்தாள்.

அவள் உள்ளே வர,

"என்ன ஆச்சு... இவ்வளவு சோர்வா இருக்க! காய்ச்சலா?" -அவளின் கழுத்துப் பகுதியை தொட்டுப் பார்த்தான்.

சோபாவில் உட்கார்ந்திருந்த ராதா அதனைக் கவனித்தாள்.

"மத்தியானத்தில் இருந்து ஒரே தலைவலி."

"மாத்திரை தரட்டுமா?"- கவலையோடு கேட்டான்.

"வேண்டாம்."

"சரி.., சூடா என்ன குடிக்கிற?"

"விவேக் பிளீஸ். டீ தர்றியா? அதுவும் இஞ்சியைப் போட்டு நீ தயார் பண்ணுவியே!"

"ஏய்... பிளீஸ்! முதல்ல ஒக்காரு. நான் டீ தயார் பண்றேன்."

நந்திதா களைப்புடன் அமர்ந்தாள்.

"விவேக்"- ராதா கூப்பிட்டாள்.

"என்னம்மா?"

"அவளுக்கு நான் டீ தயார் பண்ணித் தர்றேன். நீ ஒக்காரு."

"அம்மா! நீ எதுக்கு சிரமப்படுற? நான் தயார் பண்ற இஞ்சி டீ அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். அதுவும் இப்ப தலைவலின்னு சொல்றால்ல. சூடா குடுத்தா நல்லது. ஒரு அஞ்சு நிமிஷம் இரு. உனக்கும் தர்றேன். குடிச்சிப் பாரு."

"சரிப்பா... ஏதோ பண்ணு"- ராதா அமைதியானாள்.

விவேக், தேநீர் தயாரிக்க சமையல் அறைக்கு விரைந்தான்.

நந்திதா படுக்கை அறைக்குச் சென்று, சுடிதாரை களைந்துவிட்டு, இரவு உடையில் வந்தாள்.

அதற்குள் விவேக் மூன்று தம்ளர்களில் தேநீருடன் வரவேற்பு அறைக்கு வந்தான்.

"அம்மா... இந்தா. நந்திதா இதை பிடி."

இருவரும் தேநீர் தம்ளர்களை எடுத்துக்கொண்டனர்.

நந்திதா சூடாய் ஒரு வாய் பருகினாள்.

"ஏய்... விவேக்! எப்படித் தெரியுமா இருக்கு. சூப்பர். நன்றிடா."

"நமக்குள்ள என்ன நன்றி. கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக்க. தலைவலி சரியாயிடும்."

ராதா அவர்கள் பேசுவதை அமைதியாய் கேட்டுக்கொண்டிருந்தாள்.

விவேக் கொடுத்த தேநீரை அவளும் அருந்தினாள்.

"விவேக்."

"ம்... என்னம்மா?"

"இரவு 'டிபன்' என்ன பண்ண...? தோசை மாவு இருக்கு. இல்ல, சப்பாத்தி பண்ணட்டுமா? மணி எட்டாகப் போகுது."

நந்திதா இடைமறித்தாள்.

"அம்மா."

"என்ன?"

"நீங்க டி.வி. பார்த்துட்டு இருங்க. அரை மணி நேரத்துல சப்பாத்தி தயார் பண்ணிடுறேன்."

"நீ இப்பத்தானே வேலையில இருந்து வந்திருக்க. அதுவும் தலைவலி வேற. நீ ஓய்வெடுத்துக்க. நான் பார்த்துக்கறேன்."

"அம்மா... விவேக் அன்பா கொடுத்த டீயில உடம்புல ஒரு சுறுசுறுப்பு வந்துடுச்சு."

விவேக் சிரித்தான். நந்திதா தொடர்ந்தாள்.

"ஆபீசுல ஆயிரம் உழைச்சாலும், பெண்கள் வீட்டுக்கு வந்து சமையல் பண்ணி, வீட்டுக்காரர்– குழந்தைகளுக்கு உணவு பரிமாறினா அது தனி சுகம்... சந்தோஷம்தானே! அதுவும் சமையல் நல்லா இருக்குன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டா, பட்ட சிரமமெல்லாம் பறந்து போயிடுமில்ல?"

நந்திதாவின் வார்த்தைகளுக்கு ராதா 'ஆம்' என்று



தலையாட்டினாள்.

நந்திதா சாதாரணமாய் சொன்ன ஒவ்வொரு சொல்லும் ராதாவை வாட்டியது

"அம்மா!"

"ம்..."

"நேத்து ஆசையா மருதாணி வாங்கிட்டு வந்தேன். எங்க வச்சேன்னு தெரியலைம்மா! மறந்து போச்சு."

"டி.வி. பக்கத்துல மேசை மேல இருக்கு."

"நன்றிம்மா... ஞாபகப்படுத்தினதுக்கு. இன்னிக்கு ராத்திரி விவேக் என் கை– கால்ல போட்டு விடுறேன்னு சொல்லி இருக்கான். அதுவும் கையில புதுப்புது 'டிசைன்' போடுவானாம். இதெல்லாம் எங்க இருந்து கத்துக்கிட்டான்?"– நந்திதா கேட்டாள்.

"எங்கேயும் கத்துக்கல"– ராதா விழித்தபடி பதில் சொன்னாள்.

"ஓ... அப்ப அன்பு இருந்தா எல்லாம் தானாக வந்துடும்போல இருக்கே"– சொன்ன நந்திதா, சமையல் அறை நோக்கி இரவு உணவு தயார் செய்ய நடந்தாள்.

விவேக் அவளுக்கு உதவ... பின்தொடர்ந்தான்.

ராதா தொலைக்காட்சியில் ஏதோ ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தாள். ஆனால், மனம் அதில் லயிக்கவில்லை. அவளுக்கு நந்திதா–விவேக் ஞாபகம்தான் வந்தது!

'இருவரும் எவ்வளவு அன்பா– ஆசையா இருக்கிறாங்க. ஆனால் நானும், ரவியும்? கல்யாணமானது முதல் எங்களுக்கிடையே ஒரு நாள்கூட உண்மையான அன்பான பேச்சுப் பரிமாற்றம் இருந்ததில்லையே! அதற்கு என்ன காரணம்? யார் மீது தவறு?

நான் வேலையில் இருந்து சோர்வாய் வந்தபோது, அதனைப் புரிந்துகொண்டு என்னிடம் அன்பாக நடந்துகொள்ளாத ரவி மீது தவறா? இல்லை... 'நானும்தான் வேலைக்குப் போகிறேன்' என்று சமைக்க மறுத்த என் மீது தப்பா? வீட்டில் வேலை செய்வதை, 'நான் என்ன அடிமையா?' எனக் கேட்டு சண்டை போட்டேனே...

ஆனால், விவேக்... என் மகன்தான்! மனைவியை எப்படி அனுசரணையாய் கவனித்துக்கொள்கிறான்? நந்திதாவும் அவனிடம் எப்படி அன்பாய் பழகுகிறாள்? ஒருவருக்கொருவர் எப்படி விட்டுக் கொடுத்துப் போகிறார்கள்?

ரவிக்கு கணவன் என்ற மரியாதையைக் கொடுக்காமல்,

எதற்கெடுத்தாலும் எரிந்து எரிந்து விழுந்தேனே? எவ்வளவு பெரிய குற்றம்!

நந்திதா, விவேக்கைவிட ஐந்தாயிரம் அதிகம் சம்பாதிக்கிறாள். ஆனாலும், அவளிடம் கர்வம் துளிகூட இல்லையே? பக்குவம் இல்லாமல் நான் என் வாழ்க்கையை இழந்துவிட்டேனா?'

ராதாவின் கண்களில் கண்ணீர்!

சமையல் அறைக்குள் நந்திதாவும்– விவேக்கும் சிரித்து சிரித்து பேசும் சத்தம், தான் அவசரப்பட்டு எப்படிப்பட்ட தவறை செய்துவிட்டோம் என்பதை உணர்த்தியது.

## 22

**கா**லை பத்து மணி... விவேக், அலுவலகத்தில் இருந்தான்.

செல்பேசியின் அழைப்பு ஒலியைக் கேட்டதும் ஆசையாய், அவசரமாய் எடுத்தான்.

“ஹலோ... விவேக் பேசறேன்.”

“எப்படிண்ணா இருக்கே?”– உஷா கேட்டாள்.

“நல்லா இருக்கேன்.”

“நந்திதா! அம்மா நலமா?”

“எல்லாரும் நல்லா இருக்காங்க. உனக்கு உணவு, இடவசதி எப்படி?”

“ஒண்ணுமே பிரச்சினை இல்ல. வீட்ல இருக்கிற மாதிரியே இருக்கு.”

“ரொம்ப மகிழ்ச்சி. நீ என் கல்யாணத்துல கலந்துக்க முடியலையேன்னு ஒரு வருத்தம் இருந்துகிட்டே இருக்கு.”

“என்னண்ணா பண்றது? எனக்கு அமெரிக்கா போகணும்னு ஆசையோ, கனவோ கிடையாது. சில பேர் அதிர்ஷ்டம்கிறாங்க. பல பேர் திறமைங்கிறாங்க. எது எப்படி இருந்தாலும் என்னுடைய ஆசிரியர்கள் எல்லாம், ‘இந்த மாதிரி ஒரு நல்ல ‘ஸ்காலர்ஷிப்’போடு அமெரிக்காவுல எல்லாருக்கும் படிப்பு கிடைக்காது. உனக்கு கிடைச்சிருக்கு. இந்த சந்தர்ப்பத்தை விட்டுடாதே’ன்னு சொன்னாங்க.”



“ஏன்...? நானும் அதையேதான் சொன்னேன்.”

“ஆமாண்ணா.”

“இப்ப... அங்க மணி என்ன?”– விவேக் தொடர்ந்து கேட்டான்.

“ராத்திரி பத்து.”

“ஓ...”

“அண்ணா.”

“ம்...”

“முன்னாடி நாம ரெண்டு பேரும் அடிக்கடி சந்திப்போம். இப்ப முடியலையேன்னு வருத்தமா இருக்கு.”

“எனக்கும்தான் உஷா. என்ன பண்றது... இந்தியாவுல இருக்கிறப்ப நாம தைரியமா சந்திக்க முடிஞ்சதா? கோர்ட்ல இவங்க சுமூகமா பிரிஞ்சு... நீ அப்பாகிட்டேயும், நான் அம்மாகிட்டேயும் வளர்றதா முடிவாச்சு. மாசம் ஒரு தடவை ஞாயிற்றுக்கிழமை, நாம சந்திக்கலாம்னு ஒரு தீர்மானம்.

ஆனா என்னாச்சு... மாசம் ஒருவாட்டி சந்திக்கிறபோதும், நம்ம அப்பா– அம்மா சண்டை போட்டுப்பாங்க. கொஞ்சம் கொஞ்சமா அந்த சந்திப்பும் நின்னு போச்சு. அப்புறமா நானும், நீயும் அவங்களுக்குத் தெரியாம சந்திக்க வேண்டிய நிலைமை வந்துடுச்சு. சரி... நீ கவலைப்படாம இரு. நல்லா படி. அநேகமா என் கம்பெனி மூலமா நானும் அமெரிக்கா வர வாய்ப்பு இருக்கு. பார்க்கலாம்.”

“ஐ... அண்ணா! கேக்கவே சந்தோஷமா இருக்கு. சீக்கிரம் அம்மா, நீ, அண்ணி எல்லாரும் வந்துடுங்க.”

உஷாவின் அன்பை நினைத்து நெகிழ்ந்தான்.

“அண்ணா... போனை வச்சுடட்டுமா?”

“சரிம்மா...” – வைத்தான்.

## 23

**ஞா**யிற்றுக்கிழமை... வீட்டு வரவேற்பு அறை.

சோபாவில் உட்கார்ந்து மடிக்கணினியில் அலுவலகப் பணியைப் பார்த்துக்கொண்டிருந்த விவேக், ஒரு குறிப்பிட்ட கடிதத்தை

படித்ததும் உற்சாகமானான்.

"அம்மா!"– உரக்க கத்திக் கூப்பிட்டான்.

"என்னடா?"– சமையல் அறையில் இருந்தே ராதா கேட்டாள்.

"நந்திதா எங்க?"

"அவளும் என்கூட சமையல் அறையிலதான் இருக்கா."

"அப்படியா? நீங்க ரெண்டு பேரும் சீக்கிரமா இங்க வாங்க... அவசரம்."

திரும்பவும் பலமாக குரல் கொடுத்தான். நந்திதாவும், ராதாவும் அவன் இருந்த இடத்துக்கு ஓடி வந்தார்கள்.

"என்னடா ஆச்சு?"– ராதா பதற்றத்தோடு கேட்டாள்.

"முதல்ல ஆளுக்கொரு கை கொடுத்து என்னை வாழ்த்துங்க."

"எதுக்கு விவேக்?"– கேட்ட நந்திதா தனது வலது கையை நீட்டினாள். ராதாவும் கை நீட்டினாள்.

இருவரது கையைப் பற்றியவன், ஒரு முறை உற்சாகமாய் பார்த்தான்.

"அம்மா... கம்பெனியில என்னை அமெரிக்காவுக்கு அனுப்ப தேர்ந்தெடுத்து,'விசா'வும் வாங்கிட்டாங்க. புறப்பட வேண்டியதுதான். இப்பத்தான் செய்தி வந்தது!"

"ஓ... வாழ்த்துகள்"– நந்திதா குதித்தாள்.

"எத்தனை வருஷம்டா அமெரிக்காவுல இருக்கணும்?"– ராதா கவலையோடு கேட்டாள்.

"எத்தனை வருஷமா? நிரந்தரமா அங்கதான் இருக்கணும். கொஞ்ச நாளைக்கு 'விசா'வை நீடிச்சு, நீடிச்சு கொடுப்பாங்க. அப்புறம் அப்படியே இருக்க வேண்டியதுதான்"– மகிழ்ச்சி பிடிபடாமல் பேசினான்.

"நிஜமாவா சொல்ற?"– சோகம் இழையோட கேட்டாள்.

"ஏம்மா... உனக்கு குரல் இப்படி கீழ இறங்குது! நல்ல விஷயம்தானே? நான் போய் கொஞ்ச நாள்ல, நீ– நந்திதா அங்க வர வேண்டியதுதான்."

"எனக்கு இன்னும் நாலு வருச 'சர்வீஸ்' இருக்கேடா?"



"ம்... சரி. முதல்ல நந்திதா வந்துடுவா. அப்புறமா நீ வா."

"டேய்... அவ எப்படி வருவா? நல்ல சம்பளத்துல இருக்காளேடா."

ராதா சொன்னதும், நந்திதா குறுக்கிட்டாள்.

"என்னம்மா சொல்றீங்க? என் வேலை, சம்பளமா முக்கியம்? கணவனோடு காலம்பூரா சேர்ந்து இருக்கிறதுதானே முக்கியம்! விவேக், அமெரிக்கா கிளம்பிட்டா... அடுத்ததா 'விசா' வாங்க நான் கிளம்பிட மாட்டேன்?"

மனைவி சொன்னதும், மகிழ்ச்சியில் விவேக் சிரித்தான்.

ராதாவின் இதயம் சில விநாடிகள் நின்று, திரும்ப இயங்க ஆரம்பித்தது.

'வாழ்க்கையில் கணவன், குடும்பம்தான் முக்கியம் என்று வயதில் குறைந்த நந்திதா நினைக்கிறாள்.'

'ஆனால் நான்?'

விவேக் தன்னைப் பிரிந்து போகப்போகிறான் என்ற சோகத்தையும், வாழ்க்கையில் தவறுதலாய் ரவியை பிரிந்துவிட்டோமே என்ற துக்கத்தையும் நெஞ்சுக்குள் அடக்கிக்கொண்டு,

"ரொம்ப மகிழ்ச்சியா இருக்குடா. நீ இன்னும் பெரிய ஆளா வரணும்" என்று மகனை ஆசிர்வதித்தாள்.

"நிச்சயமா உன் ஆசைப்படி வருவேன்ம்மா"– சொன்னவன், காலில் விழுந்து வணங்கினான்.

"ஏய்... என்கிட்ட ஆசிர்வாதம் வாங்கமாட்டியா?"– நந்திதா கேட்க, விவேக்கிடம் சிரிப்பு.

## 24

ராதா போன் செய்ய, அமெரிக்காவில் இருந்த விவேக் எடுத்தான்.

விஷயத்தைச் சொன்னாள்.

அதனைக் கேட்டவன் அதிர்ந்தான்.

"என்னம்மா சொல்ற? என் மேல ஏதாவது கோபமா?"

"இல்லடா... எனக்கு உன் மேலேயோ, இல்லை வேற யார் மேலேயோ எந்தவிதமான கோபமும் இல்ல. எனக்கும் வயசாச்சு. அமெரிக்கா கிளம்பி வந்தா உனக்கும், நந்திதாவுக்கும் பாரமாத்தான் இருப்பேன். இங்கேயே புதுசா திறந்திருக்கிற ஒரு முதியோர் இல்லத்தைப் பார்த்துட்டு வந்திருக்கேன். உணவு, இருப்பிடம், பாதுகாப்பு எல்லாமே நல்லா இருக்குன்னு நிறைய பேர் சொல்றாங்க. நம்மகிட்ட செல்போன் இருக்கு... பேசிக்கலாம். கம்ப்யூட்டர் வேற. இப்பவெல்லாம் முகத்தைப் பார்த்துக்கிட்டே பேசலாம். அப்புறமென்ன? நீ நந்திதாவோடு சந்தோஷமா இருப்பா. என்னைப் பத்தி எந்தக் கவலையும்பட்டாதே."

"ஏம்மா... இப்படியொரு முடிவு? வேணும்ன்னா அமெரிக்காவுல இருந்து நான் வந்துடட்டுமா?"

"வேண்டாம் விவேக். உனக்கு சின்ன வயசு. வாழ்க்கையில முன்னேற வேண்டிய கட்டம் இது. அதுக்கு பக்கபலமா நந்திதா இருப்பா. முடிகிறபோது என்னை வந்து பாரு."

விவேக்கை சமாதானப்படுத்தியவள்- கிளம்ப ஆயத்தமானாள்.

'இனிமே நான் ஒரு நடைப்பிணம். கணவனா... குழந்தைகளா? யாரும் இல்ல. உடம்புல உயிர் இருக்கிறதுக்காக வாழ்ந்தாகணும்.'

ராதாவுக்கு வாழ்க்கையில் எந்த பிடிமானமும் இல்லாதது தெரிந்தது.

அத்தனை பொருட்களையும் யார்- யாருக்குத் தேவையோ அவரவர்களுக்கு இலவசமாகக் கொடுத்தாள்.

வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு, தான் தேர்வு செய்திருந்த முதியோர் இல்லத்துக்கு ஒரே ஒரு சூட்கேசுடன் போனாள்.

ஆட்டோவில் இருந்து இறங்கியதும் அந்த இல்லத்தை ஒரு முறைப் பார்த்தாள்.

'இனிமேல் இதுதான் நான் இருக்கப்போகும் வீடு!'

வரவேற்பு அறைக்குள் நுழைந்தாள். அங்கிருந்த உதவியாளர் இன்முகத்துடன் வரவேற்று உட்காரச் சொன்னார்.

ராதா, தான் ஏற்கெனவே வந்து விசாரித்துவிட்டுப் போனதை



ஞாபகப்படுத்தினாள்.

"ஞாபகம் இருக்கு மேடம்"- சொன்னவர், இல்லத்தில் சேருவதற்கான விண்ணப்பத்தைக் கொடுத்தார்.

அதை பூர்த்தி செய்துவிட்டு, கொண்டுவந்திருந்த காசோலையை இணைத்தாள். உதவியாளர் வாங்கினார்.

"மேடம்."

"சொல்லுங்க."

"அன்னிக்கு நீங்க வந்து விசாரிச்சுட்டுப் போனப்ப, இந்த இல்லத்தை நடத்தற பெரியவரை நீங்க பார்க்கலை. ஒரு அஞ்சு நிமிஷம் இருங்க. அவரைக் கூட்டிக்கிட்டு வந்துடறேன்."

ராதா காத்திருந்தாள்.

ஐந்தாவது நிமிடம்!

"வாங்கம்மா" என்று அன்பான குரலில் வரவேற்க, ராதா பார்த்தாள்.

நெற்றி நிறைய விபூதி. கதர் சட்டை- வேட்டி என மிக சாதாரணமாய். ஆனால், ஒளியுடன் இருந்தார். "நான்... எனக்கு..." என்று வார்த்தைகளை இழுத்த ராதா, மெதுவாய் நாற்காலியில் இருந்து எழுந்தாள்.

"உங்களைப் பத்தின எல்லா விஷயமும் எனக்குத் தெரியும். வாழ்க்கைன்னா அப்படித்தான்! என் வாழ்க்கையிலும் சோகம் இருக்கு. வேலையில் இருந்து ஓய்வு பெற்றப்ப- யோசிச்சுப்பார்த்தா, எனக்குன்னு யாருமே இல்லேன்னு தோணுச்சு. ஆதரவா அன்போடு இருந்த ஒரே பொண்ணும் வெளிநாடு போயிட்டா. உறவுகள் இல்லாம வாழ்ந்த எனக்கு உறவு தேவைப்பட்டது. அப்படி ஆரம்பிச்சதுதான் இந்த முதியோர் இல்லம். இங்க இருக்கிறவங்க எல்லாருமே எனக்கு உறவுக்காரங்கதான்."

அவர் பேசப் பேச அவளுக்கு கண்களில் கண்ணீர் வழிந்தது!

"ஏன் அழுறீங்க... எல்லாரையும் பிரிஞ்சு இங்க வந்துட்டோமேன்னு வருத்தப்படுறீங்களா? ம்... கவலைப்படாதீங்க. நாளாக, நாளாக எல்லாம் சரியாயிடும். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட அறை எண் மூன்று. இந்தாங்க சாவி."






கைகள் நடுங்க தனது அறையின் சாவியை வாங்கியவள், "நீங்க எங்க தங்கி இருக்கீங்க?" என்றாள்.

"இங்கேயேதான். அறை என் ஆறுல இருக்கேன். எதுவா இருந்தாலும், இருபத்து நாலு மணி நேரமும் என்னைக் கூப்பிடலாம்."

"நான்... நான்... உங்கக்கூடவே தங்கலாமா?"– கேட்ட ராதா கண்ணீர் வழிய வாய்விட்டு அழுதாள்.

"என்னை... என்னை... மன்னிச்சிடுங்க"– கதறினாள்.

அவளிடம் இருந்து கண்ணீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடியது!

ரவி மெள்ள அருகில் வந்தான்.

"எது உன் மனசை மாற்றிச்சோ தெரியல. ஆனா, தப்பு உன் மேல மட்டுமில்ல... அந்த வயசுல நான்கூட முதிர்ச்சி இல்லாம நடந்துக்கிட்டேனோன்னு தோணுது. விட்டுக் கொடுத்துப் போயிருக்கலாம். திமிரா இருந்துட்டேன். மனசுல பக்குவம் இல்ல. ஏதோ கோபம், சண்டை... நாம பிரிஞ்சுட்டோம். ஆனா, என்னிக்குமே நான் உன்னை வெறுக்கலை ராதா."

"என்னை... என்னை... ஏத்துப்பீங்களா?"– கண்ணீர் மல்க கேட்டாள்.

அப்படி கேட்டதும், இன்னும் நெருங்கி வந்தான்.

மனைவியின் கண்களை துடைத்துவிட்டான்.

"ராதா."

"ம்... சொல்லுங்க."

"நாம சட்டப்படி விவாகரத்து வாங்கி பிரிஞ்சிருக்கலாம். ஆனா, அன்புங்கிற மூன்றெழுத்து சக்தி, சட்டத்துக்கு அப்பாற்பட்டது. நீ இனி எப்பவும் என்கூடவே இருக்கலாம். இந்த முதியோர் இல்லத்துல

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்,
ஆசிரியர்: ர.பாஸ்கரன், அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம்.
ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
தொலைபேசி: 25324771 FAX: 044-26426884
E-MAIL:
admin@raniweekly.in
raniweekly@vsnl.net

இருக்கிறவங்க எல்லாருமே நம்ம சொந்தபந்தங்கள்... சரியா?"

மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள்.

அவன் அன்பாய் கையைப் பிடித்தான்.

"கிட்டத்தட்ட இருபத்தஞ்சு வருஷமா மகிழ்ச்சியா வாழ்ந்திருக்க வேண்டிய வாழ்க்கையை நாம யோசிக்காம, விட்டுக் கொடுத்துப் போகாம இழந்துட்டோம். இனிமேலாவது... இனிமேலாவது வாழப்போற நாட்கள்ல அன்பா, ஒத்துமையா பாசத்தோடு வாழணுங்க."

ராதாவுக்கு வார்த்தைகள் வராமல் நாக்கு தழுதழுத்தது!

அது பொது இடம் என்றுகூட பாராமல், ரவியின் நெஞ்சில் சாய்ந்தாள்.

அவளுக்கு வெகுநாட்களாக வாட்டிய மனபாரம் தன்னைவிட்டு இறங்கியது போல நிம்மதியாக இருந்தது.

அவளை அணைத்த அடுத்த நிமிடம், ரவியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

ராதா துடைத்தாள்.

"ஏய்?"

"ம்..."

"நாம ரெண்டு பேரும் வாழ்க்கையில திரும்ப சேர்ந்துட்டோம்ங்கிற மகிழ்ச்சியான விஷயத்தை பிள்ளைகளுக்கு போன் பண்ணி சொல்லலாமா! அவங்க ரொம்ப மகிழ்ச்சி அடைவாங்க இல்லையா?"

"ஆமாங்க."—கண்ணீர் மல்க சொன்னாள்.

"நீ உஷாவுக்கு போன் பண்ணு. அம்மாகூட பேசினா அவ ரொம்ப ஆனந்தப்படுவா. விவேக்குக்கு நான் போன் பண்றேன். அப்பா பேசினா அவன் சந்தோஷப்படுவான். என்ன... நான் சொல்றது சரியா?"

ராதா உடனே செல்பேசியை எடுத்தாள்.

பிரிந்த குடும்பம்— முதியோர் இல்லத்தால் ஒன்று சேர்ந்தது!

**(முற்றும்)**